


www.onlineuthayan.com

28 பக்கங்கள் சுடர் 28 கதிர் 031 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 12 வியாழக்கிழமை (27/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00

## கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களில் கைதானவர்கள்

# 48 பேருக்கும் புனர்வாழ்வு

கொழும்பு, டிசெம்பர் 27

யாழ். குடாநாட்டில் அண்மையில் திடீரென மேற்கொள்ளப்பட்ட தேடுதல் வேட்டையின்போது பயங்கரவாத விசாரணைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட அனைவரையும் விசேட புனர்வாழ்வுக்கு உட்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என 'உதயன்' அறிகின்றான்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இதுவரை 48 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாவுக்கு இவர்கள் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு துருவித் துருவிப் பல கோணங்களில் விசாரிக்கப்பட்டுள்ளனர் என்றும், அதன் பின்னர் அவர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் பிரகாரமே விசேட புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்படவுள்ளனர் என்றும் அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவசரகாலச் சட்டத்தை நீக்கும் போது சட்டபூர்வமற்ற முறையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்

பார்க்க பக்கம் 4

## ஹலால் வரிப்பணம் அல்-குவைதாவுக்கு

சந்தேகம் கிளப்புகிறது தேசப்பற்றுள்ள இயக்கம்

கொழும்பு, டிசெ.27

மதவாதத்தை அடிப்படையாகக் கொண்ட 'ஹலால்' உத்தரவாத சான்றிதழை வழங்குவதற்குப் பெறப்படும் பெருந்தொகையான நிதி ஜிஹாத் மற்றும் அல்-குவைதா போன்ற அமைப்புகளுக்குப் பகிரப்படுகின்றதா என சந்தேகம் எழுந்துள்ளது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிக்கிறது. ஹலால் உத்தரவாதச் சான்றிதழுக்கு எதிராக பிக்குகள் முன்வைக்கும் கருத்துகள் சரியானவையே என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

ஹலால் சான்றிதழுடன் கூடிய உணவுப் பொருள்களைப்புறக்கணிக்குமாறு கோரி பிக்குகள் குழுவொன்று பேரணிகளை நடத்திவருகின்றது. ஜாதிக ஹெல உறுமயவின் உறுப்பினர்களும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

முஸ்லிம்கள் மீதான பொறாமையின் வெளிப்பாடே பிக்குகளின் 'ஹலால்' எதிர்ப்புப்

பார்க்க பக்கம் 4

## முல்லையில் நேற்றுப் பறந்தது புலிக்கொடி

முல்லைத்தீவு, டிசெ.27

முல்லைத்தீவு நகரிலுள்ள ஆழிப்பேரலை நினைவாலயத்தின் முன்பாக வுள்ள பொதுநோக்கு மண்டபத்தின் தண்ணீர்த் தாங்கியின் உச்சியில் நேற்றுத் திடீரெனப் பறந்தது புலிக்கொடி.

இதனால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலையால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு நேற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

முல்லைத்தீவில் பெரும் எண்ணிக்கையானோர் ஆழிப்பேரலையால் காவு கொள்ளப்பட்டமையை நினைவுகூர்ந்து நகரில் ஆழிப்பேரலை நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலேயே அஞ்சலி நிகழ்வுகள் ஒழுங்கு

பார்க்க பக்கம் 4

## இனவாதப் பரப்புரைகளை கோத்தா நிறுத்த வேண்டும்

### மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.27

கொழும்பு உள்ளிட்ட பல இடங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களைக் குறிவைத்து நடத்தும் இனவாதப் பரப்புரைகளையும்- செயற்பாடுகளையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உடன் நிறுத்தவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் கூட்டணி நேற்று கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பார்க்க பக்கம் 4

## வன்முறைக்கு வழி திறக்கும் அரசின் சதியில் சிக்காதீர்கள்

### தமிழ் இளைஞர்களிடம் கூட்டமைப்பு கோரிக்கை

கொழும்பு, டிசெ.27

''தமிழ் இளைஞர்களை மிகவும் திட்டமிட்ட முறையில் வன்முறையில்தள்ளி அவர்களைப் பயங்கரவாதிகள் எனக் காட்டுவதற்கு இந்த அரசு முயல்கிறது. இளைஞர்கள் எவரும் இந்தச் சதி வலையில் சிக்கி வன்முறையில் இறங்கிவிடக்கூடாது. நாம் மேற்கொள்ளும் அறவழிப் போராட்டத்தில் மாத்திரமே இளைஞர்கள் இணைய வேண்டும்''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று கொழும்பில் முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணி நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்

பார்க்க பக்கம் 4



ஆழிப்பேரலை அனர்த்தத்தின் 8 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்று வடமராட்சியில் நினைவுத்தூபிகள் முன் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது உயிர்பிரிப்புக்களை இழந்த உறவுகள் நினைவுத்தூபிகளுக்கு விளக்கேற்றி, மலர் தூவி அழுது புலம்பினர்.

## ஆழிப்பேரலை அள்ளிய உறவுகளுக்கு உடுத்துறையில் உணர்வுபூர்வ அஞ்சலி

வடமராட்சி,டிசெ.27

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் உயிர்நீத்த ஆயிரத்துக்கும் அதிகமான உறவுகளுக்கு நேற்று புதன்கிழமை வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உற்றார், உறவினர் கண்ணீர்மல்கி ,அழுது, புரண்டு அஞ்சலி செலுத்தினர். உறவுகளின் கதறலால் உடுத்துறை ஆழிப் பேரலை நினைவிடம் பெரும் சோகத்தில் மிதந்தது.

ஆழிப் பேரலையில் உயிர் இழந்த ஆயிரத்து 38 பேரை ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட உடுத்துறை ஆழிப் பேரலை நினைவாலயத்தில் கிராம சேவையாளர் எஸ்.தவராசா தலைமையில் அஞ்சலி நிகழ்வு நேற்றுக் காலை இடம் பெற்றது.

55 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் விஜேசிங்க

பார்க்க பக்கம் 4

## பேரர்களுக்கு பிடித்த உணவு படைத்துக் கதறிய பாட்டி

வடமராட்சி, டிசெ. 27

ஆழிப்பேரலையில் அள்ளுண்ட தனது நான்கு பேரப்பிள்ளைகளுக்கு அதிகம் பிடித்த புழுக்கொடியல் மாவைப் படைத்து அழுதுபுலம்பிய பேர்த்தியாரான வயோதிபப் பெண்ணின் துன்பதுயரம் அனைவரையும் நிலைகுலைய வைத்தது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை உடுத்துறையில் நடைபெற்றது.

2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி தனது மகளின் பிள்ளைகளான நான்கு பேரப்பிள்ளைகளுக்கும் புழுக்கொடியல் மாவைத் தேங்காய், சீனியுடன் குழைத்துக் கொடுப்பதற்காக, சீனி வாங்குவதற்காகப் பேர்த்தியார் கடைக்குச் சென்றிருந்தார். இதன்போது திடீரென ஏற்பட்ட ஆழிப் பேரலை நான்கு பேரப்பிள்ளைகளையும் அள்ளிச்சென்றுவிட்டது. அவர் திரும்பிவந்து பார்த்தபோது ஆசைப்பேரப்

பார்க்க பக்கம் 4

## கூட்டமைப்பு எம்.பிக்கள் மலேசியா பயணம்

கொழும்பு, டிசெ.27

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று மாலை மலேசியாவுக்குப் பயணமாகினர்.

மலேசியாவில் நடைபெறவுள்ள உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஐவர்

பார்க்க பக்கம் 4

# இயந்திரத்தில் சிக்கிய வினாத்தாளை கிழித்து நண்பனிடம் கொடுத்தேன்

### கைது செய்யப்பட்ட ஊழியர் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.27

''வினாத்தாள் அச்சிடப்பட்டுக்கொண்டிருந்த போது இயந்திரத்தில் சிக்கிக்கொண்ட ஒரு தாளை அதிலிருந்து வெளியே எடுக்க முயற்சித்தபோது அது இரண்டாகக் கிழிந்துவிட்டது. இதில் சில வினாக்கள் இருந்தன. அதனை நண்பரிடம் கொடுத்தேன்'' என்று அச்சு இயந்திர இயக்குநராகப் பரீட்சைத் திணைக்களத்தில் கடமையாற்றிய சந்[illegible] வாக்குமூலம் அளித்துள்ளார்.

''இந்த முறை சாதாரண தர வினாத்தாள்கள் அச்சடிப்பது சம்பந்தமான வேலைகளில் நானும் கலந்து கொண்டிருந்தேன். இந்த வினாத்தாள்கள் பரீட்சைத் திணைக்களத்தினுள் அமைந்துள்ள அச்சகத்திலேயே அச்சடிக்கப்பட்டன. விஞ்ஞானம் பகுதி I வினாத்தாள்களை அச்சடித்துக் கொண்டிருக்கும் போது கோளாறு காரணமாக இயந்திரம் நின்றுவிட்டது. அதில் சிக்கியிருந்த வினாத்தாள்களை எடுக்க முயற்சித்த போது அதிலொன்று இரண்டாகக் கிழிந்து எனது கைக்கு வந்தது.

''இதனை எனது நண்பனான ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிக்கு அறிவித்தேன். அவர் என்னிடமிருந்து இதைப்

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழிப் பேரலையில் உயிர் நீத்த உறவுகளுக்காக...



















# இலங்கை அணியை விலக்கி வையுங்கள் ஆஸி. ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்து




மெல்பேர்ண்,டிசெ.27

சிம்பாப்வே அணியைப் போன்று இலங்கைக் கிரிக்கெட் அணியும் அனைத்துலகப் போட்டிகளில் இருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும் என்று கோரி ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

நேற்று மெல்பேர்ண் துடுப்பாட்ட மைதானத்தில் இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி ஆரம்பமாகியுள்ள நிலையிலேயே, மைதானத்துக்கு வெளியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழுக்கைக் கழுவிக் கொள்வதற்கு இந்த கிரிக்கெட் போட்டி வாய்ப்பு வழங்குகிறது என போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டில், ஆஸ்திரேலிய அணி சிம்பாப்பே பயணத்தை நிறுத்தியபோது, சிம்பாப்பேயின் சர்வாதிகாரி றொபேட் முகாபேக்கு துடுப்பாட்டப்போட்டி பிராணவாயுவை வழங்குவதாக ஜோன் ஹவார்ட் குறிப்பிட்டிருந்தார்.

சிம்பாப்வேயைப் போன்றே இலங்கையிலும் இராணுவ சர்வாதிகாரம் உள்ளது.

போரின் பின்னர் வெளியான ஐ.நா. அறிக்கை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக ராஜபக்ஷ அரசு சுதந்திரமான முறையில் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளது.

ஆனால், அதை இலங்கை ஜனாதிபதி நிராகரித்து விட்டார் என்று இந்தப் போராட்டத்தின் ஏற்பாட்டாளரான ட்ரீவோர் கிராண்ட் தெரிவித்துள்ளார்.

சுமார் 150 வரையிலான போராட்டக்காரர்கள் மைதானத்துக்கு வெளியே நின்று இலங்கையின் நிலைமைகளை எடுத்துச் சொல்லி உள்ளே செல்வது குறித்து சிந்தியுங்கள் என்று பரப்புரை செய்தனர்.

உலகின் ஏனைய துடுப்பாட்ட அணிகளைப் போலல்லாமல், இலங்கை அணி அரசியலுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டது என்றும் அவர்கள் கூறினர்.

இலங்கை ஜனாதிபதி தனது அழுக்கைக் கழுவிக் கொள்வதற்குத் துடுப்பாட்டத்தைப் பயன்படுத்துகிறார்.

தனது சொந்த நகரில் மைதானத்தை அமைத்து, அதற்கு தனது பெயரையும் சூட்டியுள்ளார் என்றும் ட்ரீவோர் கிராண்ட் கூறியுள்ளார்.

## மாற்றுவலுவுள்ளோர் 50 பேருக்கு பாதுகாப்பு நிதி வழுங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மாற்று ஆற்றலுள்ளோர் 34 பேருக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு நிதி அடுத்த வருடம் முதல் 50 பேருக்கு வழங்கப்படவுள்ளதாக சமூகசேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்று ஆற்றலுள்ளோருக்கான உதவிகள் பல வழங்கப்பட்டு வருகின்றன. அவர்கள் சுயமாக வாழ்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாற்று ஆற்றலுள்ளோருக்கு சமூக சேவைகள் அமைச்சினால் பாதுகாப்பு நிதியாக மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. முன்னர் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 7 பேருக்கு வழங்கப்பட்டுவந்த மாதாந்தக் கொடுப்பனவு பின்னர் 34 பேருக்கானதாக அதிகரிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு முதல் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மாற்று ஆற்றலுள்ள வருமானமற்ற 50 பேருக்கு இந்த 3 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் சுகுமார் கூறினார். (த-5)

## குடாநாட்டில் பரவலாக மழை

யாழ். குடாநாட்டில் நேற்றுப் பரவலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. வடக்கில் பல பகுதிகளிலும் கடும் மழையுடனான காலநிலை நிலவுகின்ற போதிலும் கடந்த சில நாள்களாக யாழ். குடாநாட்டில் மழை வீழ்ச்சி குறைந்த அளவிலேயே காணப்பட்டது. நேற்றிரவு கடும் மழை பெய்த அதேவேளை கடலும் கடும் கொந்தளிப்பாகக் காணப்பட்டது. இதனால் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அச்சநிலையில் காணப்பட்டனர். (ஐ-16)

# நான்கு எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளையும் மன்றில் முன்னிலையாகக் கோரிக்கை

### விடுத்தது முஸ்லிம் தமிழ்த் தேசிய முன்னணி

கொழும்பு,டிசெ.27

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் நான்குபேரும் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்டிருக்கும் அழைப்பாணையை ஏற்று ஜனவரி மாதம் மூன்றாம் திகதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என்று முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி நேற்றுக் கூறினார்.

முஸ்லிம்-தமிழ்த் தேசிய முன்னணி நேற்றுக் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதப் பிரசாரம் சிங்களக் குழுவால் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றது. எஸ்.எம்.எஸ். மற்றும் ஈமெயில் ஊடாகப் பிரசாரம் தீவிரப்படுத்தப்படுகிறது.

முஸ்லிம்களுக்கு எதிரான இந்தப் பிரசாரத்துக்கு அரசுதான் உதவி செய்கிறது என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

எந்தவொரு விகாரைக்கு அருகிலும் பள்ளிவாசல்கள் இருந்தால் அவற்றை உடைப்போம் என்று உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். திட்டமிட்ட அடிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாட்டை இந்த அரசு முன்னெடுக்கிறது.

பிரதம நீதியரசருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டிருக்கும் குற்றவியல் பிரேரணை அர்த்தமற்ற தொன்றாகும். அந்தப் பிரேரணையைக் கண்டு பிரதம நீதியரசர் ஓடிவிடுவார் என்று அரசு நினைத்தது. ஆனால் அவர் எதிர்த்து நிற்கிறார்.

இவரின் துணிச்சலைப் பார்த்து ஓய்வுபெற்ற பல நீதியரசர்கள், சட்டத்தரணிகள் ஆகியோர் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதியால் அண்மையில் நியமிக்கப்பட்ட 22 ஜனாதிபதி சட்டத்தரணிகள் கூட இந்தப் பிரேரணைக்கு ஆதரவில்லை. இப்பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை எவரும் விசாரணை செய்யமுடியாது என்று தெரிவுக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்த அறிக்கை மீது திருப்தியில்லை என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி, இந்த அறிக்கையை ஆராய்வதற்காகக் குழுவொன்றை நியமிக்கவுள்ளார் என்று தெரிவித்துள்ளார். இவ்வாறு செய்ய எந்த அரசமைப்பிலும் இடமில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் உறுப்பினர்களை ஆஜராகுமாறு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது. தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் நிச்சயம் அழைப்பாணையை மதித்து நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும். [illegible] உண்மை வெளியே வரும்.

# இடர்களில் இருந்து மீண்டெழும் வல்லமை தமிழருக்கு உண்டு

### வவுனியா நகரசபை பதில் தலைவர் ரதன்

வவுனியா, டிசெ.27

காலத்துக்குக் காலம் எமது தாயகத்தில் எத்தனையோ துயரமான நிகழ்வுகளை எமது இனம் சந்தித்தபோதிலும் 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அழிவையும் 2009 ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாதம் புரிந்த முள்ளிவாய்க்கால் பேரவலத்தையும் எமது இனம் மறக்கத் தயாரில்லை. இவ்வாறான இடர்களிலிருந்து மீண்டெழும் வல்லமை படைத்த இனமே தமிழினம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வவுனியா நகரசபையின் பதில் தலைவர் எம்.எம். ரதன் தெரிவித்தார்.

கடற்கோள் அனர்த்தம் காரணமாக உயிர்நீர்த்த மக்களின் 8ஆம் ஆண்டு நிகழ்வு பூந்தோட்டம் சுனாமி நினைவுத் தூபியில் நகரசபையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்றது. இதில் தலைமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர் நீர்த்த மக்களுக்காக விளக்கேற்றி மலர்மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ரதன் மேலும் தெரிவித்ததாவது:

2004 இல் ஏற்பட்ட கடல்கோள் பாதிப்பின் பின்னர் வெளிநாடுகள் இலங்கைக்கு பெரியளவில் நிதி உதவிகள், பொருளுதவிகள் புரிந்தன. ஆயினும் அந்த உதவிகள் அங்கு ஆட்சியில் இருந்த அரசினால் தமிழர்களின் தாயகப் பிரதேசத்தை சென்றடையாமல் தடுக்கப்பட்டன.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் எமது தாயகத்தில் நடப்பவையெல்லாம் அதர்ம வழி சார்ந்த விடயங்கள். திட்டமிட்ட காணி அபகரிப்புக்கள், புத்தர் சிலை நிறுவுதல், இறந்து போனவர்களுக்கு அஞ்சலி செலுத்த முடியாத நிலை, கைது செய்தல் எனப் பல அக்கிரமங்கள் தொடர்கின்றன.

2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் அரசுக்கு மிகப்பெரும் அதிர்ச்சிப்பொறி காத்திருக்கிறது. எமது மக்களின் துயரமான வாழ்வுக்கும் துன்பகரமான சூழல்களும் இல்லாமல் போக விடுதலை நோக்கிய பயணங்கள் சிறந்து விளங்கும் என நம்புகின்றோம்.

**2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் அரசுக்கு மிகப் பெரும் அதிர்ச்சிப் பொறி காத்திருக்கிறது**

இயற்கை அனர்த்தம் என்ற அடிப்படையில் 2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தமும் செயற்கை பேரவலம் என்ற அடிப்படையில் 2009 ஆம் ஆணடு முள்ளிவாய்க்கால் அவலமும் என்றும் தமிழர்களின் மனங்களில் மறக்க முடியாத சம்பவங்களே ஆகும். எனவே இவ்வாறான இடர்களிலிருந்து எம்மை நாமே ஆறுதல் படுத்தி புதிய பாதையில் புதிய சிந்தனையுடன் பயணிப்போம் - என்றார். (த).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டம் பெற்றால் மட்டும் போதாது சிறந்த சேவையையும் வழங்குக

## நியமனம் வழங்கும் நிகழ்வில் யாழ். அரச அதிபர்

யாழ்ப்பாணம், டிசெ.27

*வெறுமனே படித்துப் பட்டம் பெற்றால் மட்டும் போதாது. நாட்டுக்காக என்ன செய்யப் போகிறோம்? எமது சமூகத்துக்காக என்ன செய்யப் போகிறோம்? என்பதைத் தீர்மானிக்க வேண்டும். சிறந்த சேவையை வழங்க வேண்டும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இணைத்துக் கொள்ளப்படும் நீங்கள் கிராமங்கள் தோறும் தகவல்களைத் திரட்டும் முக்கிய பணியில் ஈடுபடப் போகின்றீர்கள். உங்களின் கைகளிலேயே பிரதேசத்தின் அபிவிருத்தி தங்கியுள்ளது.*



இவ்வாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

பட்டதாரிப் பயிலுநர்களில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 514 பேருக்கான இணைப்புக் கடிதம் வழங்கும் நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை ஆற்றும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:-

பட்டங்களைப் பெற்றுப் பட்டதாரியாக மட்டும் நின்றுவிடக் கூடாது. சமூகத்தின் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் செயற்பட வேண்டும். பெற்றுக் கொண்ட பட்டத்தை வைத்துக் கொண்டு நாட்டுக்காக செயற்பட வேண்டும். பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இணைக்கப்படும் நீங்கள் முக்கியமான பொறுப்பில் அமர்த்தப்பட போகின்றீர்கள். கிராமங்கள் தோறும் தரவுகளைச் சேகரிக்கும் பணி உங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தை உரிய முறையில் அபிவிருத்தியடையச் செய்ய வேண்டுமானால், சரியான தரவுகள் திரட்டப்பட வேண்டும். அந்த முக்கிய பொறுப்பு உங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டுக்காக, அரசுக்காக, சமூகத்துக்காக ஆற்றக்கூடிய கடமைகளில் நீங்களும் பங்காளிகள். பிரதேசத்தின் முழு வளர்ச்சிக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.

மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் தெரிவிக்கையில் தேவைப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாகப் பட்டதாரிகள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். இருப்பினும் சமூக சேவைகள் அமைச்சு, இந்து கலாசார அமைச்சு ஆகியவற்றுக்கு ஆளணி வெற்றிடங்கள் உருவாக்கப்பட்டு அவற்றுக்கும் பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்- என்றார்.

வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. குறிப்பாக விஞ்ஞான, ஆங்கிலம், கணினி ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்குப் பட்டதாரிகளை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். (த-5)

## மனநோயினால் பாதிப்புற்ற வயோதிபர்களுக்கு காப்பகம்

யாழ்ப்பாணம், டிசெ.27

கைதடி முதியோர் இல்லத்தில் மனநோயால் பாதிக்கப்பட்ட வயோதிபர்களைத் தனியாக வைத்துப் பராமரிப்பதற்கான காப்பகம் ஒன்றை அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.

**இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களில் 30 முதியவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.**

ஒருகோடி 20 லட்சம் ரூபா செலவில் இந்த காப்பகத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன என்று இல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். இந்தக் காப்பகத்தில் 10 விடுதிகள் அமைக்கப்படுகின்றன.

நவீன வசதிகளுடனும் உளநல மருத்துவத் துறையினரின் ஆலோசனையுடனும் இந்தக் காப்பகம் அமைக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறினார்.

இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்களில் 30 முதியவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளனர்.

இவர்கள் இந்தக் காப்பகத்தில் தனியாக வைத்துப் பராமரிக்கப்பட்டுப் பின்னர் சுகமடையும் பட்சத்தில் இல்லத்தின் ஏனைய விடுதிகளில் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

இந்தக் காப்பகத்தின் கட்டுமானப் பணிகள் இன்னும் ஒரு மாதத்தில் நிறைவடையலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## ஆழிப் பேரலை நினைவு நேற்று துர்க்காபுரத்தில்



வலி.வடக்கு, டிசெ.27

சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் 8 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் தெல்லிப்பழை துர்க்காபுரம் கலாபூஷணம் ஏ.வி.ஆனந்தன் சிற்பக் கூடத்தில், மல்லாகம் லயன்ஸ் கழகத் தலைவர் விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக விளக்கை திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட்தந்தை கலாநிதி மரியசேவியர் அடிகள், இந்துமதக் குருக்கள் பிரம்மஸ்ரீ கி.கணேசமூர்த்தி சர்மா, மருதனார்மடம் இறையியற் கல்லூரி போதகர் ஆனந்தன், அமெரிக்கன் மிஷன் தலைவர் போதகர் இனோட் புனிதராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் என்.சண்முகலிங்கன், துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் உட்பட மற்றும் பலர் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆழிப்பேரலை நிகழ்வுகளை சித்திரிக்கும் சிற்பத்தின் முன்னால் பொதுமக்கள் அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தி வழிபாட்டில் ஈடுபட்டதுடன் அஞ்சலி நிகழ்வுகளும் இடம்பெற்றன. (த-86)

## தவறி விழுந்து இளைஞர் காயம்

தென்மராட்சி, டிசெ.27

வீட்டுக்குக் கொங்கிறீற் கல்வை இடும் வேலையில் மும்முரமாக ஈடுபட்ட இளைஞர் சார மரத்திலிருந்து சறுக்கிக் கற்குவியலுக்கு மேல் வீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கொடிகாமத்தில் இடம்பெற்றது. கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த துரைராசா பிரசாந் (வயது-22) என்னும் இளைஞர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் நீரிழிவுப் பரிசோதனை முகாம்

கைதடி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலையத்தினர் நடத்தும் நீரிழிவு மருத்துவப் பரிசோதனை முகாம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கைதடி ஸ்ரீசச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இதில் நீரிழிவு நோய் தொடர்பான சகல பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்படும்.

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சை நிலைய வைத்திய அதிகாரி வைத்தியக் கலாநிதி இ.பரமேஸ்வரன் நீரிழிவு நோய் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொள்வதுடன் நீரிழிவு தொடர்பான கருத்தரங்குகளையும் நடத்துவார். (த-9)



*கோண்டாவில் ஐயப்பா சுவாமியின் விசேட ஊர்வலம், நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் இருந்து நேற்று நடைபெற்றது ஐயப்ப பக்தர்களின் திருமுடி கட்டும் நிகழ்வு மண்டபத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சுவாமிகள் யானை மீது பவனியாகக் கோண்டாவிலுக்குத் திரும்பினார். நகரின் பல வீதிகள் வழியாகவும் இடம்பெற்ற ஐயப்பன் பவனியில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் மழையின் மத்தியிலும் பங்குபற்றினர்.(அ-17)*

## மாநகர சபைக்கு பிரதி ஆணையாளர்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஆணையாளருடன் பிரதி ஆணையாளர் ஒருவரையும் நியமிக்க அரசு அனுமதி அளித்துள்ளதாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற மாநகர சபைக் கூட்டத்தில் முதல்வர் தெரிவித்தார்.

மாநகர சபையில் பணியாற்ற ஆயிரத்து 110 பல்தரப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆளணி அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அரசால் அனுமதிக்கப்பட்ட ஆளணியில் தீயணைப்புப் பகுதிக்கு 18 பேரும், தலைமைத் தீயணைப்பு உத்தியோகத்தர்கள் இருவரும், கணக்காளர் 3 பேரும், பொறியியலாளர் 3 பேரும், வைத்திய அதிகாரிகள் 3 பேரும், ஆயுள்வேத வைத்திய அதிகாரிகள் 9 பேரும், பொதுச் சுகாதார மருத்துவமாதுக்கள் 16 பேரும், நூலகர் 29 பேரும், அபிவிருத்தி உத்தியோகத்தர் 21 பேரும் வருமானப் பரிசோதகர்கள் [illegible] பேரும், ஏனைய [illegible] அடங்குகின்றனர். (த-7)

## மாநகர சபை கட்டடம் எப்போது அமைக்கப்படும்?

யாழ்ப்பாணம், டிசெ.27

யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடம் எப்போது அமைக்கப்படும் என்று மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர் சபையில் கேள்வி எழுப்பினார். இதனை அடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இது குறித்துக் குரல் எழுப்பினர்.

**கட்டடத்தின் அத்திபாரக் கல் நடப்பட்டுள்ளதே தவிர மேற்கொண்டு பணிகள் எவையும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.**

சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கூட்டத்தில் ஆளும் கட்சி உறுப்பினரும் முன்னாள் பிரதி முதல்வருமான ரி. இளங்கோ மாநகரசபையின் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் எந்தக் கட்டத்தில் உள்ளன என்று கேள்வி எழுப்பினார்.

அவரது இந்தக் கேள்வியை அடுத்து எதிரணி உறுப்பினர்களும் உடனடியாக எழுந்து இதைத்தான் நாமும் அண்மைக்காலமாகக் கேட்கிறோம், பதில் எதுவுமே கிடைக்கவில்லை- என்று கூறினார்கள்.

கட்டடத்தின் அத்திபாரக் கல் நடப்பட்டுள்ளதே தவிர மேற்கொண்டு பணிகள் எவையும் இடம்பெற்றதாகத் தெரியவில்லை எனவும் எதிரணி உறுப்பினர்கள் அங்கு கூறினார்கள்.

இந்தப் பிரச்சினையால் சபையில் சிறிது நேரம் அமளி ஏற்பட்டது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவசக் கல்வி முறையை இல்லாதொழிக்க முயற்சி

## ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இதன் மூலமாகத் தனியார் கல்வி நிலையங்களைச் சட்டரீதியாக்கி இலங்கையின் இலவசக்கல்வி முறையை இல்லாதொழிப்பதற்கு அரசு முற்படுகிறது. இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தமை வருமாறு:-

அண்மையில் நடைபெற்ற க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விஞ்ஞான பாட வினாத்தாளின் வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாகவே வெளியாகி, தவறு இடம்பெற்றதை கல்வி அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அந்த வினாக்களுக்கான புள்ளிகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்யவுள்ளதாக கல்வி அமைச்சர் நேற்று புதன்கிழமை அறிவித்துள்ளார். இதன் மூலமாக தனியார் கல்வி நிலையங்களைச் சட்ட ரீதியாக்கி அதனைத் தொடர்ந்து இலங்கையின் இலவசக் கல்வி முறையை இல்லாதொழிக்க அரசு முற்படுகிறது. இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

விஞ்ஞான பாட வினாக்களைப் போன்று ஏனைய பாட வினாக்களும் வெளியாகி இருக் காது என்பதை எப்படி நம்புவது?

இவ்வாறு தவறு இடம்பெற்றமையை கருத்தில் கொள்ளாது தனியார் கல்வி நிலையங்களை மேற்பார்வை செய்வதாகக் கூறி தவறை மூடி மறைக்க முற்படுகிறார் கல்வி அமைச்சர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். (த-4)



இரணைமடுக்குளத்தின் அனைத்து வான் கதவுகளும் திறக்கப்பட்ட நிலையில் குளத்தின் கீழான தாழ் நிலப் பகுதிகள் வெள்ளத்தில் மூழ்குண்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# முல்லையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

செய்யப்பட்டிருந்தன. இந்த நிலையில் குறித்த நினைவாலயத்துக்கு முன்னால் உள்ள பொதுநோக்கு மண்டபத்தின் தண்ணீர்த் தாங்கியில் நேற்றுக்காலையில் திடீரெனப் புலிக்கொடி பறந்துள்ளது. காலை 7.30 மணியளவில் குறித்த புலிக்கொடியை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் அகற்றியுள்ளனர்.

இதேவேளை, கடந்த நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்றும் முல்லைத் தீவிலுள்ள துயிலும் இல்லங்கள் இரண்டில் புலிக்கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன. (த-5)

# கூட்டமைப்பு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அடங்கிய குழுவினர் மலேசியாவுக்குச் சென்றுள்ளனர்: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, அரியநேத்திரன், யோகேஸ்வரன், ஸ்ரீதரன், சுமந்திரன் ஆகியோரே இக்குழுவில் அடங்குகின்றனர். (ஐ)

# 48 பேருக்கும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குள் புகுத்தப்பட்ட நான்கு ஒழுங்குவிதிகளுள் 1721/5 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் கைது செய்யப்பட்டவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இந்தச் சட்ட ஒழுங்குவிதியின் கீழ் மாத்திரமே கைதுசெய்யப்பட்டவர்களைப் புனர்வாழ்வு முகாமில்வைத்து விசாரிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. கைது செய்யப்பட்ட அனைவரும் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களின் 3 பெண்களும் ஒருவர் 19 வயது மாணவனும் ஆவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கைது செய்யப்பட்ட அனைவரும் தீவிர விசாரணையின் பின்னரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இன்னும் பலரைக் கைது செய்ய உள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுள் நால்வர் அண்மையில் புனர்வாழ்வு முகாமுக்கு மாற்றப்பட்டமை தெரிந்ததே.

# பேரர்களுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பிள்ளைகளைக் காணவில்லை.

உடுத்துறையைச் சேர்ந்த இந்த வயோதிப மாது உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நேற்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வுக்கு வந்திருந்தார். அவர் தனது பேரப்பிள்ளைகளுக்கு விருப்பமான உணவுகளைப் படைத்து அங்கு அழுதுபுலம்பினார்.

உங்களுக்குப் பிடித்த புழுக்கொடியல் மாவைத் தன்னால் தரமுடியவில்லையே 'அதைச் சாப்பிடாமலேயே சென்றுவிட்டீர்களே!'. 'கடவுள் தன்னை எடுத்துக்கொண்டு பேரப்பிள்ளைகளை வாழ வைச்சிருக்கலாமே' என அவர் அங்கு கதறி அழுதமை அனைவரது மனதையும் துளைத்து வேதனைக்குள்ளாக்கியது. (த-8)

# இனவாதர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக இனவாதம் பேசும் குழுவொன்று மீண்டும் தோன்றியுள்ளது.

கொழும்பில் தமிழ் - முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது என்று தெரிவித்தே இந்த இனவாதச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

சிறுபான்மையினர் கொழும்பில் வாழ்ந்து வருவது இப்போது ஏற்பட்ட நிலைமை அல்ல. சுதந்திரத்துக்கு முன்பிருந்து அவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.

கிழக்கில் 3 வீதமாக இருந்த சிங்கள மக்கள் 30 வீதமாக அதிகரித்துள்ளனர். இது எப்படிச் சாத்தியமானது? நிலைமை இப்படி இருக்கும் போது கொழும்பில் சிறுபான்மையினர் அதிகரித்துவிட்டனர் என்று கூறுவது இனவாதமே.

எந்த இன மக்களும் நாட்டின் எந்த இடத்திலும் வாழும் நிலைமை உருவாக்கப்பட வேண்டும். வீண் பிரசாரம் செய்து நல்லிணக்கத்தைக் குழப்பக்கூடாது.

கொழும்பில் தமிழ் - முஸ்லிம் மக்களைக் குறிவைத்து மேற்கொள்ளப்படும் இனவாத பரப்புரை - இனவாதச் செயற்பாடுகள் அனைத்தையும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய நிறுத்தவேண்டும்.

போரின் பின்னர் இந்த நாட்டில் மூவின மக்களிடையேயும் குழப்பத்தை ஏற்படுத்துவதை நிறுத்தி இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும் - என்றார்.

# ஹலால்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

போராட்டம் எனக் குறிப்பிட்டுள்ள அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை, ஹலால் சான்றிதழ் வழங்குவதென்பது சமய நடவடிக்கையல்ல என்றும் சுட்டிக்காட்டுகிறது.

''இல்லை. இதுவொரு மதவாத நடவடிக்கையே'' எனச் சுட்டிக்காட்டி ஹலால் சான்றிதழ் விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார தெரிவித்தார்.

ஹலால் உத்தரவாத சான்றிதழ் வழங்குவதற்குப் பெருந்தொகையான நிதி அறவிடப்படுகின்றது. குறிப்பிட்டதொரு தரப்பை மையமாகக் கொண்டே மேற்படி சான்றிதழ் வழங்கப்படுகின்றது. உதாரணமாக எஸ்.எல்.ஏ.(S.L.A.) போன்ற தரச் சான்றிதழ்களைப் போன்று தேசத்துக்கு நன்மை பயக்கும் வகையில் இது அமையவில்லை. மதவாதத்தை அடிப்படையாகக் கொண்டது எனப் பிக்குகள் கூறும் கருத்துகளையும் நிராகரிக்கமுடியாதுள்ளது.

சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழே இது எனக் கூறுகின்றனர். அப்படியானால் குறைந்த விலைக்கு வழங்கலாம் தானே? மேற்படி சான்றிதழை வழங்குவதன் மூலம் பெறப்படும் பெருந்தொகையான நிதி ஜிஹாத் அல் - குவைதாபோன்ற அமைப்புகளுக்குப் பகிரப்படுகின்றதா என சந்தேகமும் எழுகின்றது. 'ஹலால்' சான்றிதழ் விவகாரமானது விரிவாகப் பேசப்படவேண்டிய விடயமாகும் - என்று அவர் குறிப்பிட்டார்.

# இயந்திரத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பெற்றுச் சென்றார். பணம் எதுவும் பெறாமலே நண்பன் என்ற முறையிலேயே நான் அவற்றை அவருக்குக் கொடுத்தேன். அவர் வேறொருவருடன் சேர்ந்து மேலதிக வகுப்புகளை நடத்தும் ஓர் ஆசிரியருக்கு இலட்சம் ரூபாவுக்கு விற்றிருக்கிறார் என்பதை நான் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்பே அறிந்து கொண்டேன்.'' - என்று அந்த ஊழியர் தனது வாக்கு மூலத்தில் கூறிஉள்ளார்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி, கம்பஹா மாவட்டத்திலுள்ள நைவெல என்ற இடத்தில் சலூன் நடத்தும் தனது நண்பர் ஒருவரிடம் வினாக்கள் பற்றிக் கூறி, இந்த வினாத்தாளை விற்று இரண்டும் பேரும் பணத்தைப் பங்கிட்டுக் கொள்வோம் என்று யோசனை கூறியுள்ளார்.

அதற்கிணங்க, சலூன் கடை உரிமையாளர் தனது கடையின் மேல் மாடியில் பௌதிகவியல் மேலதிக வகுப்பு நடத்தும் ஆசிரியரான தனது நண்பரிடம் இதைப் பற்றிக் கூறியுள்ளார். உடனே அவர் விஞ்ஞான பாட மேலதிக வகுப்புகளை நடத்தும் தனது நண்பரான சம்பத் என்பவரிடம் இதைப் பற்றிக் கூற, அவர் சலூன் உரிமையாளரிடம் வந்து 25,000 ரூபா பணமாகக் கொடுத்து, 75,000 ரூபாவை காசோலையாகக் கொடுத்து வினாத்தாளைப் பெற்றுச் சென்றுள்ளார். இந்தக் காசோலையை இரகசியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அச்சக ஊழியர், மேலதிக வகுப்பாசிரியர், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மற்றும் சலூன்கடை உரிமையாளர் ஆகியோர் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடுவெலை நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி லங்கா ஜயதுங்க இவர்களை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள அச்சக ஊழியர் கடந்த 17 வருடங்களாகப் பரீட்சைத் திணைக்களத்தில் கடமையாற்றி வருகிறார். (சி)

# ஆழிப்பேரலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

பொது நினைவுச் சின்னத்துக்கு 553 ஆவது படையணியின் கேணல் சுபசிங்க, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.கணேசமூர்த்தி, வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி. சிவராசா ஆகியோர் மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினார்கள்.

பொதுச் சுடரை பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து உயிரிழந்தவர்களின் நினைவிடங்களில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து, மலர் அஞ்சலி செய்ததுடன் உயிரிழந்தவர்களுக்கு விருப்பமான உணவுகளைப் படைத்து அவர்களை நினைவு கூர்ந்தனர்.

அந்த நேரம் மப்பும் மந்தாரமுமாகக் காட்சி அளித்த வானமும் கண்ணீர் சிந்துவது போல சிறிது நேரம் மழை பெய்தது. உயிரிழந்தோரின் உறவுகளின் கதறலினால் அந்தப் பகுதி சிறிது நேரம் சோகமயமாகக் காட்சியளித்தது.

அதனைத் தொடர்ந்து நினைவஞ்லி உரைகள் இடம் பெற்றன.

இந்தப் பேரலையால் 72 பேரைக் காவு கொண்ட மணற்காட்டில் புனித அந்தோணியார் தேவாலயத்தில், ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது பங்குத் தந்தையாக இருந்து தற்போது பாஷையூர் பங்குத் தந்தையாக கடமைபுரியும் அருட் திரு. றோய் பேர்டினன்ற் அடிகள் தலைமையில் ஆன்ம ஈடேற்ற திருப்பலி காலை 7 மணிக்கு நடைபெற்றது.

இந்தத் திருப்பலியில் மணற்காடு பங்குத்தந்தை அருட் திரு.ஜே.எமில் போல் அடிகள், சக்கோட்டை பங்குத் தந்தை அருட்திரு. நிருபன் நிசானந்த், அருட்திரு. எம். நேசநாயகம் அடிகளார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தத் திருப்பலியில் மறையுரை நிகழ்த்திய அருட்திரு.றோய் பேர்டினன்ற் அடிகளார், எங்கள் கிராமத்தைச் சேர்ந்த 72 பேரும் இறைவன் அழைப்பின் பேரிலேயே இறைவனிடம் சென்றுள்ளார்கள். அவர்களுக்கு ஆன்ம ஈடேற்றம் அப்போதே கிடைத்து விட்டது. அவர்களை நினைத்து நாம் கலங்கக் கூடாது. அவர்கள் எங்களுக்குள் அன்புடன் என்றென்றும் வாழ்கிறார்கள் எனக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து மணற்காடு சேமக் காலையில் முற்பகல் 9.21 மணியளவில் 72 பேரின் நினைவிடங்கள் ஒவ்வொன்றிலும் அருட் தந்தையர்கள் நால்வரும் ஆசீர்வாதம் செய்தனர். இதன் போது உயிரிழந்தோரின் உறவினர்களும் உடன் இருந்தனர்.

கட்டைக்காடு, ஆழியவளை, மருதங்கேணி ஆகிய இடங்களிலும் ஆழிப் பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (த-8)

# வன்முறைக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பில் கலந்துகொண்டு உரையாற்றியபோது கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள மக்கள் வடக்கு, கிழக்கில் சுயாதீனமாக வாழ்வதை நாம் எதிர்க்கவில்லை. ஆனால், அங்குள்ள தமிழ் மக்களின் சனத்தொகைப் பரம்பலை மாற்றி அமைக்கும் வகையில் அரசால் திட்டமிட்ட அடிப்படையில் சட்டவிரோதக் குடியேற்றங்கள் நிறுவப்படுவதையே நாம் எதிர்க்கின்றோம்.

கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்று அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் மாணவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது 18 மாதங்களுக்குத் தடுத்துவைத்து அவர்களைக் குற்றவாளிகளாக்கித் தண்டனை வழங்க முடியும்.

கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் தங்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துமாறு கூறினார்கள் என்று அரசு கூறகிறது. இது வெறும் கேலிக்கூத்தாகும்.

தமிழ் இளைஞர்கள் வன்முறையில் இறங்கவேண்டும், அவர்களைப் பயங்கரவாதிகளாகக் காட்டவேண்டும் என்பதே அரசின் திட்டம். அதற்கான பாதையை அரசு திறந்துள்ளது.

இந்தச் சதித்திட்டத்தை நன்கு விளங்கி தமிழ் இளைஞர்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். அரசின் இந்தச் சதி வலையில் சிக்கிவிடக்கூடாது; வன்முறையில் இறங்கிவிடக்கூடாது.

தமிழர்களின் உரிமைகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்தும் அறவழிப் போராட்டத்தில் இளைஞர்கள் இணைய வேண்டும்.

தமிழ்ப் பெண்களை அரசு பலவந்தமாக இராணுவத்தில் சேர்த்துள்ளது. இவர்கள் தொடர்பில் நாம் தொடர்ந்தும் கேள்வி எழுப்புகிறோம். எந்தப் பதிலையும் அரசு வழங்கவில்லை.

இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெண்களில் சிலர் தப்பி ஓடியும் சிலர் மனநிலை பாதிக்கப்பட்டும் உள்ளனர். இவை அனைத்தையும் தமிழ் மக்களை அடிமைப்படுத்தும் செயலாகவே நாம் பார்க்கிறோம்.

இந்த மாதிரியான அடாவடித்தனத்தை அரசு உடன் நிறுத்தவேண்டும். தமிழர்களை அமைதியாக வாழ அனுமதிக்கவேண்டும் - என்றார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் முளைத்தன ராணுவ காவலரண்கள்

## கொலை, கொள்ளைகளை அடுத்து

*மன்னார்,டிசெ.27*

***மன்னாரில் இடம்பெற்ற கொலை, கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து படையினரின் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.***

தற்போது மன்னாரில் நீண்ட காலத்துக்குப் பின்னர் இராணுவத்தினர் புதிய காவலரண்களை அமைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பொது இடங்களில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்டு இராணுவத்தினர் படை முகாம்களுக்கு மாற்றப்பட்டிருந்தன.

இந்த நிலையில் மன்னாரில் இடம்பெற்ற கொலை, கொள்ளைச் சம்பவங்களைத் தொடர்ந்து படையினரின் சோதனைகள் மீண்டும் ஆரம்பித்துள்ளன.

தற்போது மக்களின் குடியிருப்புக்களுக்கு அருகிலும், பொது இடங்களிலும் இராணுவக் காவலரண்கள் மீண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் தாழ்வுபாடு வீதியூடாக வைத்தியசாலை வீதியை வந்தடையும் வாகன இலக்கங்கள் பதிவு செய்யப்படுவதோடு உரிமையாளர்களின் பெயர், விவரங்களும் பதிவு செய்யப்படுகின்றன.

இதேவேளை மன்னார் பொது விளையாட்டு மைதானச் சந்தியில் கடமையில் இருக்கும் இராணுவத்தினர் தாராபுரம் பிரதான வீதியூடாக மன்னார் வரும் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றை நிறுத்தி கேள்விகள் கேட்பதோடு சோதனையிலும் ஈடுபடுகின்றனர். பின்னர் வாகன இலக்கங்கள், அடையாள அட்டைகள் என்பனவும் பதிவு செய்யப்படுகின்றன.

இதனால் மக்கள் மத்தியில் ஒருவித அச்ச உணர்வு நிலவுவதைக் காண முடிகின்றது. (க-12)

## வெள்ள அபாயம் ஏற்படலாம் சிறுவரை பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### வன்னிப் பெற்றோருக்கு அறிவுறுத்தல்

*அக்கராயன்,டிசெ.27*

*வன்னிப் பகுதிகளிலுள்ள குளங்கள் உடைப்பெடுத்தும், வான் பாய்ந்தும் பெரு வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளதால் சிறுவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.*

*தற்போது வன்னிப் பகுதியில் காணுமிடமெல்லாம் வெள்ளம் பாய்ந்து செல்கின்றது. இதனால் கவரப்பட்ட சிறுவர்கள் அந்த இடங்களை நாடிச் செல்வதைக் காணமுடிகின்றது. அதனால் அவர்கள் உயிராபத்துகளையும் எதிர்கொள்ள நேரிடக் கூடும் என அஞ்சப்படுகிறது.*

*இதனால் பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாதுகாப்பாக வைத்திருக்குமாறும் விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் கிராம அலுவலர்களுக்கும், கிராம மட்ட அமைப்புகளுக்கும் பொலிஸார் மற்றும் பிரதேச செயலக அதிகாரிகளால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.*

*சில தினங்களுக்கு முன்னர் இவ்வாறு வெள்ளத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் சிலரை நெடுங்கேணிப் பிரதேச செயலர் மீட்டு பெற்றோர்களிடம் ஒப்படைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-18)*

## இரவோடு இரவாக விடப்பட்ட யானைகளால் அச்சநிலை

### தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரப்பட்டவை

வவுனியா,டிசெ.27

இரவோடு இரவாக தென் பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு இறக்கிவிடப்பட்ட யானைகளால் செட்டிகுளம் பகுதியில் பெரும் அச்சமானதொரு சூழ்நிலை தோன்றியுள்ளது.

கடந்த வாரம் தென்பகுதியிலிருந்து வாகனங்கள் மூலமாக ஏற்றிவரப்பட்ட இரண்டு பெரிய யானைகள் செட்டிகுளம் சந்திக்கு அருகில் இறக்கி விடப்பட்டுள்ளன. தென் பகுதியைச் சேர்ந்த சிலரே இரவோடு இரவாக இந்த யானைகளை இறக்கிவிட்டுச் சென்றதாக சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது இந்த இரு பெரிய யானைகளும் குடிமனைக்குள் புகுவதைக் காண முடிகின்றது. கடந்த வாரம் இரவு செட்டிகுளம் மகாவித்தியாலயம், புனித அந்தோனியார் ஆலயம் ஆகிய பகுதிகளில் நடமாடிய இந்த யானைகள் சேதங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

தென்பகுதியில் அட்டகாசம் புரிந்து வருகின்ற யானைகளை வன்னிப் பகுதிகளில் விட்டுச் செல்கின்றமை அண்மைக் காலமாக ஒரு வழக்கமாகவே மாறியுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முல்லைத்தீவு, நெடுங்கேணிப் பகுதிகளில் இவ்வாறு யானைகள் இறக்கிவிடப்பட்டதால் பெரும் அழிவுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இந்த யானைகள் இறக்கிவிடப்பட்டது தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-400)

## வவுனியா திறந்த பல்கலைக்கு புதிய மாணவர் அனுமதி

புதுக்குடியிருப்பு,டிசெ.27

வவுனியா திறந்த பல்கலைக்கழக வளாகத்தினால் பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2013/2014 ஆம் கல்வி ஆண்டில் பட்டமேற்படிப்பை மேற்கொள்வதற்கு சுமார் 40 மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளனர். விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்குமாறும்-

இது தொடர்பான மேலதிக விவரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் விடுமுறை தவிர்ந்த கிழமை நாள்களிலும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலும் கண்டி வீதியில் அமைந்துள்ள திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கும் பட்சத்தில் போட்டிப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் பிராந்திய நிலைய இணைப்பாளர் பி.பாலமுரளி அறிவித்துள்ளார். (க-400)

## வவுனியா மாவட்டத்தில் வெள்ள இடர் காரணமாக 4,728 குடும்பங்கள் பாதிப்பு

### வவுனியா இடர் முகாமைத்துவ பிரிவினர் தகவல்

நெளுக்குளம்,டிசெ.27

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் 4 ஆயிரத்து 728 குடும்பங்கள் வவுனியா மாவட்டத்தில் வெள்ள இடர் காரணமாக இடம்பெயர்ந்துள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஜானக ஜயவர்த்தனா தெரிவித்தார்.

வவுனியா நகரத்தில் 3 ஆயிரத்து 183 குடும்பங்களும், வவுனியா தெற்கில் 572 குடும்பங்களும், செட்டிகுளத்தில் 973 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

இதேவேளை 106 வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. 486 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. வவுனியாவில் 17 குளங்களும் வவுனியா வடக்கில் 9 குளங்களும், வவுனியா தெற்கில் 3 குளங்களும் செட்டிகுளத்தில் 6 குளங்களும் சேதமடைந்துள்ளன.

மழையால் பாதிக்கப்பட்ட 324 குடும்பங்கள் வவுனியா இடைத்தங்கல் முகாமிலும் 42 குடும்பங்கள் வவுனியா தெற்கில் உள்ள இடைத்தங்கல் முகாமிலும் செட்டிகுளத்தில் அமைந்துள்ள இடைத்தங்கல் முகாமில் 733 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளன. இதுவரை மழையால் 20 ஆயிரத்து 223 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் மழை பெய்து வருவதனால் தமக்கான நிவாரண உதவிகளை வழங்க முன்வருமாறு அரச தரப்பையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் பூந்தோட்டம் பட்டானிச்சூர், நொச்சிமோட்டை, ஓமந்தை, பாவற்குளம், பம்பைமடு, மகாறம்பைக்குளம், புதுக்குளம், வெளிக்குளம், மாமடுவ ஆகிய இடங்களிலுள்ள வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெற் பயிர்கள் நாசமடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## உடைக்கப்பட்டது இடையூறாகவிருந்த மதில்

வேப்பங்குளம்,டிசெ.27

கடந்த எட்டு வருடங்களாக வெளிக்குளத்தில் குளத்து நீர் வெளியேறுவதற்கு தடையாகவிருந்த மதில் உடைக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வவுனியா வெளிக்குளம் பகுதியிலுள்ள குளத்திலிருந்து மழை காலத்தில் வெளியேறும் மேலதிக நீர் அதன் வான்பகுதியூடாகச் செல்வது வழக்கமாக இருந்தது. இந்த நிலையில் எட்டு வருடங்களுக்கு முன்னர் தனியார் ஒருவர் வான்பகுதியில் மதிலொன்றைக் கட்டியதால் நீர் வெளியேறமுடியாத நிலையில் அயலிலுள்ள மக்களின் குடியிருப்புக்களில் தேங்கி நின்று அசௌகரியங்களை ஏற்படுத்துவது வழக்கமாகும்.

இந்த ஆண்டும் இதேபோன்றதொரு நிலை உருவானது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பான செய்தி உதயன் பத்திரிகையில் கடந்த திங்கட்கிழமை வெளிவந்தது. செய்தியைத் தொடர்ந்து அன்று மாலையில் அங்கு சென்ற உயரதிகாரிகள் நிலைமையை விளக்கியதைத் தொடர்ந்து மதிலை அமைத்தவரின் சம்மதத்துடன் இடையூறாகக் காணப்பட்ட அந்த மதில் உடைத் தகற்றப்பட்டது. (க-421)

## இந்திய வீட்டுத் திட்டம் புள்ளியிடல் முறைமையால் பாதிக்கப்பட்டவர்கள் ஏமாற்றம்

### புதுக்குடியிருப்பில் இவ்வாறானதொரு நிலை

புதுக்குடியிருப்பு,டிசெ.27

முல்லைத்தீவு மாவட்டத்தில் புள்ளியிடல் முறையின் கீழ் இந்திய வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு இடம்பெறுவதால், வீடுகளை முற்றாக இழந்தவர்கள் பாதிக்கப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அதில் ஒரு கணிசமான தொகை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

போரின் போது இந்தப் பிரதேசத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில் வீடுகளை முற்றாக இழந்தவர்கள் புள்ளியிடல் முறையால் வீடுகளைப் பெறமுடியாத நிலையேற்பட்டுள்ளது. தற்போது அங்கவீனர்கள், பெண்களைத் தலைமைத்துவமாக் கொண்ட குடும்பங்கள், இடம்பெயர்ந்த காலம், தங்கியிருப்போர் எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் புள்ளிகள் இடப்பட்டு 10 புள்ளிகளுக்கு மேல் பெற்ற குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தப் புள்ளியிடல் முறையால் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிப்புக்குள்ளாவதாகவும் எனவே இந்த திட்டத்தை விடுத்து முழுமையாக வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)



*மன்னார் பொது வைத்தியசாலையில் இராணுவத்தின் 513 [illegible] நத்தார் நிகழ்வின் போது இசை, நடன நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், [illegible] இராணுவத்தினரால் வழங்கப்பட்டன. (க-12)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# சேவை நலன் பாராட்டு
## சின்னத்தம்பி மகானந்தம்



சேவைக்காலம் :- 1979 -2012
சுன்னாகம் அஞ்சலகத்தில் 32 ஆண்டு காலம் அஞ்சலராக கடமை புரிந்து 14.08.2012 இல் இளைப்பாறிச் சென்ற சின்னத்தம்பி மகானந்தம் அவர்களை நீடுழி காலம் வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

அஞ்சல் சமூகம்
சுன்னாகம்.

# PATRICIAN INSTITUTES

பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.

ஆரம்பம்: 07.01.2013

1. COMPUTR COURSES (கணினி பயிற்சி நெறி)

| | |
|---|---|
| A. Advanced in Computer Programming | Duration 8 Months |
| B. Diploma in Microsoft Office | Duration 4 Months |
| C. Diploma in Desk Tip publishing | Duration 4 Months |
| D. Diploma in Viedo Editing | Duration 4 Months |
| E. Diploma in Type setting | Duration 3 Months |
| F. Diploma in Computerized Accounting | Duration 4 Months |
| G. Diploma in Software Engineering | Duration 6 Months |
| H. Diploma in Micro media | Duration 4 Months |
| I. Diploma in Web Muiltimedia | Duration 4 Months |
| J. Professional Diploma in Graphic Design | Duration 6 Months |
| K. Computer Hardware Technology | Duration 4 Months |
| L. Internet & E - maill | Duration 1 Months |
| M.General information Technology (GIT) | Duration 4 Months |
| N. Information & Communication Technology (ICT) | Duration 4 Months |

11 Certificate Courses

- I. MS word
- II. MS Excel
- III. MS Access
- IV. MS powerpoint
- V. Visual Basic
- VI.Java Script
- VII. MYOB
- VIII. Adobe photo shop
- IX. Page Maker
- X. Flash
- XI. Quick Book
- XII. Tally
- XIII. Corel Draw
- XIV. Peestree

2. Short Hand Tiping (English) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) கணினி மூலம் தட்டுழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
3. Short Hand Tiping (Tamil) சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) கணினி மூலம் தட்டெழுத்து பயிற்சி அளிக்கப்படும்.
4. General Moto Mechanism (மோட்டார் வாகனம் திருத்துதல்)
5. General Electrician (ஜெனரல் எலக்ரிஸன்)
6. Lathe Machine Operation (கடைச்சல் இயந்திரப் பயிற்சி)
7. Arc Welding (மின் ஒட்டுநர் பயிற்சி)
8. Carpentry (மரவேலை)
9. Refrigeraion Air conditioning (குளிர்சாதனப் பெட்டி திருத்துதல்)

குறிப்பு:
1. பயிற்சிக் கட்டணம் தவணை முறையில் செலுத்தலாம்
2. பயிற்சி நெறிகள் சம்ந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. வாகனங்களுக்குரிய தகுதிச்சான்றிதழ் 2013 ஆம் ஆண்டுக்குரியது தற்போது வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை அனைத்து வாகன உரிமையாளருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Registar,
Patrician institute,
61(59), St.partick's Road,
Jaffna.

T.P: 0212226148
Fax: 0212226148
E-mail: spitee@sltnet.lk

(சி/6091)(3.14)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.27

விரத மஞ்சரி இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு முற்பகல் 11 மணிக்கு சித்தன்கேணி சிவன் கோயில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் தி.ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் கலந்து கொண்டு நூலைவெளியிட்டு வைக்கவுள்ளார்.

# திருவெம்பாவை உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

யாழ். வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய திருவாதிரை உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 3.45 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

★ ★ ★

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் ஆலய திருவெம்பாவை தீர்த்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணிக்கு பூசைகள் யாவும் தொடர்ந்து ஆலய பித்தர் கேணியில் காலை 6.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும். சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வும் இடம் பெறும்.

# யுவதி சாவு

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிறிஸ்மஸ் ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த யுவதி திடீரென உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு ,பெரிய ஊறணியைச் சேர்ந்த நாகலிங்கம் நிராஜினி (வயது - 20) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதனையடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டபோதும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி




பாசமழை பொழிந்து பாரினில் எமை – வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேடபறந்து எங்கு – சென்றீர்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி – நிற்க
இறைஞ்சுகின்றோம் இறைவனிடம் என்றும்
ஆத்ம சாந்திக்காய்

அ.மி.த பாடசாலை அருகில்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

(27288)(6.7.1)

# மரண அறிவித்தல்கள்



## சின்னத்துரை இராசம்மா

நெட்டிலிப்பாய் வீதி, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இராசம்மா நேற்று (26.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும், பத்மாவதி, பத்மராசா ஆகியோரின் தாயும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, செல்லமுத்து, தங்கம்மா, கனகம்மா, பொன்னுச் சாமி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் மற்றும் கமலராணி ஆகியோரின் மாமியும், வளர்மதி, காலஞ்சென்ற மதியழகன் மற்றும் இந்துமதி, மதிவதனன், மகிந்தன், சயந்தன், சாதனா, சகிலன் ஆகியோரின் பேர்த்தியும், இலக்கியன், உபர்னா, காலஞ்சென்ற மோனிஷன் மற்றும் சர்வினா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.12.2012) வியாழக்கிழமை மு.பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய் றோட்,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(27233)(3.14)

## சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், உசன் மிருசுவிலை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இல.1 வெங்கடேஸ்வரா வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தவருமான சிவசுப்பிரமணியம் ஜீவரத்தினம் நேற்று (26.12.2012) புதன்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முருகேசு-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாராயன பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் ஜெயராசா(லண்டன்)இராஜேஸ்வரி சாந்தினிதேவி, இரஞ்சன் (ஜீவா ஸ்ரோஸ், மல்லாகம்)ஆகியோரின் பாசம்மிகு சகோதரியும், கார்த்திகேசு சிவகுரு, காலஞ்சென்ற வேலாயுதப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ராஜீவன் (நோர்வே), சுரேஸ்குமார் (soft view computer col-lege) விஜிதா (ஆசிரியர்.நாவாந்துறை RCTMS),ராஜ்குமார் (லண்டன்)சுஜாத்தா (சுவீடன்), ஆகியோரின் அன்புத்தாயாரும் விக்ரிஷ்ஷன் (னோர்வே) சாந்தி (ஆசிரியர், கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலையம்) பரம்தில்லைராஜன் (ஆசிரியர் சாவகச்சேரி டிறிபேக் கல்லுரி )குணரேகா ,கரன் (சுவிடன் ) ஆகியோாரின் அன்பு மாமியாரும் சாமினி ,கபிலா, சந்துரு, கார்முகி ,செந்தூரி ,யதுவந்தி, கபிலினி, தமிழினி விதுஷன் , ஜதுஷன் ,பிரதீப்ராஜ் ,அபிராஜ், வித்தகி, சாதனா, அதிசயன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர்கள் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 01, வெங்கடேஸ்வராவீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


# ஷாம்சன் இங்கிலீஷ்- 3மாத பயிற்சி நெறி

எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.

தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கிறது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, CD மூலமான பயிற்சியையோ நாம் வழக்குவதில்லை மாறாக எனையவர்களுடன் உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.

எமது பழக்கப்படுத்தல் மூலமாகன பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர், நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (31.12.2012) இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I மு.ப 8-10 பிரிவு III பி.ப 01- 03
பிரிவு II மு.ப 10- 12 பிரிவு IV பி.ப 03- 05

03 மாத பயிற்சி நெறிக் கட்டணம்
ரூபா 3000.00

31.12.2012 இற்குள் பதிவு செய்வோருக்கே மேற்படி பயிற்சிக் கட்டணம் பொருந்தும்! அதன் பின்னர் 6500.00
15 வயதிற்கு மேற்பட்ட எவரும் பயிற்சியில் பதிவு செய்ய முடியும்.

SAAMSON ENGLISH
279, [illegible] யாழ்ப்பாணம்.
தொ.பே 0778294567


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாளுக்கு நாள் உயர வளரும் புதிய 'நியதி'க்கான உருவாக்கங்கள்

நீண்ட காலமாக இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களின் வணக்க ஸ்தலங்களையும் அவர்களின் வர்த்தகச் செயற்பாடுகளையும் குறிவைத்து பெரும்பான்மை இனத்தவர்கள் இயங்குவது அவதானிக்கப்பட்டு வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டு, தமிழ் மக்களின் பலம் ஒடுக்கப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம்கள் மீதான அடக்குமுறைகள் அதிகரித்து வருவது பௌத்த - சிங்கள மதவாத, இனவாத ஆதிக்கத்தின் வெளிப்பாடு என்பதில் ஒரு துளியும் சந்தேகம் இருக்க முடியாது.

முஸ்லிம்களுக்கு எதிராக, அவர்களின் இஸ்லாம் மதக் கடமைகளுக்கு எதிராக இடம்பெற்றுவரும் சம்பவங்களைப் பெரிதுபடுத்தவேண்டாம் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் பேசிப் பறைந்து கருத்து வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தம்புள்ளைப் பள்ளிவாசலைத் தாக்கியோரைத் தெரிந்து கொண்டும் அவர்களுக்கு எதிராக இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. அதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அதன் பின்னர் குருநாகல், தெஹிவளை மற்றும் காலி ஆகிய இடங்களில் இஸ்லாம் மதத்தவர்களைப் புண்படுத்தத்தக்க விதத்தில் இடம்பெற்ற சம்பவங்களைத் தடுத்திருக்கலாம். ஹலால் எதிர்ப்புப் போராட்டம் கூட மேற்கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்பட்டிராது.

பதுளையிலும் எம்பிலிப்பிட்டியவிலும் முஸ்லிம்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. எம்பிலிப்பிட்டியவில் முஸ்லிம் வர்த்தகர்கள் இருவர் தாக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாடு பல்லின மக்கள் வாழும் தேசம். எந்த ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு மட்டுமே இந்த நாடு சொந்தமானது அல்ல. அதனை உள்வாங்க மறுத்தே, திட்டமிட்டே, வேண்டுமென்றே அலுவல்கள் அரங்கேறி வருகின்றன. அரசியல், ஆயுத அடக்குமுறைகள், பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்கு இந்த நாட்டை சீரழித்து குட்டிச்சுவராக்கிவிடும் என்பதனை எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக உள்ளவர் உணர்வதாக இல்லை.

1948இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் கிடைக்க இருந்த காலகட்டத்தில் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் அரவணைத்து தமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டது சிங்களப் பெரும்பான்மை. சுதந்திரம் பெற்ற கையோடு இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமையைப் பறித்தது. பின்பு தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது.

காலத்துக்குக் காலம் தமிழர் மீதும் அவர்களது சொத்துகள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட தாக்குதல்களினாலும் அடக்குமுறைகளினாலும் தமிழ் மக்களது பொருளாதார வளம் மிகவும் மோசமாகப் பின்தள்ளப்பட்டுள்ளது; இன்று அவர்களது இருப்பு உறுதி அற்றதாகி விட்டுள்ளது. அதனை முற்றாக அர்க்கெடுத்தி விடுவதற்கான மேலாண்மை நாளுக்கு நாள் உயர்ந்து செல்கிறது.

இத்தகைய சூழமைவில்தான் முஸ்லிம் மக்கள் மீதான அடக்குமுறைகள் பேரினவாதிகளால் மிகவும் சுதந்திரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வரிசையில் தற்பொழுது இறுதியாக ஆரம்பிக்கப்பட்டிருப்பதுதான் ஹலால் எதிர்ப்புப் போராட்டம்.

நாட்டில் உள்ள அனைத்து முஸ்லிம்களின் இருப்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மீதான பொறாமையின் வெளிப்பாடுதான் இப்போராட்டம். ஹலால் சான்றிதழ் வழங்குவது ஒரு சமய நடவடிக்கை அல்ல, உணவு உற்பத்தியில் அனைத்து மதங்களும் விரும்பும் சுகாதாரத்தை உறுதிப்படுத்தும் செயல் அது என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாசபை விளக்கம் அளித்திருக்கிறது. ஆனால் பேரினவாதம் அதனைக் காதில் போட்டுக் கொள்ளாதிருப்பது வியப்பளிக்கிறது.

முஸ்லிம் மக்களின் ஒட்டுமொத்த வியாபார முயற்சிகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதுதான் இவர்களின் திட்டம். முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்கள் வேலைசெய்யக்கூடாது, முஸ்லிம்களின் கடைகளில் சிங்களவர்கள் பொருள் வாங்கக் கூடாது என்றெல்லாம் சில பிக்குமார் பிரசாரம் செய்கிறார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதத்துடனும் மக்களின் வாழ்வுடனும் விளையாடுவது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இன்றைய நிலை குறித்து முஸ்லிம் - தமிழ்த் தேசிய முன்னணியின் தலைவரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான அஸாத் சாலி விடுத்துள்ள எச்சரிக்கையை அரசதரப்பு கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

முஸ்லிம்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் அராஜகங்களையும் அரசு தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிடுவதனூடாக முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பாதுகாக்க ஆயுதம் ஏந்த வேண்டும் என்பதையா அரசு எதிர்பார்க்கிறது என்று அஸாத் சாலி அர்த்தம் பொதிந்த, நிறைந்த கேள்வி எழுப்பி உள்ளார்.

கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதைக் கண்டறிந்து அவர்களின் பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுக்கப்படவில்லை. ஆனால் மற்றொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் கைவைக்கத் தொடங்கியுள்ளது. சிறுபான்மை இனங்களை அடக்கி ஒடுக்கிய எந்த நாடும் முன்னேற்றம் கண்டதாக வரலாறு இல்லை.

இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்துடையது: ஏனைய இரண்டு இனங்களும் அடக்கி, ஒடுக்கப்பட்டு மூன்றாம் தரப் பிரஜைகளாகவே இங்கு வாழ முடியும் என்ற புதிய 'நியதி' வகுக்கப்படுகிறது. இதன் பின்னர் என்ன நடக்கப்போகிறது என்பதனைக் காலம் தான் நிர்ணயிக்கும்.

# இடமாற்றம் வழங்கக் கோரும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.27

வடமாகாணத்தின் கஷ்டப் பிரதேசத்தில் நிகழ்ச்சித் திட்ட அலுவலர் பதவியில் கடந்த 7 வருடங்கள் கடமை செய்துள்ளோம். எனினும் இதுவரை நாம் வசதியான அரச திணைக்களங்களுக்கு மாற்றப்படவில்லை.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி எமக்கு இடமாற்றம் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு முல்லைத்தீவு-கிளிநொச்சி உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 23.05.2005 இல் நிகழ்ச்சித் திட்ட அலுவலர்களாக வடமாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் நாம் நியமனம் பெற்றோம்.

மூன்று வருடங்களில் இடமாற்றம் வழங்கப்படும் என்று நியமனத்தின் போது கூறப்பட்டு கடிதம் வழங்கப்பட்டது.

பின்னர் 5 வருடங்களில் மாகாண பொதுநிர்வாக செயலகம் ஊடாக நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நாம் பல கடிதங்களையும் ஆவணங்களையும் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள், அமைச்சர்கள், ஆணையாளர்களுக்கு சமர்ப்பித்துள்ளோம்.

தற்போது ஏழு வருடங்கள் முடிவுற்றுள்ளன.

யாழ்.குடாநாட்டில் வசதியான அரச நிறுவனங்களில் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்கள் எவ்வித இடமாற்றமும் இன்றி நியமன காலத்தில் இருந்து இன்று வரை சுகபோகங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

வெளிமாவட்டங்களில் நியமனம் வழங்கியதிலிருந்து மாற்றாந்தாய் பிள்ளைகள் போல் நாம் பல்வேறுபட்ட துன்பங்களை எதிர்கொண்டு வருகிறோம்.

எமது விடயத்தில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.-என்று மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

## பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில்

கொழும்பு,டிசெ.27

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு அடுத்த ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

சுமார் 54 நாடுகளின் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர். அடுத்த வருடம் நவம்பர் மாதம் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் இந்த மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளதால் அதற்கான விசேட ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சு ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-16)

## முன்னாள் போராளிகள் 313 பேர் விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,டிசெ.27

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலிப் போராளிகள் 313 பேர் தைப்பொங்கலை ஒட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி வவுனியா கலாசார மண்டபத்தில் வைத்து அவர்களின் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக புனர்வாழ்வுக்குப் பொறுப்பான ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

**குடும்பத்துடன் இணையவுள்ள இவர்களுக்கு விசேட கடன் திட்டம் ஒன்றுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.**

மருதமடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 220 பேரும், சேனபுர புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 23 பேரும், சுத்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து 70 பேருமாக 313 பேரே குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். இவர்கள் சுமார் ஒரு வருட காலம் இந்த நிலையங்களில் இருந்து புனர்வாழ்வு பெற்றுள்ளனர்.

இவர்களை குடும்பத்தாருடன் இணைக்கும் நிகழ்வில் சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

குடும்பத்துடன் இணையவுள்ள இவர்களுக்கு விசேட கடன் திட்டத்துக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (த-8)

## வேலணைப் பிரதேச சபையின் உப அலுவலகங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட 5 உப அலுவலகங்களும் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு உப அலுவலகத்துக்கும், தலா மூன்று மில்லியன் ரூபா வீதம் 15 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார்.

வேலணை பிரதேச சபை தலைவர் சி.சிவராசா இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட மண்டைதீவு, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அல்லைப்பிட்டி உப-அலுவலகங்கள் நீண்ட காலமாகப் புனரமைப்பு இன்றி இருந்தன.

மேற்படி உப-அலுவலகங்களை புனரமைப்புச் செய்ய வேண்டுமென வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளருக்குத் தெரிவித்ததை அடுத்து எமக்கு 15 மில்லியன் ரூபா கிடைத்துள்ளது.- என்றார். (த-50)

## யோகாசன வகுப்புகள்

வலி.தென்மேற்கு,டிசெ.27

உரும்பிராய் சந்தியில் இயங்கி வரும் இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களில் காலை 6.30 மணியிலிருந்து 7.30 மணி வரை ஒரு மணித்தியாலம் இந்த வகுப்புக்கள் நடைபெறும்.

ஐந்து வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இத் தியான வகுப்புக்களில் கலந்து கொள்ளலாம் என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எஸ்.சிவமோகன் தெரிவித்துள்ளார். (த-115)

## தொழிற்சங்கம் அங்குரார்ப்பணம்

தென்மராட்சி,டிசெ.27

பட்டதாரிகள் ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் நியமிக்கப்பட்ட பதவிநிலை தரத்திலான வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான தொழிற்சங்கம் தொடர்பான நிகழ்வு இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர், சிறுவர் நன்னடத்தை அலுவலர், கலாசார அலுவலர், சனசமூக அபிவிருத்தி அலுவலர், கிராம அபிவிருத்தி அலுவலர் ஆகியோரை உள்ளடக்கும் சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி தொடக்கம் நடைமுறைக்கு வரவுள்ள புதிய சம் பள அளவுத்திட்டம், புதிய ஆளணி உருவாக்கம் போன்றவை கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவு எடுக்க வேண்டியது அவசியம் என்பதால் உரிய அலுவலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் அறிவித்துள்ளனர். (ம-9)

## படையினரின் கரோல் நிகழ்வு

தென்மராட்சி,டிசெ.27

523 ஆவது படையணியின் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்வுகள் நேற்று புதன்கிழமை நாவற்குழி சந்தி தொடக்கம் சாவகச்சேரி பஸ் நிலையம் வரை நடத்தப்பட்டது.

நாவற்குழி சந்தியில் ஆரம்பித்த கரோல் நிகழ்வுகள் கைதடி சந்தி, கைதடி - நுணாவில் வைரவர் கோயிலடி, நுணாவில் சந்தி, சாவகச்சேரி பஸ் நிலையம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன.

நிகழ்வில் கலந்து கொண்ட கிறிஸ்மஸ் தாத்தா பார்வையாளர்களுக்கு பரிசில்களை அள்ளி வழங்கினார்.

கரோல் நிகழ்வு வருவது ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதால் பெரும் எண்ணிக்கையான மக்கள் வீதிகளில் கூடி நின்று பார்வையிட்டு கிறிஸ்மஸ் தாத்தாவிடம் பரிசில்களைப் பெற்றனர். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கொம்பனில் 100 சிறார்கள் அடுத்த வருடம் தரம் ஒன்றுக்கு

கிளிநொச்சி, டிசெ.27
கிளிநொச்சி முக்கொம்பன் பிரதேசத்தில் இருந்து சுமார் நூறு மாணவர்கள் அடுத்த ஆண்டு தரம்-01 வகுப்புகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

முக்கொம்பன் பிரதேசத்தில் இயங்கி வரும் 5 முன்பள்ளிகளிலும் இருந்து இவர்கள் தரம் ஒன்றுக்கு இணைக்கப்படவுள்ளனர்.

முக்கொம்பன் அ.த.க. பாடசாலையில் தற்போது நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர். தற்போது பௌதிக மற்றும் ஆளணி வளப்பற்றாக்குறைகள் பாடசாலையில் அதிகரித்துக் காணப்படுவதால் புதிய மாணவர்களை உள்வாங்குவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த பாடசாலைக்குரிய வளங்களைப் பெற்றுத்தருமாறு இந்தப் பிரதேச பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-6)

# கரைச்சிப் பிரதேச சபையை நகர சபையாக்கக் கோரிக்கை

அக்கராயன், டிசெ.27
கரைச்சி பிரதேச சபையை நகரசபையாக மாற்றி அதன் சேவையை விரிவாக்க வேண்டும் என கிளிநொச்சி நகர்ப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரம் தற்போது வளர்ச்சியடைந்து வருகிறது. மக்கள் வாழ்க்கைத்தரம் உட்பட கட்டமைப்பு ரீதியாக கிளிநொச்சி நகரம் வளர்ச்சியடைவதால் நகர அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு பிரதேச சபையின் செயற்பாடுகள் போதாது.

எனவே அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு கரைச்சி பிரதேச சபையை நகர சபையாக மாற்ற வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (ஐ-18)

# வன்னியில் பாடசாலையை விட்டு இடைவிலகுவோர் தொகை அதிகம்

## வறுமை, அக்கறையின்மையே காரணமாம்

கிளிநொச்சி, டிசெ.27
வன்னிப் பகுதியில் பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்களது எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக பாடசாலை மட்ட புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மன்னார் மாவட்டங்களில் பாடசாலைகளில் இருந்து மாணவர்களின் இடைவிலகல் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரியவருகிறது.

வருமானம் இன்மை, பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து மாணவர்கள் பிரிதல், சமூக நடத்தைகள் காரணமாக இந்த இடைவிலகல்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**10 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு இரும்பு சேகரித்தல், கட்டடம் கட்டுதல், கூலி வேலை, பஸ் மற்றும் வாகனங்களுக்கு உதவியாளராகுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் வியாபார நிலையங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.**

10 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்கள் தமது கல்வியை இடைநிறுத்திவிட்டு இரும்பு சேகரித்தல், கட்டடம் கட்டுதல், கூலி வேலை, பஸ் மற்றும் வாகனங்களுக்கு உதவியாளராகுதல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் வியாபார நிலையங்களிலும் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

தவிர, சிறுவயதிலேயே புகைத்தலுக்கும், போதைப் பொருள் பாவனைக்கும் இவர்கள் அடிமையாகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

இரகசியமாக மதுபானங்கள் விற்கப்படும் இடங்களில் சிறுவயதினர் களவாக மது அருந்துவதையும் அவதானிக்க முடிகிறது.

மாவட்டச் செயலகங்கள் மட்டத்தில் இடைவிலகும் மாணவர்களை மீள இணைக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், அந்த நடவடிக்கைகள் போதாது என பொது ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

குடும்ப வறுமை, வேலையின்மை, வாழ்க்கைரீதியான மன அழுத்தம் காரணமாக பெற்றோரும் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து கூடிய கவனம் செலுத்துவதில்லை. இதன் காரணமாகவே பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதைத் தவிர்க்க முடியாதுள்ளதாக பாடசாலைத் தரப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

வன்னிப் பிரதேசங்களில் பெரும் சமூகப் பிரச்சினையாக மாறியிருக்கும் மாணவர்களது இடைவிலகலை நிறுத்துவதற்கு சமூகமட்ட விழிப்புணர்வுடன் கூடிய செயற்றிட்டம் ஒன்று அவசியம் என சமூக ஆர்வலர்கள் கோருகின்றனர். (ஐ)

# சேறும் சகதியுமான வீதியால் மயானத்துக்குச் செல்வோர் அவதி

**போக்குவரத்தில் ஈடுபடுவோர் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

வவுனியா, டிசெ.27
வவுனியா - நெளுக்குளம் மயான வீதி நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் சேறும் சகதியுமாகக் காணப்படுவதால் மயானத்துக்குச் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா - நேரியகுளம் வீதியில் இருந்து கந்தபுரம் செல்லும் வவுனியா தெற்குப் பிரதேச சபையின் நிர்வாகப் பகுதிக்குட்பட்ட இந்த வீதி கிரவல் மண்ணால் நிரப்பப்படாது வீதியின் இரு மருங்கிலும் காணப்பட்ட மண்ணை இட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளதால் எங்கும் சேறும் சகதியுமாகக் காணப்படுகிறது.

நெளுக்குளம், கூமாங்குளம், சாமியன்தோட்டம், குளுமாடு காத்தான் கோட்டம், ஊர்மிளா கோட்டம், புதையல்பிட்டி, உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் இறந்த உடல்களைத் தகனம் செய்யும் இடமாக இந்த மயானம் காணப்படுகிறது. ஆனால் இந்த வீதியைப் பயன்படுத்துவோர் தற்போது பெய்து வரும் மழையால் பெரும் சிரமங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

போக்குவரத்தில் ஈடுபடுவோர் பலத்த அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இந்த வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-410)




ஆழிப் பேரலை ஏற்பட்டு நேற்றுடன் 8 வருடங்கள் பூர்த்தியாகின. இந்த நிலையில் நேற்றுத் தேசிய பாதுகாப்பு தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதனை முன்னிட்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆழிப் பேரலை நினைவுத் தூபியில் நரசிங்கர் ஆலயத்தின் ஏற்பாட்டில் விசேட பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது. (க-400)

# ஏகமனதாக நிறைவேறியது வரவு – செலவுத் திட்டம்

வவுனியா தெற்கு பிரதேச சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச சபையின் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை தலைவர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது அடுத்த வருடத்துக்கான வரவு, செலவுத்திட்ட அறிக்கை சபையின் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுடன் எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் சபையில் அங்கம் வகிக்கும் 10 உறுப்பினர்களும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு தலா 7 லட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட வீதிகள், விளையாட்டு மைதானங்கள், கிணறுகள் என்பன புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-400)

# கிளிநொச்சி மாவட்டத்தில் ஆங்கில பாடசாலை அமைக்குக

## பெற்றோர்கள் கோரிக்கை

கிளிநொச்சி, டிசெ.27
கிளிநொச்சி மாவட்டத்தில் ஆங்கிலப் பாடசாலை உருவாக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 95 பாடசாலைகள் தமிழ் மொழி மூலம் இயங்கி வருகின்றன.

இந்த நிலையில் மாவட்டத்தின் மாணவர்களது ஆங்கில மொழி விருத்தியைக் கருத்தில் கொண்டு ஆங்கில பாடசாலை ஒன்றை உருவாக்குவது அவசியம் என கோரப்பட்டுள்ளது.

**மாணவர்களது ஆங்கில மொழி விருத்தியைக் கருத்தில் கொண்டு ஆங்கில பாடசாலை ஒன்றை உருவாக்குவது அவசியம் என கோரப்பட்டுள்ளது.**

இது தவிர முன்னணிப் பாடசாலைகளில் ஆங்கில மொழிமூலமான கற்கை நெறிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது. போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து மூன்று வருடங்கள் கழியும் நிலையில் மாணவர்களது கல்வியை ஏனைய எல்லா மாவட்டங்களைப் போலவும் வளர்த்தெடுக்க வேண்டும் எனவும்

இதன் பொருட்டு ஆங்கில மொழி மூலமான பாடசாலைகளையும் உருவாக்கி மாணவர்களது மொழி விருத்தியையும், அறிவாற்றலையும் வளர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-18)


# வவுனியா இளம் கலைஞர்களுக்கு 'இளங்கலைச்சுடர்' பட்டம்

## வழங்கிக் கௌரவித்தார் அமைச்சர் றிசாத்

வவுனியா, டிசெ.27
வவுனியா மாவட்டத்தில் வளர்ந்து வரும் இளம் கலைஞர்கள் 25 பேர் 'இளங்கலைச்சுடர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கடந்த 14 ஆம் திகதி வவுனியா மாவட்ட அரச அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர தலைமையில் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற இந்தக் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் இளங்கலைஞர்கள் அனைவருக்கும் இளங்கலைச் சுடர் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார்.

இதில் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சரஸ்வதி மோகநாதன், வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா தெற்கு பிரதேச செயலர் எம்.எஸ்.ஜனக, பிராந்திய ஆணையாளர் ஐ.எஸ்.எம்.முகைதீன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் என். நித்தியானந்தன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.



எழுத்துத் துறையில் ஜெகதீசன் கோபிநாத், செல்வி நிரோசா தியாகராஜா ஆகியோரும் இலக்கியத் துறையில் திருமதி எம்.டி.என்.டி. அரச [illegible] ஆகியோரும், நாடகத்துறையில் சிக்கந்தர் சிவசந்துரு, சுப்பிரமணியம்-வினோத் ரங்கன் ஜெயக்கொடி ஆகியோரும் கிராமியக் கலைக்கு ஆசீர்வாதம் பொலின்ராசா ஆகியோரும் பரதநாட்டியத் துறையில் அருந்தவநாயகம் கஜேந்திரா, செல்வி தர்சிகா செல்வராசா, நாகராசா செந்தூர்ச்செல்வன் ஆகியோரும் கவிதைத் துறையில் தம்பித்துரை ஐங்கரனும் குறும்படத் தயாரிப்பில் தருமரத்தினம் தவயோகன், தர்மலிங்கம் பிரதாபன் ஆகியோரும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் ஊடகத்துறையில் நவரட்ணம் கபிலநாத், நிசங்கமாதவகுலசூரிய, பி.எச்.சி.உபுல் பாலசூரியா ஆகியோரும் ஓவியத்துறையில் கந்தையா பாலேந்திரன், முருகதாஸன் நாகதாஸன் ஆகியோரும் கர்நாடகத் துறையில் செல்வி அருந்ததி சிவக்கொழுந்துவும் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் தவில்வித்துவான் வீராச்சாமி அரிகரபுத்திரன், நாதஸ்வரக் கலைஞர்களான சண்முகதாஸ் கஜேந்திரன், சண்முகதாஸ் ஐங்கரன் ஆகியோரும் இசையமைப்புத் துறையில் கந்தப்பு ஜெயந்தனும் இளங்கலைச்சுடர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பையை திருடினார் கடைக்காரரின் மனைவி

## பொலிஸாரின் தலையீட்டால் அது உடன் மீட்பு

தென்மராட்சி,டிசெ.27

கடைக்குப் பொருள்கள் வாங்கச் சென்ற பெண்ணின் கைப்பையைத் திருடினார் கடைக்காரப் பெண். பொலிஸார் தலையீட்டில் கைப்பை மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி பொதுச்சந்தை அங்காடிப் புடைவைக் கடை ஒன்றில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

பளையிலிருந்து பொருள்கள் வாங்குவதற்காகச் சாவகச்சேரி சந்தைக்குச் சென்றார் பெண் ஒருவர். அவர் அங்குள்ள அங்காடிப் புடைவை நிலையத்தில் பொருள்களை கொள்வனவு செய்துவிட்டு பணம் கொடுப்பதற்காக அவர் கைப்பையைப் பார்த்த போது அது மாயமாக மறைந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அந்தப் பகுதியில் தேடிப் பார்த்துவிட்டுச் சந்தைக்கு வெளியே வந்த போது அங்கு கடமையிலிருந்த பொலிஸாரிடம் நடந்த சம்பவத்தைக் கூறியுள்ளார். சம்பவ இடத்துக்குப் பெண்ணுடன் விரைந்த பொலிஸார் அங்கு தேடுதல் நடத்தியபோது அங்கு நின்ற கடைக்காரரின் மனைவி தனது கைப்பையை தூக்கிக் கொண்டு வெளியேற முயன்றார். அவரில் சந்தேகம் கொண்ட பொலிஸார் பெண்ணின் உதவியுடன் கைப்பையை சோதனையிட்ட போது அதனுள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் திருடப்பட்ட கைப்பை இருந்ததைக் கண்டு பிடித்தனர்.

கைப்பையைப் பரிசோதனை செய்த பொலிஸார் அதனைப் பறிகொடுத்த பெண் தெரிவித்த பொருள்களான கையடக்கத் தொலைபேசி, அடையாள அட்டைகள் மற்றும் 3 ஆயிரத்து 500 ரூபா பணம் ஆகியவை இருந்ததை உறுதி செய்தனர். பின்னர் கைப்பையை உரியவரிடம் கையளித்து விட்டு திருடிய பெண்ணை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கிறிஸ்மஸ் வியாபாரத்துக்காக தென்னிலங்கைப் பகுதியிலிருந்து உடுபுடைவைகள் கொண்டு வந்த வியாபாரி ஒருவரின் மனைவியே கைப்பையைத் திருடியவராவார். (த-9)

# நயினாதீவைச் சுற்றி பாதுகாப்பு அணை

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஆழ்கடலுடன் இணைந்த நயினாதீவு பிரதேசத்தைச் சுற்றி பாதுகாப்பு அணை அமைக்கப்பட வேண்டும்.

நயினாதீவு பிரதேசம் கடல் அரிப்பினால் நாளுக்கு நாள் நீரில் அழிந்த வண்ணம் உள்ளது.

எனவே பாதுகாப்பு அணை அமைப்பது மிக அவசியமானது.

இவ்வாறு வேலணைப் பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தப் பாதுகாப்பு அணையை அமைப்பதற்காக 2006 ஆம் ஆண்டு வேலணைப் பிரதேச சபை 'யுனொப்ஸ்' திட்டம் ஊடாக முன்மொழிவைச் சமர்ப்பித்து நிதி உதவி கோரியிருந்தது.

'யுனொப்ஸ்' நிறுவனம் இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுக்கப் போதிய நிதி ஒதுக்கீடு இல்லை என்று தெரிவித்தமையால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

தற்போது இந்தப் பிரதேசத்தைக் கடல் அரிப்பில் இருந்து பாதுகாக்கக் கரையோரம் பேணல் மற்றும் முகாமைத்துவத் திணைக்களம் முன்வரவேண்டும் என அந்தப் பிரதேசத்தின் உப- அலுவலக பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் கோரியுள்ளார். (த-50)

# வலி.மேற்குப் பிரதேச சபையின் காணிபெறத் தகுதியானோர்

அராலியில் கடந்த 50 வருடங்களாக பிரதேச சபைக் காணியில் குடியிருந்தோர் காணி உறுதி பெறவுள்ளனர்

யாழ்ப்பாணம்,டிசெ.27

பிரதேச சபையின் காணியில் உள்ள மக்களுக்கு காணி பகிர்ந்து ஜனவரியில் வழங்கப்படவுள்ளது. இதற்கான பயனாளிகள் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன், செயலாளர் திருமதி. சாரதா உருத்திர சம்பவன் ஆகியோரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

வலி.மேற்கு அராலியில் கடந்த 50 வருடங்களாக பிரதேச சபை காணியில் குடியிருந்து காணி உறுதி பெறவுள்ள பயனாளிகளின் விவரம் வருமாறு:-

குஞ்சன் பெருமாள், மாரியன் வரதராசா, செல்வராசா இலட்சுமி, தவசி நவரத்தினம், கொ.பொன்னுத்துரை சிவபாக்கியம், கனகன் செல்லம்மா, மாரிமுத்து செல்வரத்தினம், நாகன் குமார், வைத்திலிங்கம் மோகேந்திரம், முருகன் கனகம்மா, தவசி நாதன், பரமு புனிதவதி, செல்லையா சிவபாக்கியம், பொன்னுத்துரை தனபாலன், தவசி புலேந்திரன், அப்பையா கோபால், மாரிமுத்து தேவராசா, வேலன் சிதம்பரம்

இதேபோல் சங்கானை மத்தியில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம் வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-41)

# மழையால் தப்பிப் பிழைத்த குடாநாட்டு நெல் வயல்கள்

## வாடியிருந்த நெற்பயிர்களுக்குக் குளிர்ச்சி

இந்த மழையினால் நெற்செய்கை ஓரளவு காப்பாற்றப்பட்டுள்ளதாக விவசாயிகள் கருத்துத் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம்,டிசெ.27

குடாநாட்டில் கடந்த இரண்டு தினங்களாகத் தொடர்ச்சியாகப் பெய்த மழையினால் நெற்பயிர்கள் ஒருவாறு தப்பிப் பிழைத்தன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் குடாநாட்டில் நல்ல மழை பெய்தது.

நெல்விதைப்பு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் மிகக் குறைவாகவே மழை பெய்தது. மழை தொடர்ந்து பெய்யாமையால் நெல் வயல்களில் நீர் வற்றியது.

இதனால் நெற்பயிர்கள் கருகும் நிலை காணப்பட்டது. இன்னும் சில தினங்களுக்குள் மழை பெய்யாவிட்டால் நெற்பயிர்ச் செய்கை மோசமாகப் பாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்தநிலையில் கடந்த இரண்டு தினங்களாக யாழ்ப்பாணத்தில் நல்ல மழை பெய்துள்ளது.

வயல்களில் வாடி வதங்கிப் போயிருந்த நெற்பயிர்கள் இந்த மழையை அடுத்து ஒருவாறு தப்பிப் பிழைத்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இந்த மழையினால் நெற்செய்கை ஓரளவு காப்பாற்றப்பட்டுள்ளதாக விவசாயிகள் மேலும் கூறினார்கள்.

வன்னியில் கடந்த சில தினங்களாகக் கொட்டித் தீர்த்த மழை நேற்று முன்தினம் முதல் குடாநாட்டிலும் பெய்ய ஆரம்பித்ததை அடுத்து நெற்பயிர்களுக்கு இறுதியாகப் போடப்படும் உரப் பசளையை இடுவதில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. (த-17)

# அனுமதியின்றி சவுக்கு வெட்டிய ஐவர் கைதாகிப் பிணையில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலக வளாகத்தினுள் புகுந்து சவுக்கு மரக்கிளைகளை வெட்டிய குற்றச்சாட்டில் 5 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சந்தேக நபர்கள் மானிப்பாய் மற்றும் கொக்குவில் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

அத்துமீறி வளாகத்தினுள் புகுந்த 5 பேரையும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்தனர். அரச சொத்துக்களைத் திருடியதாக அவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர். வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-4)



அராலி மத்தி உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணயச் சங்கத்தின் வெள்ளிவிழாவை ஒட்டி நடத்தப்பட்ட மலர் வெளியீட்டு விழாவில் மலரின் முதல் பிரதியை யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் ஐக்கிய நாணயச் சங்கத்தின் தலைவர் வி.செல்வரத்தினம் ஆகியோர் இணைந்து வெளியிட்டு வைக்க யாழ்.மாவட்ட சிக்கன சேமிப்புக் கடன் உதவி வழங்கும் சமாசத் தலைவர் செ.இலகுநாதன் பெற்றுக் கொள்கிறார். (த-17)

# வட்டு. கலட்டி வீதிக்கு குடிதண்ணீர் வழங்கல்

## குழாய் பொருத்தப்பட்டதும் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.27

வட்டுக்கோட்டை கலட்டி வீதிக்கு இருநாள் குழாய் பொருத்தல் வேலையைத் தொடர்ந்து குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் மாவட்டப் பொறியியலாளர் எந்திரி எஸ்.செல்வகுமார் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வட்டு.கலட்டி வீதிக்கு 2011 இறுதியில் குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்காக ஆரம்ப கட்ட வேலைகள் இடம்பெற்றன.

தற்போது இறுதிக்கட்டமான ரி- சொக்கெற் பொருத்தும் பணிகள் முடிவுற்றதும் நீர் விநியோகப் பணி ஆரம்பிக்கப்படும் என்று கூறப்பட்டது.

சங்கரத்தை பத்திரகாளி கோயிலில் உள்ள தேசிய நீர் வழங்கல் கிணற்றில் இருந்து நேரடியாக குழாய் மூலம் வட்டு. கலட்டி வீதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்படவுள் ளது.

இந்த இணைப்பு வேலைக்கான சகல ஏற்பாடுகளையும் வலி.மேற்கு பிரதேச சபை வருமானப் பரிசோதகர் ரி.எஸ்.சிறிகாந்தன் மேற்கொண்டுள்ளார்.

குழாய் மூலமான குடிதண்ணீர் சேவை ஆரம்பிக்கப்பட்டவுடன் அந்த வீதியில் உள்ள 110 குடும்பங்கள் தனியிணைப்பைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-50)

# நெடுந்தீவுக்கான படகுச் சேவையை நிறுத்த வேண்டாம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

பயணிகள் குறைவு என்பதால் சேவையை நிறுத்திக் கொள்ள வேண்டாம். நீங்கள் உங்களுக்குரிய நாள்களில் ஏற்றுக் கொண்டபடி படகுச் சேவையை நடத்த வேண்டும் எனப் படகு உரிமையாளர்களிடம் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி வலியுறுத்தியுள்ளார்.

நெடுந்தீவில் இருந்து [illegible] புறப்படவேண்டிய தனியார் படகுகள் பயணிகள் எண்ணிக்கை குறைவாக இருக்கும் பட்சத்தில் சேவையை நடத்த முன்வருவதில்லை. இதனால் சேவைகளில் [illegible] கஸ்டங்கள் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டது. இதனையடுத்துப் பிரதேச செயலர் படகு உரிமையாளர்களுடன் தொடர்பு கொண்டு பேசினார். மக்களின் பிரயாணம் அத்தியாவசியமானது. பயணிகள் குறைவதா நட்டம் ஏற்படும் எனக் கூறி சேவையை நிறுத்த வேண்டாம். சில சமயங்களில் பயணிகள் குறையலாம். ஆனால் தினமும் கூடுதலான மக்கள் பயணிக்கிறார்கள் என்று படகு உரிமையாளர்களிடம் அவர் கூறினார். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவுக்கு எதிராக சசிகலாவை தூண்டவில்லை

## மறுக்கிறார் கருணாநிதி

சென்னை, டிசெ.27

''ஜெயலலிதாவுக்கு, எதிராக தன்னை கருணாநிதி தூண்டிவிட்டார் என்று பெங்களூர் நீதிமன்றத்தில் சசிகலா கூறியுள்ளது அப்பட்டமான பொய்' என்று தி.மு.க., தலைவர் கருணாநிதி தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஜெயலலிதாவுக்கு எதிராக, பெங்களூர் நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும், சொத்துக் குவிப்பு வழக்கில், நீதிமன்றத்தின் கேள்விகளுக்கு பதில் அளித்த சசிகலா, ஜெயலலிதாவுக்கு, எதிராக கருணாநிதி என்னை தூண்டிவிட்டார் என்று கூறியுள்ளது கலப்படமற்ற, அப்பட்டமான பொய்.

சசிகலா கூறுவதற்கு, எவ்வித ஆதாரமும் இல்லை. நீதிமன்றத்திலேயே, தவறான தகவலை அவர் கூறியுள்ளார். சுதாகரனின் திருமணத்தை ஜெயலலிதா நடத்தவில்லை; பெண் வீட்டார்தான் செலவழித்து நடத்தினர் என, சசிகலா சொல்லியிருப்பது எந்தளவுக்கு பொய்யான தகவலோ, அதுபோலதான் என் மீது, சொல்லியிருக்கும் குற்றச்சாட்டும்- என்றுள்ளது. (வ)

# 8 ஆவது ஆண்டு சுனாமி நினைவு தினம்: உயிரிழந்தோருக்கு மெரீனாவில் அஞ்சலி

சென்னை, டிசெ.27

தமிழகத்தை சுனாமி தாக்கியதில் உயிரிழந்தவர்களின் 8 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி சுனாமி ஆழிப்பேரலை தமிழகத்தைத் தாக்கியதில் குமரி மாவட்ட மீனவ கிராமங்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின.

சென்னை, கன்னியாகுமரி, மணக்குடி, குளச்சல், கொட்டில்பாடு பகுதியைச் சேர்ந்த 800 இற்கும் மேற்பட்டோர் சுனாமியில் சிக்கி உயிரிழந்தனர். அவர்கள் இறந்ததன் 8 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.



சென்னை, மெரினா கடற்கரையில் சுனாமியில் சிக்கி உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் இந்திய மனித உரிமைகள் பாதுகாப்பகம் சார்பில் 100 இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். சுனாமியில் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகு வர்த்தி ஏந்தி மௌன ஊர்வலமாகச் சென்றனர்.

இதையொட்டி குமரி மாவட்ட கடற்கரை கிராமங்களில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் நினைவு திருப்பலி நடத்தப்பட்டது.

மணக்குடி, குளச்சல், கொட்டில்பாடு, கன்னியாகுமரியில் மௌன ஊர்வலமும் அஞ்சலி நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன. மேல மணக்குடி புனித மாதா ஆலயத்தில் நேற்றுக் காலை நினைவுத் திருப்பலி இடம் பெற்றது.

அதைத்தொடர்ந்து சுனாமியில் உயிரிழந்தவர்கள் புதைக்கப்பட்ட நினைவிடத்துக்கு ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மெழுகு வர்த்தி ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர்.

அங்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். இதே போல கொட்டில்பாடு கே.எஸ். எஸ்.எஸ். பகுதியில் இருந்து நேற்றுக் காலை மௌன ஊர்வலம் ஆரம்பமாகியது. 199 பேர் ஒரே இடத்தில் புதைக்கப்பட்ட நினைவுத் தூபியை ஊர்வலம் அடைந்ததும் அங்கு பொது மக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (வ)

# பட்டாசு ஆலையில் தீ

## இயக்குநர் உட்பட 4 பேர் உயிரிழப்பு

சேலம், டிசெ.27

சேலம் அருகே பட்டாசுத் தொழிற்சாலைக் கிடங்கில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில், பட்டாசு ஆலை இயக்குநர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

சேலம் அருகே மேச்சேரி செங்காட்டூர் என்ற இடத்தில் சாந்தி என்பவருக்குச் சொந்தமான பட்டாசுத் தொழிற்சாலையின் கிடங்கு ஒன்று உள்ளது. அந்தக் கிடங்கில் திடீரென நேற்று முன்தினம் தீவிபத்து ஏற்பட்டது. கிடங்கில் ஏற்பட்ட தீ மள மளவென எரிந்தது.

சம்பவம் நடைபெற்றபோது கிடங்கில் 15 பேர் இருந்தனர். கிடங்கில் உள்ள பட்டாசுகள் பலத்த சத்தத்துடன் வெடித்துச் சிதறிய வண்ணம் இருந்ததால் அந்தப்பகுதியே பரபரப்புடன் காணப்பட்டது.

தீயணைப்புப் படையினர் கடுமையாக முயன்று பலரை உயிருடன் மீட்டனர். இருப்பினும் உரிமையாளர் உட்பட 4 பேர் தீயில் கருகி உயிரிழந்தனர்.

மீட்கப்பட்டவர்களில் 4 பேர் படுகாயத்துடன் சேலம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மற்ற 7 பேரும் இலேசான காயமடைந்தனர். (வ)

### மீனவர்கள் மீதான தாக்குதல்:

# மத்திய அரசின் தீவிர நடவடிக்கை தேவை

## மீண்டும் வலியுறுத்துகிறார் கருணாநிதி



சென்னை, டிசெ.27

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் நடத்தும் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க இனியாவது மத்திய அரசு தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை வலியுறுத்தியுள்ளார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-


நாகை மற்றும் இராமேஸ்வரம் பகுதிகளில் இருந்து கடலுக்குச் செல்லும் தமிழக மீனவர்கள்மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதென்பது தணியாத துன்பத் தொடர் கதையாகவே உள்ளது.

இதைப்பற்றித் தமிழகத்தின் சார்பில் மத்திய அரசுக்குப் பல தரப்பினரும் முறையிட்ட பின்னரும், இந்தக் கொடுமை குறைந்தபாடில்லை.

மத்திய அரசின் சார்பில் இலங்கை அரசிடம் வலியுறுத்துகின்றபோது, அவ்வப்போது கைது செய்கின்ற தமிழக மீனவர்களை இலங்கை அரசு விடுதலை செய்த போதிலும், மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுகின்ற கடுமையான நிலை தான் நீடிக்கிறது.

இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்க இனியாவது மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீண்டும் ஒரு முறை மத்திய அரசை வற்புறுத்துகிறேன்- என்றுள்ளது. (வ)

### கூடங்குளத்தில் 144 தடை உத்தரவு நீடிப்பு



கூடங்குளம், டிசெ.27

கூடங்குளம் அணு உலைப் பகுதியில் மேலும் ஒரு மாத காலத்துக்கு 144 தடை உத்தரவு நீடிக்கப்பட்டிருக்கிறது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக்கோரி தொடரும் போராட்டத்தால் அந்தப்பகுதியை சுற்றி 144 தடை உத்தரவு ஓராண்டு காலமாக அவ்வப்போது பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

கடந்தமுறை நீடிக்கப்பட்ட தடை உத்தரவு கடந்த 23 ஆம் திகதி மாலையுடன் முடிவடைந்தது.

இதையடுத்து, இந்தத் தடை உத்தரவை மேலும் ஒரு மாதத்துக்கு அதாவது கடந்த 23 ஆம் திகதி மாலை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி 22 ஆம் திகதி வரை நீடிக்க மாவட்ட ஆட்சியாளர் உத்தரவிட்டுள்ளார். கூடங்குளம் அணு உலையைச் சுற்றி 7 கி.மீ. தொலைவுக்கு இந்தத்தடை உத்தரவு நடைமுறையில் இருக்கும். (வ)

# வெள்ளை நிற ஆந்தை தமிழகத்தில் சிக்கியது



தமிழ்நாட்டில் அரிய வகை வெள்ளை நிற ஆந்தை ஒன்று பிடிபட்டுள்ளது. காஞ்சிபுரம் பஸ் நிலையம் அருகில் மேற்கு ராஜ வீதியில் வீதியோரத்தில் ஒரு வெள்ளை நிற அதிசய ஆந்தை பறக்க முடியாமல், சோர்வுடன் உட்கார்ந்திருந்தது.

அந்த அதிசய ஆந்தையை காகங்கள் கூட்டமாக கொத்தித் தாக்க முற்பட்டதைப்பார்த்த அந்தப் பகுதியைச் சேர்ந்த அரிசி வியாபாரி பாலமுருகன் என்பவர் காகக்கூட்டத்தை விரட்டி விட்டு ஆந்தையை உயிருடன் மீட்டார். பின் அதை பத்திரமாக தனது வீட்டில் வைத்திருந்தார்.

அதிசய ஆந்தையைப் பற்றி தகவல் அறிந்த அந்தப் பகுதியைச் சேர்ந்த அதிகமான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆச்சரியத்துடன் ஆந்தையை பார்த்துச் சென்றனர். இதையடுத்து பாலமுருகன், அந்த அதிசய ஆந்தையை காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்ட வனத்துறையினரிடம் ஒப்படைத்தார்.

இது குறித்து வனத்துறை அதிகாரி ஒருவர் கூறும் போது, 'வெள்ளை நிற ஆந்தை அபூர்வமான உயிரினங்களில் ஒன்று. அந்த ஆந்தை வெளிநாடுகளில் அதிகம் வாழ்ந்து வருகின்றன. தற்போது இவ்வகை ஆந்தை இனம் அழிந்து வருகிறது. அதைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். தற்போது பிடிபட்டுள்ள வெள்ளை நிற ஆந்தையின் உடலில் காயம் ஏற்பட்டு உள்ளதா? என்று கண்காணித்து வருகிறோம்.

காயம் ஏதாவது இருந்தால் கால்நடை மருத்துவமனையில் சிகிச்சை அளித்து, காட்டுப் பகுதிக்கு கொண்டு சென்று விட்டு விடுவோம் -என்றார். (வ)

# மீனவர்களின் பிரச்சினைக்கு புதிய ஒப்பந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## காரைக்கால் வடக்கு தொகுதி சட்டசபை உறுப்பினர் கோரிக்கை

சென்னை, டிசெ.27

இலங்கை இராணுவத்தால் தமிழக காரைக்கால் மாவட்ட மீனவர்களுக்கு ஏற்படும் தொடர் பிரச்சினைக்கு மத்திய, மாநில அரசுகள் புதிய ஒப்பந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காரைக்கால் வடக்கு தொகுதி சட்டசபை உறுப்பினர் திருமுருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில தினங்களுக்கு முன்னர்தான் நாகப்பட்டினம் மற்றும் காரைக்காலைச் சேர்ந்த சுமார் 40 மீனவர்களை இலங்கை இராணுவத்தினர் கைது செய்து 10 நாள் சிறைக்கு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

> கடந்த சில ஆண்டு களுக்கு முன் விடுதலைப் புலிகளுக்கு மீனவர்கள் உதவுகிறார்களோ என்ற சந்தேகத்தில், இலங்கை கடற்படையினர் பிரச்சினைகளை மேற்கொண்டு வந்தனர்.

அந்தக் காயம் மறைவதற்குள் மீண்டும் 20 இற்கும் மேற்பட்ட மீனவர்களைச் சிறைப் பிடித்துச் சென்றிருப்பது கண்டனத் துக்குரியது.

அடிக்கடி தொடரும் இந்த கசப்பான சம்பவத்துக்கு, தமிழகம், புதுச்சேரி மற்றும் மத்திய அரசுகள் இணைந்து, மீனவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கை மீனவர்கள் இந்தியாவிலும், இந்திய மீனவர்கள் இலங்கையிலும் குறிப்பிட்ட காலத்துக்கு மீன் பிடித்துக் கொள்ளலாம் என்ற புதிய ஒப்பந்த முறையை இரு நாட்டு அதிகாரிகள் மற்றும் அரசியல் தலைவர்கள் பேசி உடனடி தீர்வு காணமுன் வரவேண்டும்.


கடந்த சில ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளுக்கு மீனவர்கள் உதவுகிறார்களோ என்ற சந்தேகத்தில், இலங்கை கடற்படையினர் பிரச்சினைகளை மேற்கொண்டு வந்தனர். தற்போது அந்த பிரச்சினை இல்லாதபோது, தேவையற்ற கைதை இலங்கை இராணுவம் கைவிட வேண்டும்.

மேலும் இது குறித்து, மத்திய இணை அமைச்சர் நாராயணசாமியிடம் பேசியுள்ளேன். எனவே மீனவர்கள் கவலை கொள்ள வேண்டாம் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீ விபத்துகள்

## பிலிப்பைன்ஸில் 7 பேர் உடல் கருகிச் சாவு



மணிலா, டிசெ.27
பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் நேற்றுமுன்தினம் இருவேறு இடங்களில் ஏற்பட்ட தீ விபத்துகளில் 7 பேர் உயிரிழந்தனர். வடக்கு மணிலாவில் குடிசைப் பகுதியிலும், பழமையான அடுக்குமாடி கட்டடம் ஒன்றிலுமே தீ விபத்து ஏற்பட்டது.

குடிசைப் பகுதியில் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்பு வீரர்கள் சென்றனர். அவர்கள் தாமதமாக வந்ததாகக் கூறி, பொதுமக்கள் அவர்களுடன் மோதலில் ஈடுபட்டனர். இதனால் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நீண்ட நேரம் சென்றது. இந்த மோதலில் ஒருவர் உயிரிழந்தார்.

''மிகவும் நெரிசல் மிகுந்த இடம் என்பதால் அங்கு செல்ல சிறிது தாமதமாகிவிட்டது. தீயணைப்பு வீரர்கள் தங்களைக் காத்துக்கொள்ளவே போராட வேண்டியிருந்தது. அதனால் தீயைக் கட்டுப்படுத்த நீண்ட நேரம் சென்றது'' என்று தீயணைப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுக்குமாடி கட்டடத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின்போது அதிக அளவு மின் விளக்குகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதனால் மின் கசிவு ஏற்பட்டு தீப்பற்றியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 27 பேர் சாவு:

## கஜகஸ்தானில் இராணுவ விமானம் ஒன்று தரையில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

அஸ்தானா, டிசெ.27
கஜகஸ்தானில் நடந்த இராணுவ விமான விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர்.


கஜகஸ்தானுக்கு சொந்தமான ஏ.என்.-72 என்னும் இராணுவ விமானமே உஸ்பெகிஸ்தான்-கஜகஸ்தான் எல்லையில் ஷைம்கென்ட் நகர் அருகே விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் எல்லைப் பாதுகாப்பு படையின் தற்காலிக தலைவர் உட்பட 20 வீரர்கள், விமான ஊழியர்கள் 7 பேர் என மொத்தம் 27 பேர் உயிரிழந்தனர்.

விபத்து நடைபெற்றதை உறுதிப்படுத்தியுள்ள கஜகஸ்தான் தேசிய பாதுகாப்பு குழு, விபத்துக் குறித்து மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை.

விமான விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





10 ஆயிரம் பேர் திரண்ட வத்திகான் புனித பீற்றர் பேராலயத்தில் பரிசுத்த பாப்பரசர் ஆசீர்வாதப்பர் பெனடிக்ட் நத்தார் தின உரையாற்றினார்.

## தீ விபத்தில் மாணவர்கள் மூவர் சாவு

பீஜிங், டிசெ.27
சீனாவின் அன்ஹுய் மாகாணத்தில் மாணவர் தங்கும் விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 பல்கலைக் கழக மாணவர்கள் உயிரிழந் தனர்.

''விபத்து ஏற்பட்டபோது 7 மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்தனர். அவர்களில் 4 பேர் மீட்கப்பட்டனர். 3 பேர் உயிரிழந்தனர். காயமடைந்த 2 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்'' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இணைய பாவனைக்கு சீனாவில் புதிய கட்டுப்பாடுகள்

பீஜிங், டிசெ.27
இணையப் பாவனையாளர்கள் தங்களுடைய பெயரைப் பதிவு செய்து கொள்ளும் போது உண்மையான பெயரைப் பயன்படுத்த வேண்டும் என்று சீனா அறிவித்துள்ளது.

இணையப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில், ஏற்கனவே நடைமுறையில் உள்ள விதிகளுடன் புதிதாக இந்தத் திருத்தமும் இணைக்கப்பட்டுள்ளதாக சீன அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இணையத்தளப் பாவனைக் காக பதிவு செய்யும்போது அரசால் வழங்கப்பட்ட அடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

இவ் வாறான கட்டுப்பாடுகள் இணையத் தளப் பாவனையை மேலும் முடக்குவதாக அமையும் என்று இணையப் பாவனையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## 'குட்டிப் பாப்பா வேண்டும்'



லண்டன், டிசெ.27
நத்தார் கொண்டாட்டங்களின் போது நத்தார்த் தாத்தா இனிப்பு மற்றும் பரிசுகளை வழங்கி குழந்தைகளை மகிழ் விப்பார்.

பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று நத்தார்த் தாத்தாவிடம் எதைப் பரிசாக கேட்பீர்கள்? என்பது குறித்து குழந்தைகளிடம் ஆய்வொன்றை மேற்கொண்டது.

மூன்று வயது முதல் 12 வயதுடைய சிறுவர்களிடம் இந்த கேள்வி கேட்கப்பட்டது.

அதற்குப் பெரும்பாலான சிறுவர்கள் அளித்த பதில் ''எனக்கு தம்பி பாப்பா வேண்டும், தங்கை பாப்பா வேண்டும்'' என்பது தானாம்.

அதற்கு அடுத்து ''எனக்கு அப்பா வேண்டும், அம்மா வேண்டும்'' எனச் சில சிறுவர்கள் கூறியுள்ளனர்.

ஒரு சில குழந்தைகளே விளையாட்டுப் பொருள்களைக் கேட்டுள்ளனர்.

## ஹமாஸின் தாக்குதல்கள் விதிகளுக்கு முரணானவை

### குற்றம்சாட்டுகிறது மனித உரிமை கண்காணிப்பகம்

நியூயோர்க், டிசெ.27
இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கம் நடத்திய தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களை மீறும் வகையில் உள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

காஸாவில் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவிலாளர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்கள் சர்வதேச சட்டங்களை மீறும் செயல் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் கடந்த வாரம் குற்றம்சாட்டியிருந்தது.

இந்தநிலையில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் ஏறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமை பலஸ்தீன பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒன்றாக அமைந்துள்ளது என்று கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த மாதம் எட்டு நாள்கள் நீடித்த வன்முறைகளின் போது சுமார் 170 பலஸ்தீனியர்களும், ஆறு இஸ்ரேலியர்களும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## நத்தார் தினத்தன்று தேவாலயம் மீது சூடு

### பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த 6 பேர் பரிதாபமாகச் சாவு

அபுஜா, டிசெ.27
நத்தார் தினச் சிறப்பு பிரார்த்தனை நடந்து கொண்டிருந்த போது நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவம் நைஜீரியாவில் இடம்பெற்றுள்ளது.

நைஜீரியாவின் யோபே மாநிலத்தை சேர்ந்த பேரி என்ற கிராமத்தில் உள்ள தேவாலயத்தில் நத்தார் பண்டிகையையொட்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது.

பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் உள்ளே நுழைந்த இனந்தெரியாதவர்கள் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதில் தேவாலய போதகர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட குழு தேவாலயத்துக்கும் தீ வைத்து விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகக் கிராம வாசிகள் தெரிவித்தனர்.

## வெந்நீர் பனிமூட்டமாக மாறும் அதிசயம்



சைபீரியாவில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது. சைபீரியாவின் கிழக்குப் பிராந்தியங்களில் தற்போது மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இணையத்தளங்களில் ஒரு காணொலிக்காட்சி வெளியாகிப் பலரையும் கவர்ந்துள்ளது. பாத்திரமொன்றில் இருந்து ஊற்றப்படும் நீர் நிலத்தில் சிந்துவது வழமையான நிகழ்வு. ஒருவர் ஜன்னல் வழியாக ஊற்றிய வெந்நீர் பனிமூட்டமாக மாறும் காட்சியே அந்த காணொலியில் பதிவாகியுள்ளது.

சைபீரியாவின் நொவொசிபிரிஸ்க் பகுதியில் உள்ள குடியிருப்புத் தொகுதியில் வசித்து வந்த நபரே இந்தக் காட்சியைத் தனது கைத் தொலைபேசி காமராவில் வீடியோவாகப் பதிவு செய்துள்ளார்.



எகிப்தின் புதிய அரசியலமைப்புக்குக்கு மக்களின் அமோக வரவேற்புக் கிடைத்ததை அடுத்து ஜனாதிபதி மொஹமட் முர்சியின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

எதிர்க் கட்சிகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் இடம்பெற்ற மக்கள் வாக்கெடுப்பில் புதிய அரசியலமைப்புக்கு சார்பாக 63.8வீத வாக்குகள் கிடைக்கப்பெற்றுள்ளன.


ஜனாதிபதியின் அதிகாரத்தை எல்லையற்றதாக மாற்றும் வகையிலேயே புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சுமத்தியிருந்தன.

## சிறுவர்களை ஆபாசமாகப் படம் பிடித்த பாதிரியார் கைது

சிறுவர்களை ஆபாசமாகப் படம் எடுத்த பாதிரியார் ஒருவர் மாண்ட்ரியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பீக்கன்ஸ் பீல்டு நகரில் உள்ள கேண்ட்டர்பரி மறைமாவட்டத்திற்கு சொந்தமான தூய எட்மண்ட் தேவாலயத்தில் பாதிரியாராக இருந்தவரே கைது செய்யப்பட்டுள்ளார். அவருடைய கணினியிலிருந்து 2000 ஆபாசப்படங்களை கைப்பற்றி பொலிஸார் அவரைப் நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நத்தார் தினத்தை முன்னிட்டு இந்தியா, ஒரிசா மாநிலத்தில் பூரி கடற்கரையில் மணலால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள்.

# வீதியில் வீழ்ந்தது விமானம்

## இருவர் சாவு; 11 பேர் காயம்

ரங்கூன், டிசெ.27

மியன்மாரில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டபோது வீதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானாது. இதில் 2 பேர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.

மியன்மாரின் யாங்கூன் நகரிலிருந்து ஹீஹோ என்ற நகருக்கு 65 பயணிகள் மற்றும் 6 சிப்பந்திகளுடன் விமானம் ஒன்று புறப்பட்டது. விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக திடீரென விமானம் வீதியில் தரையிறக்கப்பட்டபோது விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வீதியில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். 11 பேர் காயமடைந்தனர்.



# பழங்குடியினருடன் இராணுவம் மோதல்

## யேமனில் 17 பேர் சாவு

சனா, டிசெ.27

யேமனில் இராணுவத்துக்கும், எண்ணெய்க் குழாய்களை வெடி வைத்துத் தகர்க்கும் பழங்குடியினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலில் 7 இராணு வீரர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.

வளைகுடா நாடுகளில் ஒன்றான யேமனில் எண்ணெய் விநியோகிக்கப்படும் குழாய்களை பழங்குடியினத்தைச் சேர்ந்தவர்கள் அடிக்கடி சேதப்படுத்துகின்றனர்.

இந்தக் குழாய்களை வெடி வைத்துத் தகர்த்து எண்ணெய் திருடுவதை அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இதனால் அரசுக்குப் பெரும் இழப்பு ஏற்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் மட்டும் இவ்வாறு ஏற்பட்ட இழப்பின் மதிப்பு ரூ.5,500 கோடியாகும்.

இதையடுத்து எண்ணெய் திருடுவோருக்கு எதிராக மாரிப் மாகாணத்தில் உள்ள ஹபாப் பள்ளத்தாக்கில் இராணுவம் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது. இரு தரப்புக்கும் இடையில் நடைபெற்ற கடும் சண்டையில் 7 இராணுவ வீரர்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர். 18 பழங்குடியினர் காயமடைந்தனர்.

# பலஸ்தீனப் பகுதி பல்கலைக்கழகத்துக்கு உரிமை கோருகிறது இஸ்ரேல் அரசு

ஜெருசலேம், டிசெ.27

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள ஏரியல் பல்கலைக்கழகத்துக்கு இஸ்ரேல் அரசு உரிமை கோரி தனது நாட்டின் பல்கலைக்கழக அங்கீகாரத்தை அளித்துள்ளது.

இந்தப் பல்கலைக்கழகம் மேற்குக் கரையில் உள்ள இஸ்ரேலியர்கள் குடியேற்றப்பகுதியில் அமைந்துள்ளது.



இதுகுறித்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவிக்கையில், ''இஸ்ரேலுக்கு மேலும் ஒரு பல்கலைக்கழகம் கிடைத்துள்ளது. இது நாட்டின் உயர் கல்வியை மேம்படுத்த உதவும்'' என்றார்.

ஆனால் இஸ்ரேலில் உள்ள 7 பல்கலைக்கழகங்களை நிர்வகிக்கும் இஸ்ரேல் உயர் கல்வி அமைச்சு, அரசின் இந்த முடிவுக்கு அதிருப்தி தெரிவித்திருந்தது.

பார் இலான் பல்கலைக் கழகத்தின் இணைப்புக் கல்லூரியாக 1982ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஏரியல் கல்வி நிறுவனத்தில், மருத்துவம், பொறியியல், சமூக அறிவியல், அறிவியல் பாடங்கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதில் 12,000 மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

பலஸ்தீனப் பகுதிகளில் புதிய குடியேற்றங்களை ஏற்படுத்த இஸ்ரேல் நடவடிக்கை எடுத்து வருகிறது. அதற்கு சர்வதேச அளவில் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்தநிலையில் மேற்குக் கரையில் உள்ள கல்வி நிறுவனத்துக்கு இஸ்ரேல் பல்கலைக்கழக அங்கீகாரம் அளித்துள்ளது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை



நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தெய்வானைப் பிள்ளை (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பூதத்தம்பி - பூரணம்தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லப்பா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற செல்லப்பா கந்தையாவின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்),சுதாகரன் (கமநல அபிவிருத்தி திணைக்களம், வவுனியா),மீனலோஜினி (கனடா), கிருபாகரன் (லண்டன்) ,கிருஸ்ணவேனி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மாலா,குலநாயகி ,கலையரசி, முருகரட்ணம்,ஜெயதீபா, பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ் சென்றவர்களான கதிரவேலு, கந்தையா மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திலகவதி,நாகபூசனி,குமாரசுவாமி ஆகியோரின் மைத்துனியும் அபிமன்யு, அபிவர்மன், கரிகரன், சிவசங்கரி, கரிசங்கர், சாரங்கன்,சாரங்கா,பைரவி, கஜானன், அச்சுதன், கிருத்திகா, ஆர்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வியாழக்கிழமை இன்று (27.12.2012) நண்பகல் 12.00 மணிக்குஅவரது இல்லத்தில்நடைபெற்று பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

தொடர்பு: (சி/5014) (8.4)
0776993861,0778279997

பிள்ளைகள்.

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர் ஆனந்தர் யோகேஸ்வரி

தோற்றம் 06.03.1953

மறைவு 29.11.2012

கடந்த 29.11.2012 அமரத்துவம் அடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் ஆனந்தர் யோகேஸ்வரி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (27.12.2012) வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறுகின்றன. சபிண்டீகரண கிரியைகள் எதிர்வரும் 29.12.2012 சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

சிறுவிளான், இளவாலை. (27255)(2.6) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
27/12/2012



# நாட்டை நாசமுற வைக்கும் அரசின் போக்கு....

தமிழில்:- வி.எஸ்.ரி.
மூலம்- லங்காதீப

கொழும்பில் மோட்டார் கார் பந்தயம் நடத்தப்படுவது, அதில் ஆர்வமுள்ள ஒரு தரப்பினருக்கு மகிழ்ச்சி தரும் ஒன்று. அதேசமயம் தமது வழமையான பாதையில் பயணிக்க இயலாது என்பது மற்றொரு தரப்பினருக்குச் சிரமமாக அமைகிறது. அதற்கு மேலாக, வழமையான போக்குவரத்துப் பாதைகளை மூடி, விபத்துக்கள் ஏற்படாது தடுக்கும் பெரும் பொறுப்பை நிறைவேற்ற பாதுகாப்புத் தரப்பினர் கடும் சிரமங்களை எதிர்நோக்க நேர்கிறது.

மோட்டார் வாகனமொன்றை வாங்குவதற்கான மத்திய தர வர்க்கத்தினரின் கனவைக் கனவாகவே ஆக்கும் விதத்தில் சிறிய ரக மோட்டார் வாகனங்களுக்கான இறக்குமதித் தீர்வையை அதிகரித்துள்ள அரசு, மோட்டார் கார் பந்தயங்களுக்கான பெரும் விலை கொண்ட சொகுசுக்கார்களுக்கான இறக்குமதித் தீர்வைக்கு வரிச் சலுகை வழங்கியுள்ளது. அந்தச் சலுகை மூலம் அரசுக்கு இருநூறு மில்லியன் ரூபாவரை இழப்பு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நடத்தப்பட்ட மோட்டார் கார் பந்தயத்துக்கான பாதை ஒழுங்குகளை மேற்கொள்ளவும் பொதுமக்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளை ஏற்படுத்தவும் பெருமளவு பணம் செலவழிக்கப்பட்டது. இதுவோர் அனாவசிய செலவினம் என பல தரப்புக்களாலும் விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை அரசு கடும் நிதி நெருக்கடியில் சிக்கியிருப்பதால், சகல அமைச்சுக்கள், அமைச்சுக்களின் கீழ்வரும் அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு எதனையும் அனுமதிக்க வேண்டாமென நிதி அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

அரச ஊழியர்கள் தமக்குரிய பணியை தமது கடமை வேளையில் தாமதமின்றி உரிய வகையில் மேற்கொள்ள முடிந்தால் மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்க வேண்டிய நிலை ஏற்படாது என்பது உண்மையே. ஆயினும் அரசின் பெரும் வேலைத்திட்டங்களை உரிய வேளையில் உரிய முறையில் பூரணமாக செய்து முடிக்க வேண்டுமானால் மேலதிக வேலை நேரக் கொடுப்பனவு வழங்கியே தொடர்புபட்ட ஊழியர்களை மேலதிக வேலை செய்விக்க வேண்டி ஏற்படும். ஆனால் அரசோ அனாவசியமான ஆடம்பரச் செலவுகளுக்கு பெருந்தொகை பணத்தைக் கட்டுப்பாடின்றிச் செலவு செய்வதால் அரச ஊழியர்களுக்கு மேலதிக வேலைக்காக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கி வேலைகளைப் பூர்த்தி செய்விக்க நிதிப் பற்றாக்குறையால் சிரமமுற நேர்கின்றது.

அதுமட்டுமன்றி இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்ச்சி நிலையில் அரச ஊழியரொருவர் தமது மாதாந்த வேதனத்துக்கு மேலதிகமாக மேலதிக நேரப் பணிக்கான தொகையொன்றையும் பெறமுடிந்தால் மாத்திரமே அவரால் ஓரளவுக்காவது தமது குடும்பத்துப் பொருளாதாரத் தேவையை சமாளிக்க இயலும் என்பது யதார்த்த நிலை. இவ்விதம் அரசு, அரச ஊழியர்களுக்கான மேலதிக நேர வாய்ப்பை நிறுத்துவது நடுத்தர, கீழ்மட்ட அரச ஊழியர்களது வயிற்றில் அடிக்கும் செயற்பாடாகும். அதேசமயம் இலங்கை போக்குவரத்துச் சபை போன்ற அரச நிறுவனங்கள் சிலவற்றின் ஊழியர்களுக்கு அவர்களது மாதாந்த வேதனமே உரிய வேளையில் வழங்கப்படாது பின்தள்ளிப் போடப்படுவதாகவும் பரவலாகக் குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இத்தகைய பல தரப்பட்ட நிதிப் பிரச்சினைகளுக்கு அரச ஊழியர்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ளமைக்கான அடிப்படைக் காரணம், அரசு அனாவசிய, ஆடம்பரச் செலவினங்களை நிறுத்திக் கொள்ளாத அல்லது கட்டுப்படுத்திக் கொள்ளாமையே ஆகும்.

பொதுமக்களது அத்தியாவசிய சேவைகளிலொன்றாகக் கருதப்படும் பொலிஸ் சேவையைச் சேர்ந்த பாதுகாப்புத் தரப்பு பொலிஸார் தமது கடமைகளை விரைவாகவும், செயற்றிறன் மிக்கதாகவும் மேற்கொள்ள வேண்டியவர்கள். ஆயினும் அவர்கள் தமது கடமைகளைப் பொறுப்புணர்வுடன் ஆற்றத் தயாராயிருந்தும், அவர்களது கடமைகளை உரிய வகையில் விரைவாக மேற்கொள்வதற்கு அவசியமான அடிப்படை வசதிகள் திருப்திகரமான வகையில் செய்து கொடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சாட்டப்படுகிறது. அந்த விடயத்திலும் அரசு போதிய நிதி வசதியின்மையையே காரணமாக முன்வைத்து வருகின்றது. இதனால் பொதுமக்களுக்கான பாதுகாப்பு கேள்விக்குறியதாக அமைய நேர்கிறது.

இவை யாவும் நாம் கேள்விப்பட்ட, தெரிந்துகொள்ள முடிந்த பிரச்சினைகள் மட்டுமே. வெளியில் தெரியவராத இது போன்ற பல சிக்கல்கள், பின்னடைவுகள் அரச நிர்வாகத்துறைகளில் நிலவக் கூடும். இவற்றைத் தெளிவாகப் புரிந்துகொண்டு அதற்கேற்ப மாற்று வழிகள் கடைப்பிடிக்கப்படாதவிடத்து அரசு நாட்டின் நிதித் துறையை சிக்கலற்ற விதத்தில் நிர்வகிப்பது சிரமமாகவே அமையும்.

இந்த அரசு அனாவசியமான விதத்தில், ஆடம்பர நோக்கில் மேற்கொள்ளும் நிதிச் செலவினம் மோட்டார் கார் பந்தயங்களை நடத்துவதால் மட்டுமேயென்பதல்ல. இதுவோர் உதாரணம் மட்டுமே. நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைக் கையகப்படுத்தி அரசே அதனை நிர்வகிக்கும் திட்டம் கூட எந்தவித நற்பலனையும் ஈட்டித் தரவில்லை. அரசு அவ்விதம் பொறுப்பேற்று நிர்வகிக்கும் நிறுவனங்கள் மேன்மேலும் நட்டத்தை ஏற்படுத்துகின்றனவே யொழிய, இலாபமீட்டிக் கொடுப்பதாக அமையவில்லை. அரசின் அனாவசிய, ஆடம்பரச் செலவினங்கள் குறித்து நாட்டு மக்கள் தற்போது அனுபவபூர்வமாகக் கண்டு தெளிந்துள்ளனர். ஆனால் அரசு அத்தகைய அனாவசியச் செலவுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவோ, தவிர்த்துக் கொள்ளவோ தற்போதும் கூடத் தயாராயில்லை. அதேசமயம் இவை குறித்துப் பொதுமக்களும் தமது எதிர்ப்பைத் தீவிரமாக வெளிப்படுத்த முயல்வதாகவும் தோன்றவில்லை.

இத்தகைய நிலை காரணமாக சமூகத்தில் பெரும் அதிருப்தி ஏற்படத்தக்க நிலை உருவாகி வருகிறது. நாட்டின் பெரும்பாலான பொதுமக்கள் வாழ்க்கைச் செலவினப் பிரச்சினை காரணமாக சிரம வாழ்க்கை வாழ நேர்ந்துள்ள நிலையில், சமூகத்தின் ஒரு சிறு தொகையினரான உயர்மட்டத் தரப்பினர் சுகபோக வாழ்க்கை வாழ முயல்வதால் நாட்டின் பொதுமக்கள் மத்தியில் அரசு மீது அதிருப்தி நிலை அதிகரித்து வருகிறது. அத்தகைய அதிருப்தி, ஆத்திரம் எப்போது எத்தகைய ரூபத்தில் பொங்கிப் பிரவாகிக்கும் என்பதை இப்போது முற்கூட்டியே அனுமானிக்க இயலாது. அத்தகைய பொதுமக்களது அதிருப்தி, அரசு மீதான ஆத்திரமாக மாறினால் அது பெரும் அனர்த்தமொன்றாக அமையக்கூடும் என்பதையும் மறுத்துரைக்க இயலாதுள்ளது. அரசு இன்று இத்தகைய அனாவசிய ஆடம்பரச் செலவுகளுக்குத் தேவைப்படும் நிதியை வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் கடன் மூலமே ஈடுகட்டி வருகிறது. அரசினால் வெளிநாடுகளிலிருந்து இவ்விதம் கடன் பெற இயலும் வரை, நாட்டில் அரசுக்கு எதிராக எவ்வித எதிர்ப்புகளும் ஏற்படப் போவதில்லை என்பது ஒரு தரப்பாரின் வாதமாகும். ஆனால் அத்தகைய எதிர்பார்ப்புக்கூட வெறும் மாயையே எனக் கருதத்தக்க நிலை தற்போது உருவாகி வருகின்றது.

சாதாரணமாக ஒரு நாட்டின் அரசு வெளிநாட்டு அரசொன்றிடமிருந்தோ நிதி நிறுவனம் ஒன்றிடமிருந்தோ கடன் பெறுவதற்கு அந்த நாட்டு அரசின் சுயபிணை ஒப்பந்தமே போதுமானதாகும்.

இருந்த போதிலும் 'சவரின் ஹரண்டி' (Sovereign Guarantee) என்ற சுயபிணை வழங்கும் இந்த நடைமுறையூடாக இலங்கைக்கு கடன் வழங்க சீன அரசு தற்போது பின்னடித்து வருகிறது. புத்தளம் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத் திட்டத்துக்காக 8.9 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்குவதாயின் சீன அரசின் காப்புறுதி நிறுவனமொன்றிடமிருந்து காப்புறுதி பெற்றுக்கொள்ளுமாறு சீன அரசின் மின்சார நிறுவனம் இலங்கை அரசைக் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட இந்தக் கடனை சீன தேசிய மின் உபகரண கூட்டுத்தாபனமே வழங்கவுள்ளது. ஆயினும் அது சீன கைத்தொழில் மற்றும் வங்கியினால் வழங்கப்படும் கடன் என்ற விதத்திலேயே வழங்கப்படுகிறது. இந்தக் கடனுக்கான காப்புறுதிக் கட்டணமாக 627 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது. இத்தகைய நடைமுறை பூர்த்தி செய்யப்பட்டாலே குறிப்பிட்ட கடன் தொகை இலங்கைக்குக் கிட்டும். இலங்கை அரசின் சுயபிணை ஒப்பந்தம் குறித்த நம்பிக்கையீனம் காரணமாகவே சீன அரசு இத்தகைய நிபந்தனையை விதிப்பதாக இருக்கக்கூடும். இதுவரை காலமும் எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்காது இலங்கைக்குக் கடன் வழங்கி வந்த சீனாவின் தற்போதைய இப்போக்கு எதிர்காலத்தில் சீனாவிடமிருந்து கடன் பெறுவதில் இலங்கை சிரமப்படக் கூடுமென்பதைக் கோடி காட்டி நிற்கிறது.

இலங்கை அரசு தனது வழமையான போக்குக்கமைய இது விடயத்திலும் ஏதாவது நொண்டிச் சாட்டை முன்வைக்குமாயினும், இது ஒரு பின்னடைவே என்பதை நாம் புறந்தள்ளி விட இயலாது.

தம்மால் எத்தகைய பிரச்சினைக்கும் முகம் கொடுத்துச் சமாளிக்க இயலும் என்ற மேலாண்மைப் போக்குடன் செயற்படும் இலங்கை அரசுக்கு சீன அரசினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இந்தப் பிந்திய சமிக்ஞை ஓர் அபாய அறிவிப்புப் போன்றதாகும்.

இலங்கை அரசு தனது அனாவசிய, ஆடம்பரச் செலவுகளை நிறுத்தி எச்சரிக்கையுடன் செயற்படுவது குறித்துச் சிந்திக்க வேண்டிய காலம் கடந்து போய் விட்டுள்ளது. இப்போதாவது நிலைமையை உணர்ந்து வீண்விரயம், ஊழல் என்பவற்றைக் கட்டுப்படுத்தி நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறுமானால் நாட்டின் இன்றைய பின்னடைவு நிலையை விடப் பல மடங்கு சிரமத்துக்கும் துயரத்துக்கும் உட்பட வேண்டிய நிலை நாட்டு மக்களுக்கு ஏற்படும்.

நெருப்பின் சூடு அதிகரிக்கும் வரை, அடுப்பிலுள்ள பாத்திரத்தில் இருக்கும் நண்டு நீரில் நீந்தி விளையாடவே செய்யும். பாத்திரத்து நீர் சூடாகச் சூடாக நண்டின் முடிவும் நெருங்கும் என்பது பழமொழி.

இன்றைய அரசின் நிர்வாகப் போக்கும் இதனை ஒத்ததே.

பாத்திரத்து நீர் கொதிப்பதால் வெறுமனே நண்டு மட்டுமே உயிரிழக்க நேர்கிறது. ஆனால் அரசு தனது அனாவசிய, ஆடம்பரச் செலவுகளை நிறுத்திக்கொண்டு, நாட்டைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி அடையவைக்கச் செயற்படத் தவறுமானால் இந்த நாட்டுக்கும், நாட்டின் பொதுமக்களுக்கும் நாசம் ஏற்படுவதைத் தடுத்திட இயலாது.

# மருத்துவச் சான்றிதழ் மகத்துவம் காப்போம்

தென்னவன்

அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலைகளில் பெறும் மருத்துவச் சான்றிதழ் கடமைக்குத் திரும்பும் வேளையில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

சுகவீனம் காரணமாக மூன்று தினங்களுக்கு மேல் விடுமுறையில் நின்றால் வைத்தியச் சான்றிதழ், பணியாற்றும் அலுவலகத்துக்கு சமர்ப்பிப்பதற்காக பெறுகின்றனர்.

அரச திணைக்கள அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களில் கடமையாற்றுவோர் அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றிருப்பின் பணம் செலுத்தியே மருத்துவச் சான்றிதழ் பெறவேண்டும். அரச திணைக்கள அலுவலகங்கள் பல்கலைக்கழக மாணவர்கள், பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களுக்கும் வைத்தியசாலையில் இலவசமாக மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

மருத்துவச் சான்றிதழ்கள் அரச திணைக்களங்களில் பணியாற்றுவோரின் உத்தியோகத் தரம் சிற்றூழியர் தரம் என இரு வகைப்படுத்தி வழங்கப்படுகிறது. மருத்துவச் சான்றிதழ் பெறுவதற்கு ஒருவர் வைத்தியசாலையில் தங்கியிருந்து அல்லது வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றால் மட்டுமே விநியோகிக்கப்படல் வேண்டுமென்பது விதிமுறையாகும்.

விடுமுறையில் நிற்பவர் எந்தவொரு விடுமுறையாயினும் திணைக்களத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னரே விடுமுறையில் செல்ல முடியும். ஆனால் வீட்டில் நின்று தந்தி மூலம் அலுவலகத்துக்கு தகவல் அனுப்பும் நடைமுறை எமது பிரதேசத்தில் வழமையில் உள்ளது. இவரால் அனுப்பப்படும் தந்தி மூலமான தகவல் திணைக்களத் தலைவரால் நிராகரிக்கப்பட்டால் விடுமுறையில் நின்ற நாள்கள் அனைத்தும் தகவல் அனுப்பும் பணியாளருக்கு உரித்தான விடுமுறை இருப்பினும் சம்பளமற்ற விடுமுறையாக மாறலாம். பணியாளர்களுக்கு அரசினால் சுகவீனவிடுமுறை பெற சலுகை அளிக்கப்பட்டுள்ளதை பணியாளர் உரிமையாக மாற்ற முடியாது.


விதிமுறைகள் இவ்வாறு உள்ள போதிலும் பெரியளவில் இந்தச் சலுகை துஷ்பிரயோகம் செய்யப்படுவதைக் கவனிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணத்திற்கு எனக்குத் தெரிந்த ஒருவர் உறவினரின் திருமணத்துக்காக கொழும்பு செல்வதற்கும், மற்றொருவர் வயல் வேலை செய்வதற்காகவும் சுகவீனம் என தந்தி மூலம் தகவல் அனுப்பிவிட்டு தமது தேவை முடிய வைத்தியசாலையில் மருத்துவச் சான்றிதழ் பெற்று அலுவலகத்துக்கு வழங்கிவிட்டு கடமையாற்றச் சென்றுள்ளனர்.

[illegible] இல்லாமல் சுகவீன விடுமுறை பெற்றுக் கொள்வதால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் பல. உதாரணத்துக்கு பிரதேச செயலகத்தில் உணவு முத்திரை விநியோகிக்கும் பொறுப்பில் உள்ள உத்தியோகத்தர்கள் சுகவீன விடுமுறையில் நிற்பதால் அவர் கடமைக்குத் திரும்பும் காலம் வரை எத்தனையோ குடும்பங்கள் உணவுக்காக அலையும் நிலை ஏற்படும்.

ஓர் இ.போ.ச சாரதி விடுமுறையில் நிற்பதால் தற்போது டிப்போக்களில் நிலவும் சாரதிகள் தட்டுப்பாடுகளால் எத்தனையோ பயணிகள் தமது பயணத்தை மேற்கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். பறந்து திரியும் பருவத்தில் பல்கலைக்கழகத்துக்கு செல்லாதவர்களும் பரீட்சைக்கு விண்ணப்பித்து விட்டு உரிய காலத்தில் படிக்காமல் பரீட்சை எழுத முடியாதவர்களும் வைத்தியசாலை வாசலில் மருத்துவச் சான்றிதழ் பெறக் காத்திருப்பதைக் காண முடிகிறது.

வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களுக்கு மட்டுமே மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படுமென்ற விதிமுறை கடைப்பிடிக்கப்படுமாயின் நிச்சயம் உத்தியோகத்தர்களின் போலியான காரணங்கள் தவிர்க்கப்பட்டு பொது மக்களுக்கு உரிய சேவைகள் இடம்பெற வாய்ப்பு கிடைக்கும். தனியார் வைத்தியசாலைகளின் மருத்துவச் சான்றிதழ் திணைக்கள அலுவலகங்களால் ஏற்றுக் கொள்ளப்படாததால் அரச வைத்தியசாலை மருத்துவச் சான்றிதழுக்கு மவுசு அதிகம். இதனால் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவோருக்கு மட்டும் மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படல் வேண்டுமென சுகாதார திணைக்களத்தினர் தமது கட்டுப்பாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவித்து உண்மையில் சிகிச்சை பெறுபவருக்கு மாத்திரம் மருத்துவச் சான்றிதழ் வழங்க வேண்டுமென அறிவுறுத்துவார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் ஈ-பு

## மார்கழித் திருவா

## தேர்த்திருவிழா சிறப்

### நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான சிவபெருமான் தம்மை வழிபடும் அடியார்களின் குறை தீர்க்கும் பொருட்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கும் தலம் தான் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்.

இந்த ஆலயத்தில் இன்று பஞ்சரத பவனி வெகு சிறப்பாக இடம் பெறுகின்றது. "வேண்டத்தக்கது அறிவோய் நீ; வேண்டமுழுதும் தருவோய் நீ" என்பதற்கிணங்க வேண்டுவார் வேண்டுவதை ஈபவனாகிய எம் பெருமான் காரைநகர் திண்ணபுரத்திலே இன்று அடி யார்க்கருளும் பெருமானாக தேரிலே எழுந்தருளுகின்றார் .

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியாக விளங்கும் சிவன் இந்த மார்கழித் திருவெம்பாவைக் காலத்தில் பக்தர்களுக்கருளும் பரம கருணா நிதியாகக் காட்சி தருகின்றார். ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் தில்லைச் சிற்றம்பலத்திலே தீயாடும் கூத்தனாக இன்று அருட் காட்சி தந்தரு வேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குரு முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய
சுவாமிகள் இரண்டாவது குரு மஹாசந்நிதானம்.

### பஞ்சரத பவனி காண வாரீர்!

ஈழத்துச் சிதம்பரம் என அடியார்களால் போற்றப்பட்டு வரும் திண்ணபுரத்துச் சுந்தரேசுவரர் ஆலயத்தில், திருவாதிரை உற்சவத்தின் உயர்விழாவான இன்று நடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமைகிறது.





250 ஆண்டுகள் பழமை வாய்ந்த இவ் வாலயத்தில் திருவாதிரை விழா நீண்டகாலமாக சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆலயம் எமது முன்னோர்களால் கட்டுவிக்கப் பட்டது. பின்னர் தொடர்ந்து காலத்துக்கு காலம் இவ் வாலயம் புனரமைக்கப்பட்டு 8 தடவைகள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அதே போன்று, ஆலயத்தினுடைய திருப்பணிகளை மேற் கொள்வதற்கு சிவ பக்தர்கள் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது எமது பெரு விருப்பம் ஆகும்.

இந்த ஆலயத்தில் மூன்று தடவைகள் நடைபெறும் மஹோற்சவத்தில் சாந்தீக மஹோற்சவமாகிய திருவெம்பாவை உற்சவத்தைக் கண்டு தரிசிக்கும் அடியார்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களோடும் வாழ எம் பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுவதில் பேருவகை அடைகிறோம்.

ஆதீனகர்த்தாக்கள்,
ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

### தில்லைக்கூத்தனின் திருவருள் கூட்டுவதாக



மார்கழி மாதம் தேவர்களுக்குப் புலரிக் காலமாகும். அக்காலத்தில் மக்கள் வைகறையில் துயில் நீங்கிநீராடி மலர் கொய்து சிவபெருமான் திருவடிகள் மீது தூவி வழிபாடு செய்வர். சிவ வழிபாட்டிற்கு திருவெம்பாவை பத்து நாள்களும் சிறந்ததாகும். அதிலும் திருவாதிரை நாள் மிகச் சிறந்ததாகும். மார்கழியில் வரும் திருவாதிரை நாள் நடேசப் பெருமானுக்கு சிறப்பான விழா ஆதலால் அத்திருநாளில்நடேசப் பெருமானுக்கு விசேட அபிசேகம் செய்வர். அந்த ஆதிரை நாளை ஒட்டி முன்னதாக உள்ள ஒன்பது நாள்களும்விழா எடுத்து வழிபடுதல் திருவெம்பாவை திருவிழாவாகும். இந்தத் திருவாதிரை விழா தில்லைத்தலத்திலே நிகழ்வது போன்று ஈழத்துச் சிதம்பரத்திலும் மிகச் சிறப்பாக இடம் பெற்று வருகின்றது. இந்தியா சென்று சிதம்பரத்திலே நடராஜப் பெருமானை தரிசிக்க முடியாத பக்தர்கள் அனைவரும் ஈழத்துச்சிதம்பரத்திலே நடராஜப் பெருமானின் ஆனந்தக் கூத்தினைத் தரிசிக்கும் வாய்ப்பினை பெறுகின்றனர். இந்த உற்சவங்களைக் கண்டு தரிசிக்கின்ற அனைவரும் சகல சௌபாக்கியங்களுடன் வாழ எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ வி. ஈஸ்வரக் குருக்கள்
பிரதம சிவாச்சாரியார் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானம்.

### அல்லல் அறுத்து ஆனந்தம் அளிக்கும் அம்பலக் கூத்தன் தேரில் வருகின்றான்



இருண்ட வீட்டுக்கு ஒளி கொடுத்து உதவும் விளக்குப் போல இருள் மலத்தால் சூழப்பட்டு அல்லல் படும் மனித உயிர்கள் மேம்பாடு அடைவதற்கு விழாக் களும் விரதங்களும் வழி காட்டுகின்றன. இவ்வகையில் மார்கழித் திருவாதிரைத் திருநாளும் திருவெம்பாவை ஒன்பது நாளும் சிறப்புப் பெறுகின்றன. "ஆதிரை நாள் காணாது போதியோ பூம்பாவை" என்று ஞானசம்பந்தர் கூற்று மூலம் அந்நாளின் சிறப்பை உணரலாம்.

ஸ்ரீ சிவகாமி சுந்தரியம்மாள் சமேத ஸ்ரீநடராசப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் வேத மந்திரம் ஒலிக்க நாதஸ்வர தவில் வித்துவான்கள் கான இசை பொழிய தேவ அடியார்கள் பூ மழை பொழிய பக்கதர்கள் அரோகரா அரோகரா என்று கோஷமிட்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய தேரில் ஆரோகணிப்பதற்காக ஆடி ஆடி வரும் காட்சி அற்புதக் காட்சியாகும்.

ஐந்து தேர்கள் பெரும் வீதியாம் மூன்றாம் வீதியில் பக்தி வெள்ளத்தில் திளைத்த மெய்யடியார்கள் மழை வெள்ளத்தில் ஒன்று சேர்ந்து இழுத்து வர தேர்கள் அசைந்து அசைந்து அடுத்து அடுத்து வரும் காட்சி ஆனந்தம் தரும் காட்சியாகும். எம் பெருமான் அடியார்களுக்கு அல்லல் அறுத்து அருள் பாலித்து வருவான்.

இரவு 8 மணிக்கு மணிவாசக சபையால் நடத்தும் மணிவாசகர் விழாவில் சிறப்புச் சொற்பொழிவுகள் கதாப் பிரசங்கங்களும் மாணவர் இன்னிசை, நடனம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. இரவு 2 மணி முதல் உதயகாலம்வரை ஆருத்திரா அபிஷேகமும் ஆருத்திரா தரிசனமும் கண்டு களித்து இன்புறலாம். திருவாதிரைத்திருநாளை அம்பலக் கூத்தனுக்கு அர்ப்பணித்து அவன் அருள் பெற்று உய்வோமாக.

பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை
தலைவர், காரைநகர் மணிவாசகசபை.

### கூத்தப்பிரானை வழிபட்டு உய்தி பெறுவோம்.!



காரைநகர் சைவ ஆலயங்கள் அறுபதைத் தன்னகத்தே கொண்ட தெய்வீகத்தன்மை பொருந்திய ஒரு புனித இடமாகும். இந்த ஆலயங்கள் அனைத்துக்கும் இருதயம் போல விளங்குவது இங்குள்ள சிவன் ஆலயம். இங்கு ஆலயக்கிரியைகள் யாவும் தமிழகத்திலுள்ள சிதம்பரத்தைப் பின்பற்றியே நடைபெற்று வருகின்றன. எனவே ஆலயம் அமைந்துள்ள தலம் ஈழத்துச் சிதம்பரம் என்னும் பெயரைப் பெறலாயிற்று.

ஈழத்துச் சிதம்பரத்திலுள்ள நடராஜ மூர்த்தியின் திருவுருவம் மிக மிக அற்புதமானது. பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராஜர், அம்பிகை சமேதராக அமைந்திருக்கும் பாவனையில் உள்ள திருவுருவம் இந்தியாவிற்றானும் இரண்டொரு தலத்தில் மாத்திரமே உண்டென கோயில் வரலாற்றிலும் மூர்த்தி அமைப்பு முறைகளிலும் நிரம்பிய அறிவுள்ள இந்தியப் பேரறிஞராகிய திரு.தெ.மு.பாஸ்கரத் தொண்டைமான் ஈழத்துச் சிதம்பரத்திற்கு வந்து நடராஜப் பெருமானைத் தரிசித்தபோது கூறியமை நினைவு கூரத்தக்கது.

திருவாரூர் பெருமானை வழிபட்டுத் திருப்புகலூரை நோக்கி வரும் திருநாவுகரசு நாயனாரை எதிர்கொண்டழைக்கின்ற திருஞானசம்பந்தர் பெருமான் திருவாரூர்ப் பெருமானைத் தொழுது அனுபவித்த தன்மையைக் கேட்கிறார். இதனை சேக்கிழார் சுவாமிகள் "செப்பிய வண்டமிழ் மாலையாலே திருவாதிரை நிகழ் செல்வம் சொன்னார்" என்று திருநாவுகரசு கூறிய திறத்தைக் கூறுகின்றார். திருவாதிரை விழா இந்த செய்யுளில் செல்வம் என்று கூறப்பட்டிருக்கிறது. இச் செல்வம் மற்றைய எல்லாச் செல்வங்களிலும் தலையாயது.

ஞானசம்பந்தர் பெருமான்,திருவாதிரை விழா காண்பது மனிதப்பிறவியின் நோக்கமென்று பூம்பாவையை அழைக்கிறார். பூம்பாவையின் என்பு முன்னையிலும் அழகிய பெண்ணாக உருப்பெற்றுக் குடத்தினின்றும் வெளி வருகின்றது.

இப்படியான சிறப்பினை உடைய திருவாதிரை விழா ஈழத்துச் சிதம்பத்தில் மிக மிகச் சிறப்பாக நடைபெற்று வருவது பெறுதற்கரிய பேறாகும். மார்கழி திருவாதிரையின் போது சைவ உலகம் சிதம்பரத்தையே நோக்கும் எனினும், பல காரணங்களால் அங்கே செல்ல முடியாதவர்கள் அதே கூத்தப் பெருமான் ஈழத்துச் சிதம்பரத்தில் காட்சியளிப்பதனால் இங்கே வந்து அப்பெருமானை வழிபட்டு மன நிறைவுடன் வாழ்கின்றனர்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திருவாதிரை விழாவின் ஓர் அங்கமாகிய இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. நடராஜப் பெருமானும் சிவகாமசுந்தரி அம்பாளும் பரிவார மூர்த்திகளும் ஐந்து இரதங்களில் வீதி வலம் வரும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்.

இரதோற்சவத்தை முன்னிட்டு விசேட மலரொன்று வெளி வருகின்றமை பாராட்டுக்குரியது. இந்த மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் நாமெல்லாம் ஈழத்துச் சிதம்பரத்திற்கு சென்று கூத்தப் பிரானை கும்பிட்டு அப்பெருமான் அள்ளி வழங்குகின்ற செல்வத்தை பெற்று உய்வோமாக.

காரைநகர் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீஸ்வரக்குருக்கள்.



இன்று மிக ...
வெளிவரு...
இந்தியாவில்...
காரைநகர் ...
கோயில்...

பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ள
குகன் ஸ்ரோஸ்
(பிறைவேற் லிமிட்டட்)
180 (380), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 221 9469

Super Shoes
154, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 6809

கிருஷ்ணா
நகை மாளிகை
அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கிருஷ்ணா அடகு கடை, 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தரமான புதிய டிசைன்க...
கொள்வனவு செய்ய ந...
தனம்ஸ் ரெக்...
இல.90(22A), நவீனசந்தை, பெரியகடை வீதி, ...

சிங்கப்பூர்
ஜுவல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லலிதா ரெக்ஸ்
இல. 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5260
நியூ லலிதா ரெக்ஸ்
& சூ பலஸ்
இல. 42, பஜார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222 1234

திருமுருகன் கொம் நெற்
இல. 208 A, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 7835.

B.M...
ரெக்ஸ்ன...
251, 1/10, மெயின்...
கொழும்பு...

ARRUL GLOBAL EXPRESS
INTERNATIONAL COURIER
& CARGO SERVICE
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை.
இல.1, பிறவுண் வீதி,
நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

YOGA TRANSPORT
No. 261 1/12, 1/14,
Main City Market,
Main Street, Colombo-11.
T.P:2445344.
No: 02, Thiruvalluvar Lane,
Arasady Road,
Kantharmadam.
T.P: 021 222 9042.

சிவகணேசன்
ரெக்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

RU...
Versatile ...
No.104 A, Sta...
Jaffna. T.P...


S.T. PARAMESWARAN
& CO. (PVT) LTD.
STP CARGO
Customs House Agent, Clearing & Forwarding Agency
TRANSPORT SERVICES
Colombo - Jaffna - Colombo
Head Office : 200 2/1, Central Road, Colombo-12, Tel : 011 2347210, Fax : 011 2395472,
Hot Line : 0777 306473, E-mail : stpcargo5@hotmail.com

ESWARRAN
EXPRESS
Genuine Passenger Services
COLOMBO JAFFNA SPEED
ESWARRAN
Traders, Transport Service &
Courier and Parcel Services

ESER யாழகம்
MARKETIN...
38, CLOCK TOWER ROAD,
NEAR POLICE STATION.
368, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 5...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழத்துச் சிதம்பர
## ாதிரை உற்சவம்
## ப்புமலர் 27.12.2012



### தில்லைக் கூத்தனின் ஆருத்திரா தரிசனம்



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதி அந்தமற்ற எம் பெருமான் வழிபடும் அடியவர்களின் துன்பங்களை நீக்கியருளும் பொருட்டு ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரராக வீற்றிருக்கின்றார்.

இங்கு கடந்த எட்டு நாள்களாக சிறப்பாக நடைபெற்று வரும் திருவாதிரை உற்சவத்தின் பக்திப் பெருவிழாவாக இரதோற்சவம் மிக கோலாகலமாக நடைபெறுகின்றது. இந்த இரதோற்சவத்தை முன்னிட்டு வரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வ ...றேன்.

...யில் என்பது எல்லா ஆலயத்திற்கும் பொதுப்பெயராயினும் சிறப்புப் பெயராக ...ாவில் உள்ள சிதம்பரத்தையே குறிக்கும். இத்தகைய சிதம்பர சிவதலத்தை ...கர் சிவன்கோயில் கிரியை முறையிலும் மார்கழி திருவாதிரை உற்சவ ...விலும் ஒத்து விளங்குகின்ற காரணத்தால் ஈழத்து சிதம்பரம் என சைவச்சான் ...ள் அழைத்து வருகின்றனர்.

...னுடைய விரதங்களுள் முக்கியமான விரதம் திருவாதிரை ஆகும். மார்கழி மாத ...திரையை இறுதி நாளாகக் கொண்ட பத்து நாள்கள் திருவெம்பாவை உற்சவம் ... மிகச் சிறப்பாக நடைபெறும். அதில் இன்று தில்லை நடராஜப் பெரு ...ாதும் பரிவார மூர்த்திகளினதும் பஞ்சரத பவனியையும் இன்று இரவு ...பெறுகின்ற ஆருத்திரா அபிஷேகத்தையும் கண்டுகளிக்கின்ற அடியவர்கள் அனை ...ம் எம்பெருமான் திருவருள் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

... தேசாபதி, பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்.



### தெய்வம் தேரேறிடும் நன்னாள்



...ங்கள் சிலிர்க்கும் மாதம்,
...பெல்லாம் குளிக்கும் மாதம்,
...ந்துப் பரவசத்தில்
...ம்... அழல் மெழுகாய்ப்பற்றி
...மக ஒளியால்.... யாழ்வின்
...தும் உலாவும் மாதம்
...கழி மாதம் காரை
... பூணும் சொர்க்கக் கோலம்

...கழித் திருவெம்பாவை
...ங்களில் புனிதும் பூசும்
...துச் சிதம்பரமோ
...லயாய் மாறிப் பூக்கும்
...த்ரா தரிசனத்தில்
...ள்காணும் முதல் நாள்.... தெய்வம்
...றேறும் இந்நாள்.... காரை
...புதிக்கிழும் பொன்னாள்!

...ங்குழல் நாத மோங்க
...் மாரி பொழிய.... பண்ணும்
...ழம் கடல்போல் ஆர்க்க
...ந்துக் கண்ணீர் கங்கை
...ந்தி .... இரதங்கள் ஐந்தும்
...ாலம் விரட்ட.... இன்று
...துச் சிதம்பரத்தான்
...ன்றான்.... தொழுக.... உய்க!

த.ஜெயசீலன்.

### அறப்பணிகள் புரிந்து வரும் ஆலயம்



இலங்கையின் வரலாற்றுப் பெருமைமிக்க திருத்தலங்களுள் ஒன்றான ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. இதுவரை காலமும் ,ஈழத்தமிழ் மக்கள் அனுபவித்துவந்த இன்னல்களில் இருந்து இடைக்கால ஓய்வு நிலையில் இலங்கையில் புகழ் பெற்ற திருத்தலங்களுக்கெல்லாம் அடியார்கள் பெருமளவில் சென்று வரும் இன்றைய சூழ் நிலையில் , ஈழத்துச் சிதம்பரத்திலும் இன்று பெருமளவு அடியார்கள் ஒன்று கூடுவர் .சோழப் பெருமன்னரின் ஆட்சிக்காலத்தில் ஆலயங்கள், அறப்பணி நிலையங்களாகவும் பொருளாதார மையங்களாகவும், கலைகளின் உறைவிடமாகவும் விளங்கின. நலிவுற்ற எமது பிரதேச மக்களின் நல்வாழ்விற் கேற்ற நற் பணிகளைநமது நாட்டில் உள்ள ஆலயங்களின் ஊடாக மேற் கொள்ள வேண்டும். கோயில்களுக்குப் பிரமாண்டமான கட்டடங்களை எழுப்புவதோடு நின்று விடாது, அவற்றின் ஊடாக மக்களின் மறுமலர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுத்துச் செயற்படுவதற்கு அனைத்து மக்களும் முன்வர வேண்டும். 2 ஆவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக ஆலய சூழலில் திறந்து வைக்கப்பட்டுள்ள அறப்பணி நிலையத்தின் ஊடாக பல்வேறு கலைப்பணிகளையும் அறப்பணிகளையும் மேற்கொண்டு எமது பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டிற்கு உதவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இராமேஸ்வரத்தில் இருந்து சமயக் குரவர்களான திருஞான சம்பந்தர் , சுந்தரமூர்த்தி நாயனார் போன்றோர் ஞானக்கண்களால் ஈழத்திரு நாட்டில் உள்ள திருக்கேதீஸ்வரம் , திருக்கோணேஸ்வரம் என்பவற்றை தரிசித்து தேவாரப் பாடல்கள் பாடியது போல ஈழத்தில் உள்ள அடியார்களும் இந்தியாவிலே உள்ள சிதம்பரத்தை காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இருந்து அகக் கண்களால் தரிசிக்கின்ற வாய்ப்பினை இந்தத் திருவாதிரை உற்சவமும் தில்லைக்கூத்தனின் திருநடனத்தினூடாகப் பெற முடிகின்றது . எனவே இந்த பஞ்சரதப் பவனியையும் திருநடனக் காட்சியையும் கண்டு களிக்கின்ற பக்தர்கள் அனைவரும் பிறவிப்பிணி நீங்கி எல்லையில்லாப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றுய்ய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானினதும் பூரணை பூட்கலை சமேத ஆண்டி கேணி ஐயனாரினதும் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.



முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரன் 2004 ஆம் ஆண்டு உதயன் திருவாதிரை உற்சவ சிறப்பு மலருக்கு வழங்கிய செய்தி மீள் பிரசுரமாகின்றது.

...சன்களில் ஆடைகளைக்
...ய்ய நாடவேண்டிய இடம்
...ரக்ஸ்ரைல்
...் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 8544

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
72(9), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

நல்லைக் குமரன்
ஹாட்வெயர்
யாழ்-கண்டி வீதி,
கிளிநொச்சி.

வெங்கடேஸ்வரா
125 A, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 8306
வெங்கடேஸ்வரா ரான்ஸ்போட் சேர்விஸ்
கிளை:- 127 Old Moorsireet, Colombo - 12

...M.
...ரைல்ஸ்
...ின் சிற்றி மாக்கற்,
...ம்பு - 11

ஈழத்து சிதம்பரத்தில் தில்லைக் கூத்தனின்
திரு நடனம் காண வாரீர் வாரீர்

லக்சுமி பான்ஸி
234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். 077 9582566

www.karainews.com
காரைநகரில் இருந்து கிடைக்கப் பெறும் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் புகைப்படங் களுடன் www.karainews.com என்ற இணை யத்தள முகவரியில் பார்த்து அறிந்து கொள்ளலாம். தினமும் ஆயிரத்துக்கு மேற்பட்ட உலகளா விய இணையத்தள வாசகர் களைக் கொண்டு கடந்த மூன்றாண்டுக ளாக விளங்குகின்றது.
www.karainews.com

மகாராணி
பட்டுச்சோலை
50, Grand Bazaar, Jaffna.,
50, பெரியக்கடை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 3104.

...PA
...e Trades
...Stanley Road,
...T.P: 8330

T. தெய்வேந்திரம்
ஸ்ரோஸ்
62, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இளவரசி
சேலைச் சோலை
பட்டுப்புடைவைகளின் சாம்ராஜ்யம்
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ : 021 222 2503
தொ.நகல்: 021 222 8441

இராஜேஸ்வரி
ரெக்ஸ்ரைல்ஸ்
(இராஜபுரம்)
105, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6953.

...NG
...D,
...N.
...22 5563

ESP Nagaratnam & Co.
Cycles, Cycle Parts & Electrical Goods.
இ.ச.பே.நாகரத்தினம் சக நிறுவனம்
52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3096, 021 222 7285

சிவன் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சிவகுமரன் எனரப்பிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சரவணா ரெக்ஸ்
நல்லூரில்: இல. 526, 529 பருத்தித்துறை வீதி, நல்லூர் (பின் வீதி, சிவன் கோயில் அருகில்), யாழ்ப்பாணம். T.P: 021 222 1723
யாழ்ப்பாணத்தில்: இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, (நாட்டாநெரு சந்தி), யாழ்ப்பாணம். T.P: 021 222 0421
வடமராட்சியில்: இல. 171, பிரதான வீதி, நெல்லியடி. T.P: 021 226 2992
சங்கானையில்: 219, பிரதான வீதி, சங்கானை (HNB வங்கி முன்பாக) T.P: 021 2250909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லறமும் நல்லறமே

இறைவனை அடைவதற்கு எளிய வழி துறவறமே என்று சிலர் வாதிடுவர்.

இல்லறத்தில் இருப்பவன் இறைவனை அடைவது கடினம் என்பர் சிலர்.

'இல்லற மல்லது நல்லற மன்று' என்பது ஆன்றோர் வாக்கு.

அவரவர் கடமையில் தவறாது ஒழுகினால், இல்லறம், துறவறம் இரண்டும் உயர்வானதே என்பார் தாயுமானவர்.

**" சாட்டை இல் பம்பர சாலம் போலெலாம்**
**ஆட்டுவா னிறையென அறிந்து நெஞ்சமே**
**தேட்ட மொன்ற அருள்செயலில் நிற்றியேல்**
**வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே"**

- தாயுமானவர்

அதாவது, சாட்டையில்லாப் பம்பரம் போல், இறைவன் இந்த மாபெரும் உலகைச் சுழல விட்டிருக்கிறான்.

" அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பதை அறிந்து, இறைவனின் அருளொன்றை நாடி இருப்பவர்க்கு இல்லறம், துறவறம் இரண்டும் உயர்வானதே என்கிறார் அவர்.

இல்லறத்தில் இருந்தாலும் ஒருவன், தான் ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டே, இறைவன் பால் உள்ளத்தைச் செலுத்தினால் இறையருள் நிச்சயம் உண்டு. இல்லறம் என்பதும் புனிதமான ஒன்றே. ஆனால், இல்லறத்தை நல்லறமாகச் செய்தல் வேண்டும். இல்லறம் என்பது மனைவி, மக்கள் ஆகியோருடன் கூடி வாழ்ந்து, இல்லறத்திற்குரிய தர்மங்களைக் கடைப்பிடித்து ஒழுக்கத்துடன் நடந்து கொள்வது.

ஒருவன் தன் மனைவியுடன், உள்ளத்தில் அன்பு கொண்டு, வாழ்க்கை நடத்த வேண்டும்.

இனிய குழந்தைகளைப் பெற வேண்டும்; பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்க்க வேண்டும்.

அவர்களைச் சிறந்த கல்வியறிவுடையவர்களாகவும், நற்பண்புகள் மிக்கவர்களாகவும் வளர்க்க வேண்டும்.

இயன்ற வரை ஏழை, எளியவர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். நல்ல வழியில் பொருளை ஈட்ட வேண்டும்.

இல்லறக் கடமைகளைச் செவ்வனே செய்து, இறைவன் மீதும் மனதைச் செலுத்த வேண்டும்.

இல்லறத்தில் அன்பு இருக்கலாம்; ஆனால் அது பற்றாக மாறிவிடக்கூடாது.

**உன்னை நீ உணர்வாய் வெற்றி உனதே.**

மனித வாழ்க்கை நிரந்தரமல்ல என்பதையும், இறைவன் திருவடியே மெய் என்பதையும் உணர்ந்து, கடமைகள் முடிந்ததும் பற்றை அறுக்க முயல வேண்டும். இல்லறத்தில் இருந்தாலும் மனதை அடக்கப் பழக வேண்டும்.

தாயுமானவரின் தலைமை மாணாக்கராகிய அருளையா பிள்ளை, இல்லறத்தில் இருந்தாலும் ஒருவன் யோகியாக வாழ முடியும் என்றுரைக்கிறார்.

**" இல்லறத் திருந்தும் இதயம் அடக்கிய**
**வல்லவன் தானே மகாயோகி என்றோன்**
**துறவறத் திருந்தும் சூழ்மனக் குரங்கொன்று**
**அறவகை அறியான் அஞ்ஞானி என்றோன்."**

அதாவது, இல்லறத்தில் ஒருவன் ஈடுபட்டிருந்தாலும், மனதை அடக்க வல்லவன் மகாயோகி எனப்படுவான். அதே சமயம் துறவறத்தை மேற்கொண்டிருந்தாலும் ஒருவன், மனக்குரங்கைக் கட்டுப்படுத்தாமல், அறநெறி அறியாமல் இருப்பானேயாகில் அவனே அஞ்ஞானி எனப்படுகிறான்.

நாயன்மார்கள், இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு, இறைவனடி சேர்ந்தவர்களே.

இறைவனே தன் அடியார்களுக்குத் திருமணம் நடத்தி வைத்த வரலாறுகள் உண்டு.




இல்லறத்தில் இருப்பார்க்கும் இறைவன் உற்ற துணையாக இருப்பான் என்பதற்கு ஆதாரங்கள் பல உள்ளன.

நீ உன் கடமைகளைச் செவ்வனே செய்து, இறைவன் திருவடியையும் பற்றி நின்றால், இல்லறத்தில் இருந்தாலும் உனக்கு இறையருள் நிச்சயம் உண்டு.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# புங்குடுதீவு பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் புனரமைப்புப் பணிகள்



(கடந்தவாரத் தொடர்ச்சி...)

**லக்ஸ்மன்**

அருணாசலத்தை அடுத்து பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கான திருப்பணிகளை முன்னெடுத்தவர்கள் பிரபல வர்த்தகர் வி. இராமநாதனும் மடத்துவெளி சனசமூக நிலைய இளைஞர்களும் கிராம மக்களுமாவார். புதிய பரிபாலன சபை இ.குலசேகரம்பிள்ளை தலைமையில் தெரிவு செய்யப்பட்டு சபையினூடாக மேலும் முக்கியமான திருப்பணிகள் இடம்பெற்று வந்தன. ஆலயத்தின் உள் கொட்டகை சித்திரத்தேர், பூந்தோட்டம் என்பன இந்தக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டன.

ஆலயத்தின் சுற்றுமதிலை வர்த்தகர் அ.மாணிக்கம் தனது மகளின் நினைவாக அமைத்ததுடன் அன்னதான மடத்தையும் கட்டி வழங்கினார். மடத்துவெளி சனசமூக நிலையம் 1987 இல் அமுத கலசம் என்ற பெயரில் அன்னதான சபை ஒன்றை அமைத்து உற்சவ காலங்களில் அன்னதானம் வழங்கியதுடன் தண்ணீர் பந்தலும் அமைத்து அடியார்களுக்கு தாகசாந்தியும் செய்தார் வர்த்தகர் பாலசுந்தரம். அவர் தனது தந்தையின் நினைவாக இந்தப் பணியை மேற்கொண்டு வந்தார்.

ஆலயத்திற்கு இராஜ கோபுரம் அமைப்பதற்கென கோபுரத் திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்பட்டு உள் நாட்டிலும், வெளிநாடுகளில் உள்ள இந்தப் பிரதேச மக்களின் உதவியைப் பெற்றுக் கொண்டனர். இதற்கென பெருமளவு உதவிகளை உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உள்ளவர்கள் வழங்கியிருந்த போதும் நாட்டுச் சூழல் அந்தத் திருப்பணியை ஆரம்பிக்கத் தடையாக இருந்துள்ளது.

1991 இல் இராணுவத்தினர் தீவுப்பகுதியில் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்ததால் தினசரி இடம்பெற்று வந்த நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறாததால் ஆலயம் பொலிவிழந்தது.

ஆலயத்தின் பரிபாலனத்தை சிவலிங்கம் கிருபானந்தா, திருமதி கி. சௌந்தரநாயகி ஆகியோர் பொறுப்பேற்றனர். இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மிகவும் குறைந்த சிலரே இடம்பெயராத நிலையில் அந்தச் சுற்றாடலில் தங்கியிருந்தனர்.

அந்தக்காலத்தில் ஆலயத்தின் அண்மையில் இருந்த தம்பிப்பிள்ளை என்பவர் தினமும் ஆலயத்தைத் துப்புரவு செய்து விளக்கேற்றி வந்துள்ளார். 1998 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலன சபைத் தலைவராக இருந்த சிவலிங்கம் மீண்டும் தனது கிராமத்துக்கு வந்து ஆலயத் திருத்தப் பணிகளில் கவனம் செலுத்தியிருந்தார்.

தற்போது சுங்கத் திணைக்கள அதிகாரியாகவுள்ள சேனாதிராஜா சுந்தரலிங்கம் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு தலைமை தாங்கி திருப்பணி வேலைகள் துரிதமாக இடம்பெற நடவடிக்கை எடுத்துள்ளார்.

கனடா, சுவிஸ் போன்ற வெளியிடங்களில் உள்ள மக்களும் உள்ளூர்வாசிகளும் பல்வேறு வழிகளிலும் தமது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் வழங்கி வருகின்றனர்.

ஆலயத் திருப்பணி வேலைகள் முழு வீச்சில் நடைபெறுகின்றன. கோபுரம், மணிமண்டபம், நவக்கிரக பீடங்கள் புதிதாக அமைக்கப்பட்டன. மாபிள் பதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டு மாசி மாதம் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் திருப்பணி வேலைகள் துரிதமாக இடம்பெறுவதாகவும் சண்முகநாதன் தெரிவித்தார். அவர் திருப்பணி வேலைகளைக் கவனித்து வருகின்றார்.

1991 இல் இராணுவத்தினர் தீவுப்பகுதியில் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்ததால் தினசரி இடம் பெற்று வந்த நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெறாததால் ஆலயம் பொலிவிழந்தது. ஆலயத்தின் பரிபாலனத்தை சிவலிங்கம் கிருபானந்தா, திருமதி கி. சௌந்தரநாயகி ஆகியோர் பொறுப்பேற்றனர்.

★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு. மத்தி கல்வி வலயத்துக்கு புதிய வலயக் கல்விப் பணிப்பாளர்

### நியமித்தது கிழக்கு மாகாண கல்வி அமைச்சு

மட்டக்களப்பு,டிசெ.27

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் புதிய வலயக் கல்விப் பணிப்பாளராக எம். அஹமட் லெவ்வை நியமிக்கப் பட்டுள்ளார். அவர் எதிர் வரும் முதலாம் திகதி தனது கடமையைப் பொறுப்பேற்க வுள்ளார்.


மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற் றிய யு.எல்.எம்.செயினுதீன் ஓய்வுபெறவுள்ளார்.

இந்த வெற்றிடத்துக்கே கிழக்கு மாகாண கல்வியமைச்சு அஹமட் லெவ்வையை நிய மித்துள்ளது.

இதேவேளை, மட்டக்க ளப்பு மத்தி கல்வி வலய அலுவலகத்தில் பிரதி வலய கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய சேகு அலி, கிண்ணியா வலய கல்விப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மத்தி வல யக் கல்வி அலுவலகத்தில் கட மையாற்றும் 13 உத்தியோ கத்தர்கள் வேறு அலுவலகங் களுக்கு இடமாற்றப்படவுள் ளனர் என்று கிழக்கு மாகாண சபையின் உயரதிகாரியொரு வர் தெரிவித்தார். (ச)

## தொடர்ந்து கொட்டும் மழையிலும் மக்கள் கண்ணீருடன் அஞ்சலி





சுனாமி பேரலையால் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை கடும் மழைக்கு மத்தியிலும் மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை தொடக்கம் பெரியகல்லாறு வரையிலான சகல பகுதிகளிலும் சுனாமி இடர் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன. மட்டக்களப்பு திருச்செந்தூர், புதுமுகத்துவாரம், நாவலடி ஆகிய பகுதிகளில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோர் கடும் மழைக்கு மத்தியிலும் கலந்து கொண்டனர். (ச)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

# உள்ளூராட்சி தேர்தல் மார்ச்சில் நடைபெறும்

மட்டக்களப்பு,டிசெ.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திக திக்கு முன்பு தேர்தலை நடத்த அரசு முடிவு செய்துள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனைப்பற்று பிரதேசசபை, மண்முனைப் பற்று தென்மேற்கு பிரதேச சபை, மண்முனைப்பற்று தெற்கு மற்றும் எருவில்பற்று பிரதேசசபை, மண்முனை மேற்கு பிரதேசசபை, கோர ளைப்பற்று வடக்கு பிரதேச சபை, கோரளைப்பற்று பிரதேசசபை, ஏறாவூர்பற்று பிரதேசசபை, போரதீவுப் பற்று பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கே தேர்தல் நடத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் இருந்து கிழக்கு மாகாணம் கைப்பற்றப்பட்டதையடுத்து, கடந்த 2008 ஆம் ஆண்டு இந்த 9 உள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தல் நடத்தப்பட்டது.

இந்த உள்ளூராட்சி சபைகளின் நான்கு ஆண்டு பதவிக்காலம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவுக்கு வந்தது. எனினும் அரசு உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலத்தை ஓர் ஆண்டுக்கு நீடிக்க உத்தரவிட்டது. இந்த ஒரு ஆண்டு பதவிக்கால நீடிப்பு எதிர்வரும் மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது.

அதனால் குறிப்பிட்ட நாளுக்கு முன்னர் தேர்தலை நடத்த வேண்டியுள்ளது என்று தேர்தல் திணைக்களம் தெரி வித்துள்ளது.

தேர்தல் சட்டத்தில் திருத்தத்தை செய்வதன் மூலமே மீண்டுமொருமுறை இந்தத் தேர்தலை பிற்போட முடியும் என்பதால், குறிப் பிட்ட காலத்துக்குள் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒரு வர் தெரிவித்தார்.

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 9 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்திருந்த நிலை யில், ஆளும்கட்சியுடன் இணைந்து போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலி கள் கட்சி எட்டு சபைகளைக் கைப்பற்றியிருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)

## ஆரம்பப் பாடசாலை அமைத்துத் தரவும்

### மண்டானை மக்கள் கோரிக்கை

அம்பாறை,டிசெ.27

அம்பாறை,திருக்கோயில், மண்டானை கிராமத்தில் ஆரம்பப் பாடசாலை ஒன்றை அமைத்துத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராமத்தில் 252 குடும்பங்கள் வசித்துவருகின் றனர். 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பாடசாலைக் குச் செல்கின்றனர்.

இப்போது பாடசாலைக்கு நீண்டதூரம் செல்லவேண்டி யிருப்பதால், அதிகமான மாணவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுகின் றனர்.

பின் தங்கிய நிலையில் வாழ்கின்ற இந்தக் கிராமத்து மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

இதன் காரணமாக மாண வர்கள் பாடசாலைக்கு செல் லாது சிறு வயதிலேயே தொழி லில் ஈடுபட வேண்டிய நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர்.

நாளாந்த செலவுகளுக்கே திண்டாடுகின்ற இந்த மக் கள் தூரப் பாடசாலைக ளுக்கு தங்கள் பிள்ளைகளை அனுப்ப முடியாதுள்ளனர்.

எனவே இந்தக் கிரா மத்தில் ஆரம்பப் பாடசாலை யொன்றை அமைப்பதன் மூலம் மக்களின் கல்வி மேம்பாட்டை உயர்த்த முடியும்.

இதுதொடர்பில் கல்வி அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் துரித நடவடிக்கை எடுத்து பாடசாலையை அமைத்துத்தர வேண்டும் என்று கிராம மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (ச)

## நுவரெலியாவில் மண்சரிவு அபாயம் தொடர்கிறது

நுவரெலியா,டிசெ.27

நுவரெலியா- பதுளை பிரதான வீதியில் தொடர்ந்து மண்சரிவு அபாயம் நிலவுகிறது என்று நுவரெலியா மாவட்டச் செயலர் தெரி வித்தார்.

இந்த வீதி ஊடாக ஒரு வழிப் பயணத்தை மாத்திரம் மேற்கொள்ள முடிவதால் போக்கு வரத்து நெரிசல் காணப்படுகிறது என்று அவர் கூறினார்.

இந்த வீதி பகலில் மாத்திரம் போக்கு வரத்துக்காகத் திறக்கப்படுகிறது. இரவில் மூடவேண்டி ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## பாடசாலை உபகரணங்கள் மாணவருக்கு வழங்கல்



மட்டக்களப்பு,டிசெ.27

கனடா தமிழர் தேசிய அவையின் நிதியு தவியில் மட்டக்களப்பு, பட்டாபுரம் கிராமத் தில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மாண வர்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை பாடசாலை உபகரணங்கள் வழங் கப்பட்டன. இந்தநிகழ்வில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் ப.அரியநேத்திரன் கலந்து கொண்டு மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்கி வைத்தார். (ச)

## மட்டக்களப்பின் நிர்வாக பலம் தமிழர் கைகளில்

### கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் சொல்கிறார்



அரசியல் பலம் முஸ்லிம் களுடைய கைகளிலே இருக் கின்றது. ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்வாகப் பலம் தமிழர்களுடைய கை களிலே இருக்கின்றது என் பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவி ருத்தி சுற்றுலாத்துறை மீன் பிடி சிறு கைத்தொழில் அமைச் சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலய அலுவலகக் கட்டடத் தைத் திறந்துவைத்து உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்ததாவது:-

நாம் நம்முடைய அறிவை தமிழில் மாத்திரம் வைத்துக் கொண்டு எவ்வளவு உச்சத் துக்குச் சென்றாலும் அது வெளிச்சத்துக்கு வராத ஒன் றாகத்தான் இருக்கும். நமது அறிவும் திறமைகளும் வெளி யுலகுக்குத் தெரிய வேண்டு மானால் குறைந்த பட்சம் சிங்களம், ஆங்கிலம், அரபு உள்ளிட்ட மூன்று மொழி களையாவது தெரிந்து வைத் திருக்க வேண்டும்.

மொழிப் பிரச்சினையை நாம் வாழும் காலத்தில் தீர்த் துக்கொள்ள முடியாவிட்டா லும், எதிர்காலச் சந்ததியாவது அதனைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலய கல்விச் சமூகம் மொழித் தடையை உடைத்தெறிந்த ஒரு சமூகமாக வர வேண்டும். அதற்காக சிங்களத்தையும் ஆங்கிலத்தையும் சேர்த்து முஸ்லிம்கள் அரபு மொழியை யும் கற்க வேண்டும்.

இந்த நாட்டில் வாழுகின்ற மக்களுக்கு தமிழும், சிங்கள மும் எவ்வாறு முக்கியமோ அவ் வாறுதான் முஸ்லிம்களுக்கு அரபு மொழி முக்கியமானது. [illegible] இருந்திருந்தால் நாட்டில் 75 வீதம் இனப்பிரச்சினை தோன்றியிருக்க வாய்ப்பு இருந்திருக்காது. மட்டக் களப்பு மாவட்டத்திலே ஒரு புறத்திலே அரசியல் பலமும் இன்னொரு புறத்திலே ஒரு நிர்வாக பலமும் உள்ளது. அரசி யல் பலம் முஸ்லிம்களுடைய கைகளிலே இருக்கின்றது. நிர் வாக பலம் தமிழர்களுடைய கைகளிலே இருக்கின்றது.


இந்த இரண்டு அதிகா ரங்களும் சரியான முறையில் செயற்பட்டால் மாத்திரமே இன வேறுபாடுகளைக் கடந்து அபிவிருத்தி, சமாதானம் என் கின்ற இலக்கை நோக்கிப் பயணிக்க முடியும்.

நாங்கள் கடந்த காலங் களில் இனவாதம் பேசியே தோல்வியடைந்து விட்டோம். எனவே இனவாதத்தைக் களைய வேண்டும்.

மாகாண நிர்வாக மட்டத் திலும் தமிழ், முஸ்லிம், சிங்கள அதிகாரிகள் இனவாத மன நிலையைக் களைந்து செய லாற்ற முன் வரவேண்டும்.

எது நீதி, நியாயமோ அதனை நடைமுறைப்படுத் துகின்ற அதிகாரிகளாகத்தான் இருக்க வேண்டும். இந்தத் தடையை நாங்கள் அரசியல் ரீதியிலே உடைத்தாக வேண் டும்.-என்றார். (ச)

## உறுகாமம் குளத்தை பார்வையிட்டார் கருணா



மட்டக்களப்பு,டிசெ.27

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதான குளங்களில் ஒன்றான உறுகாமம் குளத்தை பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை பார்வையிட்டார்.

உறுகாமம் குளத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் மோகனராஜிடம் பிரதி அமைச்சர் கேட்டறிந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து உறுகாமம், உன்னிச்சை, நவகிரி உள்ளிட்ட குளங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27/12/2012

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நண்பர்களிடம் விவாதிப்பீர்கள். தாயாரின் உடல் நிலை சீராக இருக்கும். உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.

**இடபம்:** சில விடயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் இருக்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். யாருக்கும் பணம், நகை வாங்கிக் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சின்னச் சின்ன இடர்பாடுகள் வந்து நீங்கும்.

**மிதுனம்:** எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்துச் செல்லும். அரச காரியங்கள் இழுபறியாகும். இலேசாக தலை வலி ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிர்க்கவும்.

**கடகம்:** திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். அலுவலகத்தில் மரியாதை கூடும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.

**சிங்கம்:** நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உங்களின் முயற்சிகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். தலைச்சுற்றல், வயிற்றுவலி விலகும். பணவரவு உண்டு.

**நாளை**

மார்கழி -13 வெள்ளிக்கிழமை 28.12.2012
திதி: பூரணை பி.ப 04.10 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.இ 06.11 வரை
சுபநேரம்: 06.28- 07.58 வரை
ராகுகாலம்: 10.58- 12.28 வரை

**துலாம்:** எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை ஏற்படலாம்.

**விருச்சிகம்:** யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்களின் நினைவுத்திறன் அதிகரிக்கும்.

**தனுசு:** மனக்குழப்பங்கள் விலகித் தெளிவு பிறக்கும். உடன்பிறந்தவர்களால் உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. பெற்றோரின் உடல் நிலை சீராக இருக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**மகரம்:** வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். தாயாரின் உடல் நிலை சீராக அமையும்.

**கும்பம்:** பிரியமானவர்களைக் கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுக போட்டிகளை வெல்வீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிட்டும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | 4 | | | 3 | 6 |
| 3 | | | 6 | 8 | | 4 | | 1 |
| | 4 | | | 3 | | 9 | | 5 |
| | | 3 | | | 9 | | | 4 |
| | | 8 | | 7 | | 6 | | |
| 9 | | | 3 | | | 1 | | |
| 1 | | 6 | | 2 | | | 4 | |
| 5 | | 7 | | 9 | 6 | | | 8 |
| 4 | 8 | | | 1 | 7 | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | 7 | 4 | 1 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 9 | 4 | 6 | 5 | 2 | 7 | 1 | 3 |
| 2 | 6 | 1 | 3 | 7 | 8 | 9 | 5 | 4 |
| 6 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 | 9 | 2 |
| 5 | 1 | 9 | 7 | 2 | 4 | 6 | 3 | 8 |
| 4 | 2 | 3 | 8 | 9 | 6 | 1 | 7 | 5 |
| 9 | 3 | 6 | 2 | 8 | 7 | 5 | 4 | 1 |
| 1 | 8 | 5 | 9 | 4 | 3 | 2 | 6 | 7 |
| 7 | 4 | 2 | 1 | 6 | 5 | 3 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை



தோற்றம்
25.01.1948

மறைவு
26.11.2012

## அமரர் ஸ்ரீமான் கந்தையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற பிரதேசப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை)
(R.M.E - R.D.A)

அரசனும் காணா வாழ்வு, விந்துயுர்
கல்வி கேள்வி, இந்திர செல்வம்
பொன் பொருள் மேன்மை, கீர்த்தி,
யாவையும் நிறைவாய் தந்து, கணத்தினுள்
தெய்வம் ஆனீர்! தாங்குமோ எம்மிதயம்?
வானில் இறையென வீற்றிருந்து நல்லாசிகள்
என்றும் வாரீயே தருவீர் அப்பா
நாளும் போற்றியே துதி செய்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்,

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

(27201)(2.6)

குடும்பத்தினர்.

# நெஞ்சகலா நினைவுகளுடன் ஆண்டுகள் பதின்நான்கானது அம்மா



## அமரர் கந்தபுஸ்பதேவி அமரலிங்கம்

(இசை ஆசிரியர்)

திதி:
பூர்வபட்ச நவமி

மண்ணில்
23.10.1948

விண்ணில்
27.12.1998

சர்மிளா, பிரதீபன், சயந்தனுடன் சயனன் எனும்
நாலு குல முத்துக்கள் நன்றாய் வாழ்வதற்கு
பத்தியமும் காத்துப் பகலிரவாய் கண் விழித்து
ஏலுமட்டும் ஏற்ற எல்லாம் அவள் புரிந்தாள்
வாழுகின்ற வீட்டில் விரிக்கும் சிறகுகளுக்குள்ளே
நால்வரையும் காத்து நாயகனையும் காத்தாளே
நெஞ்சார் கொள்வோம் நினைவுகளில் விளக்கேற்றி
நெஞ்சாறிக் கொள்வோம் கண்ணீர்ப் பூக்களுடன்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பன்னாலை,
தெல்லிப்பழை.

(26930)(2.6)

கணவர், பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரீட்சை மோசடிகளை தவிர்க்க புதிய சட்டம்

## அதன் மூலமே மோசடிகள் இடம்பெறாமல் தடுக்க முடியும் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு,டிசெ.27

பரீட்சைகளின்போது இடம்பெறும் மோசடிகளைத் தடுப்பதற்கு புதிய சட்டம் அவசியம் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சட்டத்தின் பிரகாரம் பரீட்சை வினாத்தாள் மோசடியில் ஈடுபடுபவர்கள் பிணையில் செல்ல முடியாத அளவுக்குச் சட்டம் அமையப்பெற வேண்டும்.

இந்த ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் விஞ்ஞானபாட வினாப்பத்திரங்கள் பரீட்சை நடைபெற்ற தினத்துக்கு முன்னர் வெளியாகியமை விசாரணைகளிலிருந்து உறுதியாகியுள்ளது.



இந்த விவகாரத்தில் பரீட்சைத் திணைக்கள நிர்வாகம் ஈடுபட்டுள்ளமை குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை குற்றத்தை மேற்கொண்டவர்களும் மேற்படி புதிய சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படும் வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நாம் ஏற்கனவே சட்டத்தை திருத்தியிருக்க வேண்டும். அப்படித் திருத்தியிருந்தால், தேசியப் பரீட்சைகளின்போது இவ்வாறான மோசடிகளில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள்.

வினாப் பத்திரங்களைப் பல்கலைக்கழக கல்வியாளர்களே தயாரிக்கின்றனர். அவற்றை இன்னொரு பிரிவினர் தட்டச்சு செய்கின்றனர். மற்றுமொரு பிரிவினர் அச்சடிக்கின்றனர். அச்சடிக்கப்பட்ட வினாப்பத்திரங்களை மற்றுமொரு பிரிவினர் பொதி செய்து ஒருங்கிணைப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். இதுவே வினாப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படும் முறையாகும்.

இந்தநிலையில் வினாப் பத்திரங்கள் வெளியாகுவதற்கு வழியில்லை. இதையும் மீறியே வினாப்பத்திரங்கள் வெளியாகியுள்ளன. இதனால் சட்டத்தை கடுமையான அளவில் மேற்கொள்வதன் மூலம் இந்த நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுக்க முடியும்.-என்றார். (ச)

---

பரீட்சைத் திணைக்களத்தின்

# இரகசியத் தன்மையை பாதுகாக்க நடவடிக்கை

கொழும்பு,டிசெ.27

பரீட்சைத் திணைக்களத்தின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்க விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வினாத்தாள்கள் இரகசியமான முறையில் பேணிப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் சீ.சீ. ரீவி கமரா கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

**பரீட்சைத் திணைக்களத்தின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் சீ.சீ. ரீவி கமரா கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது.**

அச்சுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் எதனையும் எடுத்துச் செல்ல முடியாதவாறு அவர்களுக்கு விசேட சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையின்போது விஞ்ஞான பாட வினாத்தாள் முன் கூட்டியே வெளியானதைத் தொடர்ந்தே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

---

# இடரால் உயிரிழந்தோருக்கு 25,000 ரூபா வழங்கப்படும்

## மஹிந்த அமரவீர சொல்கிறார்



கொழும்பு, டிசெ.27

இயற்கை இடரின்போது உயிரிழப்பவர்களுக்கு வழங்கப்படும் 15,000 ரூபாவை எதிர்காலத்தில் 25,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவ்வாறு இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். அம்பலாந்தோட்டை பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைச் சந்தித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு சகல வசதிகளையும் செய்து தந்துள்ளார் என்று அவர் கூறினார். எனினும் ஒரு சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உதவிகள் கிடைக்காமல் போயுள்ளன. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

---

## நத்தார் மர விற்பனையில் வீழ்ச்சி

கொழும்பு,டிசெ.27

இலங்கையில் நத்தார் மர விற்பனை இந்த ஆண்டு வீழ்ச்சியடைந்துள்ளது என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

நத்தார் மரங்களை பண்டாரவளை பகுதியில் இருந்து கொண்டுவந்து கொழும்பில் வைத்து விற்பனை செய்யும் வியாபாரிகளே இவ்வாறு கூறிகின்றனர்.

நத்தார் மரங்களின் விலை அதிரிப்பே இதற்குக் காரணம் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். நத்தார் மரங்களைக் கொழும்புக்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளமையே இந்த விலையேற்றத்துக்குக் காரணம் என்று அவர்கள் குறிப்பிட்டனர். (ச)



நத்தார் தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெஹிவலை குஷ்ட ரோக வைத்தியசாலைக்குச் சென்ற முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ நோயாளர்களுக்கு நத்தார் பரிசுகளை வழங்கினார்.

---

## சீரற்ற கால நிலையால் ஒன்பது பேரை காணவில்லை

கொழும்பு,டிசெ.27

சீரற்ற காலநிலையினால் 9 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களினால் சிலர் காணாமல் போயிருந்தனர்.

அவ்வாறு காணாமல் போனவர்களில் ஒன்பது பேர் பற்றிய தகவல்கள் இதுவரை கிடைக்கவில்லை என்று குறிப்பிடப்படுகிறது.

மாத்தளை மாவட்டத்தில் ஏழு பேரையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு பேரையும் காணவில்லை.

சீரற்ற காலநிலையினால் 3 லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் சீரற்ற காலநிலை தொடரும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

---

# பல்கலை மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி

## முதலாம் கட்டப் பயிற்சி இன்று ஆரம்பம்

கொழும்பு,டிசெ.27

பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகும் என்று உயர்கல்வியமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிக்கென உயர் கல்வியமைச்சு 200 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது.

2011 ஆம் ஆண்டில் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுள் 27 ஆயிரம் பேர் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மூன்று கட்டங்களாக தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

முதல் கட்டமாக இன்று வியாழக்கிழமை தலைமைத்துவப் பயிற்சி ஆரம்பிக்கப்படும். இந்தப் பயிற்சி எதிர்வரும் 12 ஆம் திகதிவரை நடைபெறும்.

இந்தப் பயிற்சிகளுக்கென முதல் கட்டமாக 10 ஆயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்குவதற்கென திருகோணமலை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், தியத்தலாவை, களுத்துறை, காலி உள்ளிட்ட பல பிரதேசங்களில் 22 முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. அங்கு மாணவர்களுக்குத் தேவையான விரிவுரைகளும், பயிற்சிகளும் வழங்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் பயிற்சிகள் எதிர்வரும் 15 திகதி முதல் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி வரையும், மூன்றாம் கட்டப் பயிற்சிகள் பெப்ரவரி 1[illegible] ஆம் திகதி முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை நடைபெறும்.-என்றார். (ச)

---

# கஷ்டப் பிரதேசத்தில் பணியாற்ற மறுப்பு 400 பட்டதாரிகளின் நியமனங்கள் ரத்து

## காத்திருப்புப் பட்டியலில் இருந்து வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை

கொழும்பு,டிசெ.27

கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்ற மறுப்புத் தெரிவித்த சுமார் 400 தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகளின் நியமனங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இவர்களுடைய வெற்றிடங்களை நிரப்பும் வகையில் காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டபோது, நியமனக் கடிதங்களில் அவர்கள் கடமையாற்ற வேண்டிய இடங்கள் குறிப்பிட்டே வழங்கப்பட்டிருந்தன. அந்தப் பிரதேசத்தில் கடமையாற்ற மறுப்பவர்களது நியமனங்கள் ரத்துச் செய்யப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

**இலங்கையில் ஆங்கிலப் பட்டதாரிகள் மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றனர்.**

இதற்கமைய தெஹியத்தகண்டிய, திம்புலாகல உள்ளிட்ட கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்ற மறுப்புத் தெரிவித்தவர்களுக்கு பதிலாக காத்திருப்பு பட்டியலில் உள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள மாணவர்களுக்கு சிறப்பான கல்வியைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலேயே தொழில்நுட்ப பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமா பட்டதாரிகள் 936 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 400 பேரே தமது நியமனங்களை ஏற்க மறுத்துள்ளனர். இதனால் பின்தங்கிய கிராமங்களிலுள்ள மாணவர்களுக்கு தரமான கல்வியை பெற்றுக் கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்படும். அதனாலேயே காத்திருப்பு பட்டியலிலுள்ள பட்டதாரிகள் மேற்படி பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்படுவர்.

இதேவேளை ஆயிரம் ஆங்கிலப் பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய் வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சுமார் 400 வரையிலான விண்ணப்பங்களே எமக்குக் கிடைத்துள்ளன.

இலங்கையில் போதியளவு ஆங்கிலப் பட்டதாரிகள் இல்லாமையே இதற்குக் காரணமாகும். எனவே ஆங்கிலத்தில் டிப்ளோமா பயின்றவர்களை இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்வது குறித்து நாம் ஆராய்ந்து வருகிறோம்.-என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்கு

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் நல்ல சுற்றாடலில் சகல வசதிகளையும் கொண்ட கீழ் வீடு உடன் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 3243003 (27284) (6.7.4)

## அறை, கடை வாடகைக்கு

நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டில் சகல வசதிகளும் கொண்ட தனி அறை 2 ஆம் மாடியிலும், கடை முதலாம் மாடியிலும் வாடகைக்கு உண்டு. கடையினை களஞ்சியமாகவும் பயன்படுத்தலாம். Room நாள், மாதம் அல்லது வருடாந்த ஒப்பந்தத்தில் விடப்படும்.

தொடர்பு :மயூரன், 077 3296 035 (27285)(6.7.11)

## நாய்க்குட்டியினைக் காணவில்லை

எமது கறுப்பு நிற பொமேரியன் நாய்க்குட்டி கடந்த திங்கட்கிழமையில் இருந்து சுண்டுக்குளிப் பகுதியில் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தகவல்: உரிமையாளர்.

021 222 3508, 077 1146562. (27283) (6.7.4)

## காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் பிரதான வீதியில், தாவடியில் கிணற்றுடன் கூடிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0757406055 (சி/5089) (5.6.7)

## Biology (English Medium)

2013 A/L - unit 10
2014 A/L -Unit 5
2015 A/L-29.12.2012 இல் ஆரம்பம்.

ஆசிரியர் -வே.அ.ஞானேந்திரன்.
N.E.C.யாழ்ப்பாணம்.
077 023 6743. (27287) (6.7.4)

# நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் ஏலத்துக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.27

ஊர்காவற்றுறை நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் ஏலத்தில் விடப்படவுள்ளது என்று நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

மணல்மண், கண்டாவளை மண் என்பனவே ஏலத்தில் விடப்படவுள்ளது. சுமார் 70 கியூப் மணல் நீதிமன்ற வளாகத்தில் ஏலம் விடப்படவுள்ளது என்று அவர் மேலும் அறிவித்துள்ளார். (வ-4)

## வாடகைக்கு

இணுவிலில் உள்ள அரைக்கும் ஆலை ஒன் றில் சகல தானியங்களும் அரைக்கக் கூடிய கிறைண்டர்களும் இட வசதியும் உள்ளடங்கலாக கடையுடன்வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 608 1693. (27278) (6.7.4)

## விற்பனைக்குண்டு

புத்தம் புதிய
**Tyre Changer**
மிசின் விற்பனைக்குண்டு.

தொடர்பு :075 740 6055 (c/5090)(6.7.11)

## CHEMISTRY CENTRE A/L 2015

By: அன்பு

1 இடங்களில் ஆரம்பம்

- 33, அரசடிவீதி,ஓட்டுமடம் சந்தி அருகில்
- மஞ்சவனப்பதி வடக்கு வீதி,கொக்குவில்
- மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக
- பழம் வீதி, கந்தர்மடம் சந்தி

**A/L 2013**
**விசேட பிரிவு**
ஒரே வேளையில் Inorganic Organic, Physical

**A/L 2014**
Basic
Thermo

தொடர்பு: 077 069 0654 (27281)(5-6-7)

## இலட்சார்ச்சனை

வலிவடக்குடிசெ.27

சுன்னாகம் மருதனார் மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில் இலட்சார்ச்சனைப் பெருவிழா 29.12.2012 சனிக்கிழமை கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை தேர்த் திருவிழாவும் இதனைத் தொடர்ந்து மறுநாள் 10 ஆம் திகதி 108 கலச சங்காபிஷேகமும் நடைபெறும். (வ-86)

## மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளைப் புனரமைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.27

பண்டத்தரிப்பு - பிரான்பற்றில் மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 14 முக்கிய வீதிகள் புனரமைப்பு செய்யப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.

இந்த வீதிகளைப் புனரமைப்புச் செய்யுமாறு மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் சி.சி.மகேந்திரன் கேட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாக புனரமைப்பு இன்றி மக்கள் போக்குவரத்துக்கு சிரமமாக பல வீதிகள் எம்மால் இனம் காணப்பட்டுள்ளன.

'நெல்சிப்' அபிவிருத்தித் திட்டத்தில் மேற்படி வீதிகள் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதும் மூன்றாண்டுகளாகியும் வீதி தெரிவு இடப்பெறவில்லை.

தற்போது கிராமிய மட்டத்தில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுக்கும் ஒவ்வொரு மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம்முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கு ஆசிய மன்றம் முன்னோக்கு திட்டங்கள் முன்னெடுக்கவுள்ளது.

எனவே இந்த விடயங்கள் நீண்டகால நோக்கு உடையவை என்றார்.(வ)

# பணி நிலை வெற்றிடம்

Following vacancies are available to fill immediately for our Construction projects in Vavuniya, Kilinochchi, Mullaitivu and Jaffna.

**Civil Engineer-B.sc**

Minimum 2-3 years experience in building and Road construction

**Quantity Surveyor**

Minimum 3-4 years experience in Building and Road construction

***Salaries are Negotiable**
**Please send Your CV with in 7 days by Email**
**Email id -cyconstruction301@gmail.com**

தொலை பேசி இல - 077 4983804 (சி/5088) (6.7.4)

# மரண அறிவித்தல்



## நன்னியர் அப்புத்துரை

(ஓய்வுபெற்ற ஊழியர்-புகையிரதத் திணைக்களம்)

கோண்டாவில் வடக்கு, வீரபத்திரர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னியர் அப்புத்துரை 25.12.2012 செவ்வாய்க்கிழமை இரவு கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் வீதி,
கோண்டாவில்
வடக்கு,கோண்டாவில்.

(27279)(5-6-7)

தகவல்:
பூரணம் (மனைவி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்
27.05.1942

மறைவு
27.11.2012

அமரர்
## இராமலிங்கம் குமாரசாமி

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனித வாழ்வு வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!
காத்திருந்து அரவணைத்த கைகள்
காலமெல்லாம் எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
மலர்ந்த வதனச் சிரிப்பை வாழ்நாளில்
காணக்கிடைக்குமா?

இன்று (27.12.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(27276) (4.6.7)

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

# மரண அறிவித்தல்

## தம்பையா வேலுப்பிள்ளை



எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா வேலுப்பிள்ளை நேற்று முன்தினம்(25.12.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான தம்பையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா, சின்னையாவின் அன்புச் சகோதரனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும்,பரமேஸ்வரி,செல்லமுத்து(சுவிஸ்), புஸ்பராணி, காலஞ்சென்ற குணபாலசிங்கம் மற்றும் இராசலிங்கம்(சுவிஸ்),புஸ்பதேவி(லண்டன்), புஸ்பமலர் (லண்டன்), யோகலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரத்தினும், கனகரத்தினம் (சுவிஸ்), நடராஜமூர்த்தி,மலர்விழி (சுவிஸ்), சிறிதரன் (லண்டன்), மதிசூடி (லண்டன்), சுமித்தா(சுவிஸ்)ஆகியோரின் மாமனும், சதீஸ்வரன் (ஜேர்மனி), கலைமதி (ஜேர்மனி), சுகிர்தன்,தயாழினி,சமேசன்(லண்டன்),மதன்ரூபி(லண்டன்), நகுலினி (லண்டன்), ஜெகன்(லண்டன்), கயல்விழி(லண்டன்), நித்தியானந்தனம் (லண்டன்), கஸ்தூரி, குமாரதாஸ், பிரமிளா,நிஷாந்தினி,நிலுசியா,அனுசியா,அபினா, (சுவிஸ்), அரன் (லண்டன்), சேயன் (லண்டன்),தரணி(லண்டன்),அஜய்(சுவிஸ்) அனிஸ் (சுவிஸ்), நிலேஸ் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும், அரன்(ஜேர்மனி), அஸ்மிதா (ஜேர்மனி), தனுஷன் (லண்டன்), கீர்த்திகா (லண்டன்), டினோகா(லண்டன்),டிவானுஜன், சுபானுஜன், அப்சயா (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.12.2012) வியாழக்கிழமை மு.ப.11.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில். (27286)(5-6-7)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி



அமரர் **வேலாயுதபிள்ளை லோகேந்திரா**(லோகு)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அல்லைப்பிட்டி.

விமலசூரியன் (ராசன்)
குடும்பத்தினர்.

(27274)(6.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# இலங்கை அகதிகளுக்கான வீடுகளை 9 மாதங்களில் அமைக்க ஏற்பாடு

தமிழ்நாட்டில்முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளுக்கு 9 மாதங்களுக்குள் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

தமிழகத்தில் 14 மாவட்டங்களில் உள்ள 21 முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளுக்கு 2500 வீடுகள் கட்ட தமிழக அரசு கடந்த மாதம் உத்தரவிட்டது.

கோவை, திண்டுக்கல், கன்னியாகுமாரி, கரூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திரு வள்ளூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தலா ரூ.ஒரு லட்சம் செலவில் இந்த வீடுகள் கட்டப்படுகிறது. அதற்காக ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வீடுகள் ஒவ்வொன்றும் தலா 200 சதுர அடி பரப்பளவில் கட்டப்படுகிறது. இதற்கான பொறுப்பு மாநில கிராமப்புற வளர்ச்சி மற்றும் கிராமத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியாளர்கள், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்துரை, தமிழ்நாடு குடிதண்ணீர் வடிகால் வாரியம் மற்றும் கழிவு நீர் வாரிய முகாமைத்துவப் பணிப்பாளர்களுக்கு பொதுப்பணித் துறை ஒரு சுற்றறிக்கை அனுப்பியது.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அதில் அகதிகள் முகாம்களில் ஏற்கனவே இருக்கும் வீடுகளை இடிக்காமல், காலி இடங்களில் புதிய வீடுகள் அமைக்கப்பட வேண்டும். அவை இந்திரா அவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்றன. அனைத்தும் கழிப்பறை வசதிகளுடன் அமைய வேண்டும்.

புதிதாகக் கட்டப்படும் வீடுகள் அடங்கிய குடியிருப்புப் பகுதியில் வீதிகள், சாக்கடை, தெரு விளக்குகள் போன்ற பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை மேற்கொள்ள வேண்டும். அதே நேரத்தில், அடிப்படை வசதிகளை மாநில ஊரக வளர்ச்சி மற்றும் கிராமத் தலைவர்கள் செய்து தர வேண்டும்.

மேற்படி வீடுகள் 9 மாதத்தில் கட்டி முடிக்கப்பட உள்ளது. எனவே அந்தப் பணியை குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்க வாரந்தோறும் மாவட்ட ஆட்சியாளர்கள் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி கண்காணிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(வ)

## அகங்காரம் என்றால் என்ன?

அகங்காரத்தின் சரியான விளக்கம் தவறாகத் தன்னைப் பூரணமாக உடம்புடன் ஒருமைப்பாடு கொள்ளுதல் ஆகும். சமஸ்கிருதச் சொல்லாகிய அகங்காரம் 'ஆணவம்' என மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஆணவம் என்ற சொல் தன்னைப் பற்றிப் பெரிதாக எண்ணுதல், எண்வகை பெருமை காரணமாக எழுந்த மயக்கத்தால் உருவான தற்பெருமையைக் குறிக்கும். எல்லோருமே இந்தப் பெருமை- தற்பெருமையின் பால் வசப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள். **ஆனால் தன்னை உடம்பெனக் கொள்ளும் எண்ணத்தில் யாவருமே வசப்பட்டுள்ளனர்.**

இந்த அகங்காரம் தான் புத்தியை மறைத்து எம்மைப் பிழையான பாதையில் இட்டுச் செல்கின்றது. எனவே புத்தியானது சிரத்தையை விருத்தி செய்ய வேண்டுமானால் நாம் முதலாவதாக இந்த அகங்காரத்தை நீக்க வேண்டும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## தேர்த் திருவிழாக்கள்

மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலய திருவெம்பாவைத் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம், டிசெ.27

காரைநகர் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரதப் பவனி இன்று வியாழக்கிழமை முற்பகல்10.30 மணிக்கு இடம்பெறும். (வ)

* * *

சங்கானை செங்கற்படை விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இன்று காலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 8 மணிக்கு சுவாமி தேரில் உலா வருவார். (வ)

## இந்தோனேஷியக் கடற்பரப்பில் நிர்க்கதியாகிய இலங்கையின் புகலிடக் கோரிக்கையாளர்கள்

இலங்கையர்கள் 40 பேரைக் கொண்ட படகு ஒன்று இந்தோனேசியாவில் தரைதட்டியுள்ளதாக இந்தோனேசிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

40 பேரைக் கொண்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் படகு ஒன்று இந்தோனேஷிய கடற்பரப்பில் நிர்க்கதியாகியுள்ளது.

குறித்த படகில் பயணித்த புகலிடக் கோரிக்கையாளர்களை மீட்பதற்கு விசேட குழுவொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

படகின் இயந்திரம் பழுதடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடல் நலக் குறைவால் படகில் பயணித்த சிலர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிசெ.27

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்மனின் திருவெம்பாவையின் இறுதி நாள் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு இடம்பெறும். அதிகாலை 2.30 மணிக்கு சமண கும்ப பூசையும் அதனைத் தொடர்ந்து விசேடமான நடேசர் அபிஷேகமும் ஒமம் வளர்க்கப்பட்டு தொடர் பூசைகளும் இடம்பெறும்.

காலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் பாட்டும், அம்மன் வீதியுலாவும் இடம்பெறும். (வ-50)

* * *

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறும். (வ)

**இடமாற்றம்**

கடந்த இரண்டு வருடங்களாக இல:388, ஆஸ்பத்திரி வீதி என்ற முகவரியில் தற்காலிகமாக இயங்கிவந்த **பரகாத் பேப்பர் ரேடிங் கம்பனி** என்ற தொழில் ஸ்தாபனம் 24.12.2012 திங்கள் தொடக்கம் **இல:184, ஆஸ்பத்திரி வீதி** என்ற முகவரியில் தொடர்ந்து இயங்கும் என்பதை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: (27166)(9.14)

Barakath Traders, 184, Hospital Road, Jaffna

**HND in Pharmacy**

Be a Pharmacist in 2 Years
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy

Lectures by MBBS Doctors !

Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now !
K.U Education
Pioneers in Medical Studies
[ Small Group Classes/Internship will be arranged ]

**Knowledge Universe**
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
Tel :0777302882 Web :www.kugroup.info

**அறைகள் வாடகைக்கு**

இரு அறைகள், சிறிய தங்குமிடம் சமையல் இட வசதியுடன் சிறிய குடும்பத்திற்கு அறைகள் வாடகைக்குண்டு.
22/1 பழங்கிணற்றடி பிள்ளையார் பின் வீதி, கலாசாலை வீதி, திருநெல்வேலி. நேரில் வரவும்.
S.S.நாதன் (27202) (6.7.4)

**விற்பனைக்கு**

உணவகத்திற்கு தேவையான பாவித்த நல்ல நிலையிலுள்ள சமையல் பொருள்கள் மற்றும் தளபாடங்கள், குளிர்சாதன பெட்டிகள் போன்றன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0772720103,0776454434. (27224) (6.7.4)

**TV கள் மலிவு விற்பனை**

மிக மிக மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"-13000/=, 29"-16000/= ,பைனியர் அம்பிளிபயர், Box வகைகள் ,DVD என்பன
தொடர்பு:0770440570 (அப்பளம்)
சோனி ரேடியோ சென்ரர் (கொமசல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம். (27264) (6.7.4)

**பசு விற்பனைக்கு**

5 நாளில் கன்று ஈனும், 15 போத்தல் பால் தரும் பசு மாடு விற்பனைக்கு உண்டு.
ஜோன், 27/3 ,புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வு.
021 300 6726. (27275) (6.7.4)

**பதவி வெற்றிடம்**

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றின் காட்சி அறைக்கு கணினி அறிவுடைய கணக்கியல் உதவியாளர் தேவை. (பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.)
30.12.2012 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிட்டமுகவரிக்குஅனுப்பவும்.
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (27073) (6.7.4)

**மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசாமி கோயில் திருவெம்பாவைத் தேர்த்திருவிழா 27.12.2012**

இன்று (27.12.2012) வியாழக்கிழமை தேர்த்திருவிழா நிகழ்வுகள்
காலை 6.30 மணி - திருப்பள்ளியெழுச்சி,
காலை 7.15 - உஷத்கால பூஜை
காலை 8.00 மணி -திருவெம்பாவை பூஜை
காலை 8.30 மணி - நடராஜப்பெருமான் தேரில் பவனி
நண்பகல் 12.00 மணி திருவருட் பிரசாதம் அன்னதானம்

28.12.2012 வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழா நிகழ்வுகள் ஆர்த்திரா தரிசனம்
காலை 6.30 மணி திருப்பள்ளியெழுச்சி
காலை 7.00 மணி உஷத்கால பூஜை
காலை 8.00 மணி ஸ்நபனாபிஷேகம், காலை 9.00 மணி காலைச்சந்தி
காலை 9.30 மணி சிதம்பரேஸ்வரர் திருநடனத்துடன் உள்வீதி பவனி
நண்பகல் 12.00 -திருவருட் பிரசாதம் மணி மகேஸ்வர பூஜை

2013 திருவெம்பாவை 4ஆம்-5ஆம் 7ஆம் பூசை உபயம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

* 01.01.2013 செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆங்கில வருடப் பிறப்பையிட்டு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.
* 14.01.2013 திங்கட்கிழமை தைப்பொங்கல் (மகரசங்கிராந்தி) பொங்கல் பூஜை அபிஷேகம்,விஷேட பூஜைகள் காலை 7.00 மணி முதல் நடைபெறும்.

மாவைக்கந்தா போற்றி! போற்றி!! நின்பாதம் சரணம்! சரணம்!!
மாவைக்கந்தன் தொண்டன்
ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள் (இ/5083)(5-6)

**Basic English with spoken**

G.C.E(O/L) பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கில கற்கை 3 மாத கால பயிற்சி
- English vocabulary
- Reading Skills
- ஆங்கிலம் சரளமாக பேசுவதற்கான நவீன கற்பித்தல் வழிமுறைகள்
- English Writing skills with basic Grammar
- பயிற்சி நெறியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
- கொழும்பு ஆசிரியர்களால் விரிவுரைகள் வழங்கப்படும்

இலவசம் சான்றிதழுடன்
Diploma in Information Technology
Office Application,Graphics Applications
Hardware & Network &Basic IT Concepts

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடம்
International Knowledge Pool
19,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (மக்கள் வங்கி 3வது மாடி)
இளந்தொண்டர் சபை மண்டபம் இணுவில் கந்தசாமி கோவில்
வதிரி வீதி, உடுப்பிட்டி
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அருகில்
மேலதிக விபரங்களுக்கு: ☎2221864 / 0771895164

**வலி மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்**

**வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2013**

எமது சபையானது 2013ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

01. கணனி, பிரதியாக்கல் இயந்திர திருத்தமும் சுத்திகரிப்பும்
02. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல்
03. வாகனங்கள் சுத்திகரிப்பு
04. மோட்டார் வாகனங்கள் உழவு இயந்திரங்கள் திருத்தம்
05. நீர்த்தாங்கி திருத்தம்

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ விண்ணப்பங்களை 31.12.2012ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது

## கலவன் பாடசாலைகள்



மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது கலவன் பாடசாலைகள்தான் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. இவ் வகையிலான சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மாணவர்கள் கலவன் பாடசாலைகளிலேயே உருவாகின்றனர்.

மேலும் புரிதலுடன் கூடிய மாணவர்களின் உருவாக்கம் கலவன் பாடசாலைகளில்தான் காணப்படுகின்றது. புரிதல் என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்வில் முக்கிய பங்கினை வகிக்கின்றது. இத்தகைய புரிதலுக்குரிய சந்தர்ப்பம் கலவன் பாடசாலைகளிலேயே காணப்படுகின்றது. ஆண் மாணவர்களும், மாணவிகளும் ஒருவரை ஒருவர் புரிந்துணர்வுடன் சமரசமாகப் பழகுவதற்கான சந்தர்ப்பம் கலவன் பாடசாலைகளிலேயே காணப்படுகின்றது. இது எதிர்கால வாழ்விலும் சரி மற்றும் அவர்களது மாணவப் பருவத்திலும் சரி, அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கு வித்திடும் என்றால் அது மிகையாகாது.

அத்தோடு ஆளுமை வளர்ச்சிக்குரிய பல பண்புகள் கலவன் பாடசாலைகளில்தான் தார்ப்பரியமாக, தத்ரூபமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இன்று எங்கள் பலரில் குறிப்பாக மாணவர்கள் பெரும்பாலானோர் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாட்டைப் பெரிதாகப் பார்க்கிறார்கள். இதற்கு தனிப்பாடசாலைகள் மேலும் உரமூட்டுவதாக அமைகின்றன. மாறாக கலவன் பாடசாலைகள் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாட்டை உடைத்து மாணவர்கள், சமரசமாகப் பழகுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்து அவர்களின் ஆளுமை வளர்ச்சியையும் செப்பனிடுகின்றன என்றால் அது மிகையாகாது. எனவே மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது கலவன் பாடசாலைகளே!



புரிதலுடன் கூடிய மாணவர்களின் உருவாக்கம் கலவன் பாடசாலைகளில்தான் காணப்படுகின்றது. புரிதல் என்பது மாணவர்களின் எதிர்கால வாழ்வில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.


**த.ஐங்கரதீபன்**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

# தற்கொலை

இன்று எமது நாட்டில் அதிகமான உயிர்கள் பலியாவது தற்கொலையில்தான். இதனைப் பற்றி பல்வேறுபட்டவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். தற்கொலை செய்வது கோழைத்தனம் என்கின்றனரே. இது நியாயம்தானா?

ஒரு மனிதனுக்குத் தன் மரணம் எப்பொழுதென்று தெரிந்துவிட்டால் அவன் அந்நொடியிலிருந்தே தன் நிம்மதியை இழந்துவிடுகின்றான். மரணத்தைக் கண்டு அஞ்சாதவர்கள் இன்றைய உலகில் எத்தனைபேர்? தன் மரணம் இந்தநொடியிலேயே என்று தெரிந்துகொண்டு அதனை விரும்பி ஏற்கின்றவன் கோழையாகி விடுவானா? நம் உற்ற உறவினன் ஒருவன் இறந்ததும் நாம் அவனை எண்ணி எவ்வளவோ துடிக்கின்றோம். ஒரு நொடியில் ஒருவருடைய பிரிவையே தாங்க முடியாமல் இவ்வளவு கதறி அழுகிறோமே, அதே ஒரு நொடியில் எவ்வளவோ சொந்தங்களைப் பிரிய அவன் எத்தனிக்கின்றானே. அவனுடைய மனதின் துடிப்பு எவ்வாறிருக்கும்? அதையேன் சிந்திக்க மறுக்கின்றீர்கள்? தற்கொலை செய்பவர்களெல்லாம் உணர்ச்சியற்ற சடப்பொருள்கள் அல்லவே.

தன் தாயை விட்டுத் தந்தையை விட்டு, நண்பர்களை விட்டு, உறவுகளை விட்டு, இவ்வுலகை விட்டு நீங்கிச் செல்கின்றான் எனில் அவன் மனதில் எவ்வளவு விரக்தியிருக்கும்?



ஒருவன் தற்கொலை செய்வதற்கான காரணம்தான் என்ன? காதல் தோல்வி, பரீட்சைப் பெறுபேறு மட்டுமல்ல இன்னும் எவ்வளவோ உண்டு. ஆயினும் ஒவ்வொரு மனிதனின் பிறப்புக்கும் ஓர் அர்த்தம் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளுங்கள்.



-நிறைநிலா

# விமர்சனம்



நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா?**
**பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................................

முகவரி :-..............................................................

..............................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மனித நேயம்..

நீயும் நானும்
வாழ்வதுவே வாழ்க்கை-அதை
நிதமும் எண்ணிப் பார்த்து
நிறுத்து உந்தன் போக்கை
அடுத்த வீட்டில் பசியினாலே
அழுத ஏழைகள்
பணம் நெடுத்த செல்வர்
நேரம் உண்ண கொழுத்த காடைகள்
உடுக்க உடுப்பில்லாது ஒருவர்
உழலும் வேளையில்
அதை அடுத்த மனிதர்
நகைக்கிறாரே என்ன மூளைகள்
பிறருக்காக வாழ் என்றார்
கர்த்தர் யேசு-அதைப் பற்றி
வாழப் பழகிக் கொண்டு
பிறருக்காகப் பேசு
இறந்த பின்னே இருப்பதில்லை
இரப்பவர்க்கு வீசு
மோட்ச திறப்பதனை தருவதில்லை
தரணியில் தான் காசு
உருகி எரியும் மெழுகினிலே
ஒளிபிறக்குது-மண்ணில்
அருகி மடியும் விதையினிலே
முளை பிறக்குது
கொடுங்கள் எனும் வார்த்தையில் தான்
நலம் இருக்குது-அங்கு
தருமம் எனும் தேவதையின்
கொடி பறக்குது

ஆன் அன்ரனி [illegible]

# ஏற்றுக் கொள்ளுங்கள்

மனவடுக்களை வலுப்படுத்தி
உங்களை எங்களில் பார்க்காமல்
உங்கள் பிள்ளைகளாக
எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள்

உயிரும் உள்ளமும் கொண்டு
இரத்தத்தாலும் சதையினாலுமான
உடலல்லவா நாங்கள்
பாரபட்சம் காட்டாதீர்கள்

உங்களை நம்பியல்லவா
எங்களை ஒப்படைக்கின்றோம்
ஆக்காவிட்டாலும் தயவு செய்து
அழித்து விடாதீர்கள்

புரிந்து கொள்ளுங்கள்
புரியாது நடந்து கொள்ளாதீர்கள்
பிதா காட்டிய குருவல்லவா
வெளிச்சம் தாருங்கள்

எதிர்கால சிற்பம் நாங்கள்
அதிசிறந்த சிற்பிகள் நீங்கள்
கவனமாக செதுக்குங்கள்- சிறு
தவறினாலும் சிதைந்துவிடுவோம்

தெரியுமல்லவா எங்கள் நிலை
புத்தி அதிகம் என்றால் ஏற்றியும்
மந்தம் என்றால் சரிசெய்தும்
மாற்றங்களை நீங்களே நிகழ்த்த வேண்டும்

எதிர்காலத் தலைவர்கள் எங்களை
தலை நிமிர வைத்திடுங்கள்
தலைகுனிய ஆவன செய்யாதீர்கள்
அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள்

வருங்காலம் பெருமைகள் கூறவும்
உங்களை இகழ்ந்து நாங்கள்
பேசாமல் இருக்கவும் வழிசெய்யுங்கள்
வழிப்படுத்துங்கள், வழிகாட்டுங்கள்



**சிந்துஜா குலசிங்கம்**
**(ஆரம்பக்கல்வி)**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**2ஆம் வருடம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா குணநாதன்

யாழ்ப்பாணம் ஸ்ரேசனடியைப் பிறப்பிடமாகவும், அராலிவீதி சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா குணநாதன்(குணம்) நேற்று (26.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்செனறவர்களான செல்லையா-செல்லம்மா தம்பதியின் அன்பு மகனும், பொற்கொடியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்லர்-மாணிக்கத்தின் மருமகனும், சண்முகநாதன், செந்தில்நாதன், தவமணி, சரசு, கமலா, ஆகியோரின் சகோதரரும், குமார், சசி(வவுனியா), சிவா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகுதந்தையும், ரஞ்சனா, ஜெசி, ரேகா ஆகியேரின் அன்பு மாமனும், தினேஸ், வசன், சஞ்சி, மானஷா, திலக்ஷி, டருன், டசாந், துசானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (27.12.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பி.ப. ஒரு மணிக்கு சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வீதி,
சங்கானை.

தகவல்:
குடும்பத்தினர்.

## நமசிவாயம் பாலசிங்கம்



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவில் வசித்துவந்தவருமான நமசிவாயம் பாலசிங்கம் நேற்று (26.12.2012) புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - ஆச்சிமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தம்பு - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், நந்தினி (கனடா), ஜெயந்தினி (கனடா), நந்தகுமார் (கனடா), ஜெயக்குமார் (கனடா), துசியந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாறன் (கனடா), வரதன் (கனடா), சாந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், நிருஜன் (கனடா), சாரு (கனடா), நிலானி (கனடா), மது (கனடா), மகிஸ் (கனடா), அவாலினி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும், இராயேஸ்வரி, இரஞ்சிதமலர், வன்னியசிங்கம், இரத்தினசிங்கம், காலஞ்சென்றவர்களான குணசிங்கம், பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (29.12.2012) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகவன்சந்தி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி/5098)(3.14)

தகவல்:
இரத்தினசிங்கம் (சகோதரன்)
0771512914

## சிவபாக்கியம் பழனியப்பா



வேலணை மேற்கு தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும், கரம்பன் கொன்றை வேலணை 9ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும், தற்போது லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பழனியப்பா (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா பழனியப்பாவின் அன்பு மனைவியும், அருளார் அமுதன்(லண்டன்), அருளார்அமலன் (சுவிஸ்), அருளார்சூரன் (லண்டன்), அருளார்நிமலன் (சுவிஸ்), அருளார்அகிலன் (சுவிஸ்), அருள்கௌரி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், சித்திரா தேவி (லண்டன்), கனகாம்பிகை(சுவிஸ்), சுகந்தி (லண்டன்), ஜெயராணி(சுவிஸ்), சந்திரிகா(சுவிஸ்), கிருஸ்ண குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் திலகவதி(ஓய்வு பெற்ற ஆசிரியர் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), சறோஜினி தேவி(லண்டன்), லக்சுமி(இந்தியா), பத்மாவதி, பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற திருஞானம் ஆகியோரின் சகோதரரும், திருஞானசம்பந்தமூர்த்தி(ஓய்வு பெற்ற சுங்கலாகா அதிகாரி இலங்கை), கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர், வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை), காலஞ்சென்ற குமாரவேலு மற்றும் கணபதிப்பிள்ளை, திலகவதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கணேஸ் மற்றும் மகாலட்சுமி(கனடா), மகாலிங்கம்(ஓய்வு பெற்றதபால் அதிபர்), திருநாவுக்கரசு(கனடா) ஆகியோரின் அண்ணியும், காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், இரத்தினாம்பிகை, இராமசாமி, மற்றும் பொன்மயிலாம்பிகை, வள்ளிநாயகி(கனடா) ஆகியோரின் சகலியும், ராஜீவ், ரமேஷ், ரூபேஷ், கிருஷாந்த், கீர்த்தனா, சங்கவி, யதுர்ஷா, யார்னிதன், அபிராம், அக்சயன், பிரவீணா, பிரனாஸ் ஆகியோரின் அருமைப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் (30.12.2012) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.-+41434950065
+41797906591

தகவல்;
அகிலன்(மகன்)

# மட்டக்களப்பில் சீரற்ற காலநிலை; வாழ்வாதாரத் தொழில்கள் பாதிப்பு

மட்டக்களப்பு,டிசெ.27

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடரும் சீரற்ற காலநிலை மற்றும் வெள்ளம் காரணமாக விவசாயம், மீன்பிடி , கால்நடை வளர்ப்பு ஆகிய வாழ்வாதாரத் தொழில்கள் பாதிக்கப்பட் டுள்ளன.

பாதிப்பு பற்றிய விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன. 40 வீதமான பெரும்போக நெற்செய்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.ருசாந்தன் தெரிவித்தார்.

இந்த மாவட்டத்தில் மழை வெள்ளம் காரணமாக சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் தொழில் வாய்ப்பு இழந்து பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட மீன்பிடித்துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.ரி.ஜோர்ஜ் தெரிவித்தார்.

மழையால் வாவி மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் 15 ஆயிரத்து 500 மீனவர்களும், கடற்றொழிலை நம்பியிருக்கும் 12 ஆயிரத்து 500 மீனவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு வாவியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த காங்கேயனோடையைச் சேர்ந்த இரு மீனவர்கள் உயிரிழந்துள்ளனர். 18 லட்சம் பெறுமதியான ஆழ்கடல் மீன்பிடி படகு ஒன்று சேதமடைந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சேதவிவரங்களை திரட்டுவதற்கு உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயத் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் இரா.ஹரிகரன் கூறினார். (ச)

# வீடுகள் இழந்தோருக்கு 20,000 ரூபா நஷ்டஈடு

### கிழக்கு அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு என்கிறார் விவசாய அமைச்சர்

மட்டக்களப்பு,டிசெ.27

கிழக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு உடனடியாக 20,000 ரூபா நஷ்ட ஈடு வழங்குவதற்கு கிழக்கு மாகாணசபையின் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இத்தகவலை மாகாண அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்த கலந்துரையாடல் அமைச்சரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் தலைமையில் கடந்த திங்கட்கிழமை திருகோணமலையில் கூடியது. அதன்போது கிழக்கு மாகாணத்தில் வெள்ள இடரால் வீடுகள் பாதிக்கப்பட்டோருக்கு 20,000 ரூபா நஷ்ட ஈடு வழங்கப்படும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுகாதார குறைபாடுகள் பாதிக்கப்பட்டோருக்கும் இழப் பீடுகள் வழங்கப்படும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.- என்றார்.

# வெள்ளம் வழிந்தோட நீர்த்தாவரங்கள் தடை

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச நெல் வயல்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் வடிவதற்கு நீர்த் தாவரங்கள் தடையாக உள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மாவட்டத்தின் மேற்குப் புறமாக அமைந்துள்ள நெல் வயல்களில் நிரம்பியுள்ள வெள்ள நீரானது, கால்வாய்கள் மற்றும் ஆறுகள் மூலமாக வடிந்து சென்று கடல் பகுதியை அடைய வேண்டியுள்ளது.

எனினும் ஆற்று வாழை மற்றும் சல்பீனியா போன்ற நீர்த் தாவரங்கள் வயலில் நீர் வடிந்தோடும் பகுதிகளில் அதிகளவு வளர்ந்து காணப்படுகிறது. அதனால் வயல் பகுதிகளிலுள்ள வெள்ள நீர் மிகக் குறைந்தளவிலேயே வடிந்து வருகிறது என்று விவசாயிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அட்டாளைச்சேனைப் பகுதியிலுள்ள மீனோடைக்கட்டு பிரதான கால்வாய் பகுதியில் அதிகளவு ஆற்றுவாழை செறிந்து வளர்ந்துள்ளது. அதனால் நெல்வயல்களில் தேங்கியுள்ள வெள்ள நீர் வடிவதில் தடை ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

NALIN IT
புது வருடத்தை முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு...
hp DELL
* HP 1000 Dual core Laptop- Rs 56,000/=
* Pavilion G6 i3 Laptop- Rs 59,900/=
* HP 2000 Core i3 Laptop- Rs 68,000/=
* Dell 3520 Core i5 Laptop- Rs 79,900/=
* Dual Core Pc full set- Rs 47,800/=
* Core i3 Pc full set- Rs 56,800/=
free - lap bag headphone mouse
NALIN INFORMATION TECHNOLOGIES Pvt.ltd
Tp-0212221121 / 0777667975 fb.com/nalin.jaffna

காணி விற்பனைக்கு
கோண்டாவில் சந்திக்கு அருகில் கோண்டாவில் இருபாலை வீதியில், வன்னியசிங்கம் வீதியில் 2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட 3 காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு
தொடர்பு 0777037058
கொக்குவில் கோண்டாவில் பகுதியில் 4 பரப்புக் காணியுடன் வீடு தேவைப்படுகிறது

புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவில் கணினிகள்
HP 3.0 Full Set - 24750/=
INTEL D/Core - 29750/=
COMPAQ CQ43 Laptop 31500/=
Hp g6 Laptop - 60500/=
மற்றும் பல்வேறுபட்ட விலைகளில்
இச்சலுகை 31 ஆம் திகதி வரை மட்டுமே
இலவசம் / Free
WEB CAMARA / 8 GB PEN DRIVE / BAG / HEAD PHONE
ST. ANTONY'S
0212224865 / 0750698608
(14 ஆவது வருட சேவையில்)

# மரண அறிவித்தல்

## முத்தன் தவஞானம்



பலாலி தெற்கு வசாவிலானைப் பிறப்பிடமாகவும், இல.33, அரசடி வீதி, 1ஆம் ஒழுங்கை நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தன் தவஞானம் நேற்று (26.12.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தன்-வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து -லட்சுமிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அனபுக் கணவரும், திருபராங்கன், விஜயறாகவன் (தேசிய நீர்வழங்கள் வடிகால மைப்பு), நிறோஜன்(தேசிய நீர்வளங்கள் வடிகால் வடிகாலமைப்பு), ரமணன், பிரியங்கா (மாணவி, வைத்தீஸ்வரா கல்லூரி) காலஞ்சென்ற ரகுராம் ஆகி யோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று(27.12.2012) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.33, அரசடி வீதி,
1 ஆம் ஒழுங்கை,
நல்லூர்.

தகவல்:
குடும்பத்தினர்.

NEW SCIENCE HALL
JAFFNA.
2015 A/L ENGLISH MEDIUM MATHS & BIO
Commences on 28.12.2012
• PHYSICS : MR.S.SOTHILINGAM
• CHEMISTRY : MR.M.MAHESWARAN / : MR.S.DIAS
• COM • MATHS : MR.S.SIVAKARAN
• BIOLOGY : MR.T.THAMBIRAJAH / : OUR USUAL THACHER
(C.5093)(7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
கோவிந்தசாமி
ஸ்ரீகாந்தன்



தோற்றம்
27.01.1957

மறைவு
27.11.2012

டிசெம்பரில் வருவீர் என நாம் பார்த்திருக்க
டிசெம்பர் வரும் முன் வந்தது அந்த அவலச்செய்தி
தாயும் சகோதரிகளும் மைத்துனர்களும், மருமக்களும்
உம்மை எண்ணி கதிகலங்கி நிற்கின்றோம்

கடந்த 27.11.2012 இறைபதம் அடைந்த எமது குலவிளக்கு கோவிந்தசாமி ஸ்ரீ காந்தன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.12.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


கோட்டைக்காடு.
மல்லாகம்.

(27301)(2.6)

உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை லோகேந்திரா (லோகு)கடந்த (24.12.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை(செங்கலடி ஸ்ரீமுருகன் ஜுவெல்லரி உரிமையாளரும், மண்டைதீவு சிறுபுலம் கந்தசாமி கோயில் தர்மகர்த்தாவும்) மற்றும் இராசம்மா (பிரான்ஸ்)தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் செல்லத்துரை - சொர்ணம்மா (அல்லைப்பிட்டி உடையார்), காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் - சொர்ணம்மா (மண்டைதீவு) ஆகியோரின் அன்புப் பேரனும் திருநாவுக்கரசு - பராசக்தி (மண்டைதீவு சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா) தம்பதியரின் மருமகனும் நாகேஸ்வரியின் (வசந்தி) அன்புக் கணவரும், சங்கவி, சஜிதன், சங்கவை ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயசுந்தரராஜா (தெய்வம் மார்ஷே உரிமையாளர் - பிரான்ஸ்), சிறீஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), மஞ்சுளா (ஜேர்மனி), சோமேஸ்வரி (பிரான்ஸ்), தெய்வேந்திரா (பிரான்ஸ்), விஜியேந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, லோகேஸ்வரி ( சுவிஸ்), லோகநாதன் (கனடா), ரகுநாதன், கேதாரநாதன், காலஞ்சென்ற பஞ்சாட்சரநாதன் மற்றும் விக்னேஸ்வரி (பிரான்ஸ்), ஜெகநாதன், ஜெகதீஸ்வரி, செந்தில்நாதன் (கனடா), ரெட்ணமணி (பிரான்ஸ்), ரூபவதி (பிரான்ஸ்), குலேந்திரா (பிரான்ஸ்), மகாலிங்கம் (ஜேர்மனி), ராஜ்குமார் (பிரான்ஸ்), கவிதா கோமளவள்ளி, ரகுநாதன் (சுவிஸ்), அரங்கநாயகி (கனடா), கீதா, அனுசா, கலைவாணி, இளஞ்செழியன் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, பிரபாகரன், யசோ (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்லத்துரை தவவிநாயகம் (கிராமசபைத் தலைவர் கிராமதலைமைக்காரர் அல்லைப்பிட்டி)மற்றும் திரு. திருமதி நடேசபிள்ளை- மங்கையர்க்கரசி (பிரபலவர்த்தகர்), திரு.திருமதி செல்வலெட்சுமி ராமநாதன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்), திரு.திருமதி சிவரெத்தினம்-புவனேஸ்வரி (பிரான்ஸ்), ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - சிவயோகலட்சுமி (தபாலதிபர்-அல்லைப்பிட்டி), கந்தையா-பரமேஸ்வரி (சிறாப்பர் வேலணை), சுயம்புலிங்கம் மற்றும் ஜெயஸ்ரீ (கனடா), திரு.திருமதி ஞானசம்பந்தன் - தையல்நாயகி (விவாகப் பதிவாளர்-சுதுமலை), சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர்), காலஞ்சென்ற நடேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.12.2012 வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெற்று இலங்கை நேரப்படி பி.பகல் 3 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0951398321 ராஜ்குமார் (பிரான்ஸ்), 0622406757ராசன்(பிரான்ஸ்)
0612119727 சிறீ (பிரான்ஸ்), 0669373238 தெய்வம்(பிரான்ஸ்)
0652300755 விஜயன்(பிரான்ஸ்), 0565687890 சியாமளா (பிரான்ஸ்)
0014164292480 லோகநாதன் (ரவி கனடா),
0041627522577லோகேஸ்வரி (ஆச்சி சுவிஸ்),
00492131166244 மஞ்சுளா (ஜேர்மனி)
0033751318723 நாகேஸ்வரி(பிரான்ஸ்)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், தாய், சகோதரர்கள்
செ. நடேசபிள்ளை (சிறிய தந்தை)
பொ. வி. திருநாவுக்கரசு (மாமன்)

நல்லூர். 0212225921

# மரண அறிவித்தல்

## எட்வேட் சண்முகம்

### (முன்னாள் ஊழியர், இலங்கை வேதாகம சங்கம்)



இல. 119, ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட R.K. எட்வேட் சண்முகம் நேற்று முன்தினம் (25.12.2012) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி கிறேஸ் தவமணியின் அன்புக் கணவரும், இயேசுமலர் அரியபுஸ்பம் (தென்னிந்திய திருச்சபை, முன்பள்ளி - வரணி), ஜீவப்பிரான் திவ்வியசுதன் (சுவிஸ்), நீதிபரன் தேன்கனி (கனடா), அட்சயன் தேசோமயம் (ஜேர்மனி), ரூனி உசேனி (லண்டன்), எப்சிபாள் செல்வி சயிந்தவி (பிரான்ஸ்), சாலேம் துயாவந்தி (ஜேர்மனி), ஆசேர் ஒமேகா (ஜேர்மனி), லீபனோன் பாருக் ஆமென் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோன் பாலசுப்பிரமணியம் (ஏழாலை), பாக்கியராசா (லண்டன்), புஸ்பராசா (பிரான்ஸ்), கிங்ஸ்லி கிருபாகரன் (ஜேர்மனி), கவிதானந்தி (ஜேர்மனி), ஜெபநிதி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் சாந்தினி (சுவிஸ்), லதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனேஸ் ஜெகசுதன் (தயாரிப்பாளர்- MTV Channel (Pvt) Ltd), ஜெபி ஜேனோதன் (லண்டன்), ஸ்ரலினா (லண்டன்), றெக்ஸ் றஜந்தன் (லண்டன்), றோய் றொனால்ட் (லண்டன்), அலெக்ஸ் (லண்டன்), ஒசானா (ஜேர்மனி), சாரோன் (ஜேர்மனி), சாரா (ஜேர்மனி), டுவிங்கிள் (கனடா), டுவிங்டன் (கனடா), ஸ்ரெபனி (பிரான்ஸ்), ரயான் (பிரான்ஸ்), கெவின் (பிரான்ஸ்), திமோத்திபிரியன் (ஜேர்மனி) ஜெரிமி (ஜேர்மனி), றொஷேல் (ஜேர்மனி), மார்க் (ஜேர்மனி), சரோமி (ஜேர்மனி), கிம் (ஜேர்மனி), கஜா (ஜேர்மனி), டெனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.12.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் ஏழாலை வடக்கு அமெரிக்கன் சிலோன் மிஷன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல்:
எட்வேட் குடும்பத்தினர்.
0212059036

(97228)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூதனசாலையில் திருடியவர் இரவு முழுவதும் அங்கு தங்கினார்

## கடமையில் இருந்த பொலிஸார் உறக்கத்தில்!

கொழும்பு,டிசெ.27

கொழும்பு தேசிய நூதன சாலையில் அண்மையில் புராதன பொருள்களைத் திருடியது கண்கெட்ட என அழைக்கப்படும் பியந்த மேதீஸ் என்பவரே என்று பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

அந்தத் திருட்டுச் சம்பவத்துக்கும் வேறு எந்தத் தரப்பினருக்கும் தொடர்பு இல்லை என்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுரசேனநாயக்க தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய நூதனசாலையில் திருடப்பட்ட 221 புராதன தொல்பொருள்கள் நாட்டின் பல பிரதேசங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தத் திருட்டு இடம் பெற்ற நாளன்று பகலில் தேசிய நூதனசாலைக்குச் சென்ற பியந்த என்ற நபர் இரவு முழுவதும் அங்கு தங்கியிருந்து, 21 அலுமாரிகளில் இருந்த புராதன பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளார்.

அந்தச் சம்பவம் இடம் பெறுவதற்கு மூன்று நாள்களுக்கு முன்னர் நூதன சாலைகளில் பொருத்தப்பட்ட கமரா செயலிழந்துள்ளது. சம்பவம் இடம்பெற்ற தினம் கடமையில் இருந்த பொலிஸார் உறங்கிவிட்டனர்.

கைவிரல் அடையாளங்களை வைத்துப் பார்க்கும் போது திருட்டில் ஈடுபட்டது பியந்த என்ற நபரே என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். -என்றார். (ச)

# ஆன்மிகப் பணிகளை முன்னெடுத்த நாகமணிப் புலவருக்கு உருவச்சிலை

யாழ்ப்பாணம்,டிசெ.27

நயினாதீவில் சமய-சமூகப் பணி மற்றும் ஆன்மிகப் பணிகளை முன்னெடுத்த அமரர் நாகமணிப் புலவருக்கு உப அலுவலகத்தில் சிலை அமைக்க சபை முன்வர வேண்டும்.

இவ்வாறு வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ந.கருணாகரமூர்த்தி முன்வைத்த கோரிக்கையை வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா ஏற்றுள்ளார்.

நயினாதீவில் பன்முக புலமையாளனாக பன்முக சேவையாற்றியவர் அமரர் நாகமணிப் புலவர். அவரின் சேவையை நயினாதீவு மக்கள் மட்டுமன்றி வடக்கு மாகாண மக்களும் உணர்ந்துள்ளனர்.

அமரர் நாகமணிப் புலவர் இருக்கும் காலத்தில் சமயத்துக்காகவும், சமூக வாழ்வுக்காகவும் தியாக சிந்தனையுடன் சேவையாற்றியவர்.

அவரது சேவை மரணத்தின் பின்னரும் மதிக்கப்படுகின்றது.

**நாகமணிப் புலவர் இருக்கும் காலத்தில் சமயத்துக்காகவும் சமூக வாழ்வுக் காகவும் தியாக சிந்தனையுடன் சேவை யாற்றியவர்**

எனவே சபையினராகிய நாம் அமரர் நாகமணிப் புலவருக்கு நயினாதீவு உப அலுவலக எல்லைக்குள் உருவச் சிலை அமைத்துப் போற்ற வேண்டும். என முன்னாள் சபைத் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான ந.கருணாகர குருமூர்த்தி கோரிக்கை விடுத்திருந்தார்.

மேற்படி கோரிக்கையை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதுடன், விரைவில் உருவச் சிலை அமைப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் சபைத் தலைவர் சி.சிவராசா தெரிவித்தார். (வ-50)

## முதலாம் தவணை கல்வி நடவடிக்கை

க.பொ.த. சாதாரண தரம் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணி நடைபெறவிருப்பதன் காரணமாக யாழ்.மத்திய கல்லூரி முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் யாவும் எதிர்வரும் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை எதிர்வரும் 2 ஆம் திகதி பாடசாலையின் சகல ஆசிரியர்கள் மெய்வல்லுனர் நிகழ்ச்சி, பெருவிளையாட்டு அணிகளில் உள்ள மாணவர்கள் சகலரும் பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டது

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)


## இலவச ஆங்கில வகுப்புகள்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

வகுப்புகளில் கலந்து பயிற்சியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகளுக்கான பதிவுகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை9 மணி தொடக்கம், நண்பகல் 2 மணி வரை பீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## உடுவில் பிரதேச சபை கட்டடக் கூரை 'சீற்று'கள் கழன்று விழுந்தன



வலி. தெற்கு உடுவில் பிரதேச சபை கட்டி முடிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கூட முடிவடையாத நிலையில், குறிப்பிட்ட கட்டட முன் மண்டபத்தின் கூரையின் உட்புற 'சீற்று'கள் கழன்று விழுந்துள்ளன. தற்போது குறிப்பிட்ட கட்டட ஒப்பந்தகாரர் சபையின் மீது குறிப்பிட்ட கட்டடத்தை நிர்மாணித்தமைக்கான இறுதிக்கட்டக் கொடுப்பனவை வழங்கவில்லையென வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில் கட்டடத்தின் முன்புறத்தில் இத்தகைய நிலைமை ஏற்பட்டுள்ளது. (வ-86)

## வலி.கிழக்கில் கைவிடப்பட்ட கேணிகளிலுள்ள நுளம்புக் குடம்பிகளை அழிக்க நடவடிக்கை

வலி.கிழக்குப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள கேணிகளில் காணப்படும் நுளம்புகளின் பெருக்கத்தைக் குறைப்பதற்குரிய மருந்து விசிறும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கால்நடைகளின் குடிதண்ணீர் தேவைக்காக முன்னர் அமைக்கப்பட்ட குறித்த பழைமை வாய்ந்த கேணிகள் தற்போது பாவனையின்றி பாழடைந்த நிலையில் உள்ளன.

பற்றைகள் மற்றும் செடிகளால் மூடிக் காணப்படும் மேற்படி கேணிகளில் நுளம்புக் குடம்பிகள் பெருமளவில் காணப்படுகின்றன. அதனை அழிப்பதற்கு கேணிகளுக்கு விசேட மருந்துகள் சுகாதாரப் பகுதியினரால் விசிறப்பட்டு வருகின்றன.

கால்நடைகளின் பாவனையின்றிக் காணப்படும் மேற்படி கேணிகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வலி. கிழக்குப் பிரதேச சபையின் தலைவர் முன்னர் தெரிவித்திருந்தார். (வ-17)

## 4 ஆவது நாளாகவும் தொடர்கிறது ஈழ அகதிகளின் உண்ணாவிரதம்

சமாதானப் பேச்சுக்கு மறுப்புத் தெரிவித்து செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் ஈழத்தமிழர்களின் உண்ணா விரதம் 4 ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

செங்கல்பட்டு அகதிகள் சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுள்ள தவதீபன், காண்டீபன், ஜான்சன், சவுந்தர்ராஜன் உட்பட 7 பேர் தங்களைத் திறந்த வெளி முகாமுக்கு மாற்றக்கோரி கடந்த 23 ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

அவர்களிடம் தாசில்தார் இளங்கோவன், வருவாய் ஆய்வாளர் பிரபாகரன், கிராமநிர்வாக அலுவலர் சுப்பிரமணி மற்றும் அதிகாரிகள் சமாதானப் பேச்சு நடத்தினர்.

தங்களை உடனடியாக திறந்த வெளி முகாமுக்கு மாற்றும் வரை போராட்டம் தொடரும் என்று கூறி அவர்கள் உண்ணாவிரதத்தை கைவிட மறுத்து விட்டனர்.

இந்தநிலையில் அகதிகளின் உண்ணா விரதம் நேற்று 4 ஆவது நாளாக நீடித்தது. (வ)

## வாகனங்களின் உதிரிப்பாகங்களை எடுத்துச் செல்ல முயன்றோர் கைது

வலி.வடக்கு, டிசெ. 27

வன்னியில் இருந்து வாகனங்களின் உதிரிப் பாகங்களைக் கொண்டு செல்ல முயன்ற மூவர் ஓமந்தை சோதனைச்சாவடியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யபட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் வாகனங்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் பொலிஸாராலும், இராணுவத்தினாலும் சோதனைக்கு உள்ளாக்கப்படுவது வழமையாகும்.

இந்த வகையில் குறிப்பிட்ட லொறி ஒன்றை சோதனையிடும் போது அதில் வாகனங்களின் உதிரிப் பாகங்கள் இருப்பது தெரியவந்துள்ளது. இதனைத் தொடர்ந்து வாகனத்தில் இருந்த முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் நொச்சியாகம பகுதியைச்சேர்ந்த இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

## வறிய மக்களுக்கு இலவச சக்கர நாற்காலிகள்

தென்மராட்சி,டிசெ.27

தென்மராட்சிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கான இலவச மூக்குக்கண்ணாடி, மூன்று சில்லு சைக்கிள் சக்கர நாற்காலி ஆகியவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உரிய வைத்திய நிபுணர்களால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழினை சமர்ப்பித்து இவை [illegible]மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## புகலிடக் கோரிக்கையாளர்கள் 23 பேர் மனுஸ் தீவுகளுக்கு

கொழும்பு,டிசெ.27

இலங்கை, மியன்மார் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகலிட கோரிக்கையாளர்களை குடிவரவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.

அதில் 21 பேர் மியன்மார் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று தென்கொரியா நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தென்கொரியாவில் புகலிடம் கோருவோரின் எண்ணிக்கையானது 1997 ஆம் ஆண்டு 12 ஆக இருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு 100 ஆக உயர்வடைந்துள்ளது.

2011 ஆம் அந்தத் தொகை 1000 பேரை கடந்துவிட்டதாக குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று தென்கொரிய ஊடக நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா மாவட்டத்தில் எறிபந்து விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பயிற்சி முகாம் ஒன்று ஓமந்தை மத்திய கல்லூரியில் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்பயிற்சி ஆசிரியர்களும், ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டு எறிபந்து தொடர்பான விளக்கங்களையும், பயிற்சிகளையும் பெற்றனர். (ந-122)

# பட்டம் விடும் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

வடமராட்சி, டிசெ.27

தம்பசிட்டி, உதயதாரகை விளையாட்டுக்கழகம் புதுவருட தினத்தையொட்டி பட்டம் விடும் போட்டி ஒன்றை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தவிருந்தது. எனினும் சீரற்ற கால நிலை காரணமாக குறித்த பட்டம் விடும் போட்டி பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். இதேவேளை போட்டிக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும், இதன்போது போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொண்டு பங்குபெறலம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

16 வயதுக்குக் கீழ்,மேல் என இரு பிரிவுகளாக இந்தப்போட்டி நடத்தப்படவுள்ளது. பட்டத்தின் அளவு, பட்டத்தின் புதுமை, பட்டத்தின் அலங்காரம், பட்டங்களின் தொடர், பட்டத்தின் ஆட்டம், விண் என்னும் பிரிவுகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் பட்டங்களுக்கு பரிசு வழங்கப்படவுள்ளது. சிறப்புப் பரிசாக பெரிய பட்டத்தை விரைவாக வலிக்கும் குழுவுக்கு வழங்கப்படவுள்ளது. (ந-8)

## ஜமாலியாவின் ஜொலிப்பில் இரையாகியது ஈகிள்ஸ் அணி

திருகோணமலை,டிசெ.27

திருகோணமலை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் திருகோணமலை மக்கெய்சர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஜமாலியா விளையாட்டுக் கழக அணி வெற்றியீட்டியது.

இந்த ஆட்டத்தில் ஜமாலியா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளையாடியது ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம். இந்த ஆட்டத்தில் ஆரம்பத்தில் இருந்தே அபார ஆட்டத்தை ஜமாலியா விளையாட்டுக்கழக வீரர்கள் வெளிப்படுத்தினர். எனினும் ஜமாலியா அணிக்கு தாம் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்று நிரூபிக்கும் வகையில் ஈகிள்ஸ் அணி வீரர்களும் பதிலடியில் இறங்கினர். எனினும் நீண்ட போராட்டத்தின் பின்னர் 3:1 என்ற கோல்கணக்கில் ஜமாலியா விளையாட்டுக் கழகத்திடம் மண்டியிட்டது ஈகிள்ஸ் அணி.

(ந-23)

## இராணுவத்தின் ஏற்பாட்டில்

# முல்லை. மாவட்ட உதைபந்து செல்வபுரம் சந்திரன் சம்பியன்

ஆட்டம் முடியும்வரையும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றிருந்ததினால், ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றி தோல்வி சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

முல்லைத்தீவு,டிசெ.27

முல்லைத்தீவு மாவட்ட இராணுவத்தின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டது. இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பியனானது.

குறித்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி அலம்பில் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிலாவத்தை இளம் பறவைகள் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

போட்டியின் 5 ஆவது நிமிடத்தில் இளம்பறவைகள் அணி முதலாவது கோலினை அடித்து அதிர்ச்சி வைத்தியம் அளித்தது. பதிலுக்கு சந்திரன் அணியால் அடிக்க முடியவில்லை. இதனால் முதல் பாதி ஆட்டத்தில் 1 : 0 என்ற கோல் கணக்கில் இளம் பறவைகள் அணி முன்னிலை வகித்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் சந்திரன் விளையாட்டுக்கழக அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு ஒன்று கிடைத்தது. அதனை வீணாக்காது கோலாக்கியது சந்திரன் அணி. இதனால் போட்டியில் இரு அணிகளும் 1:1 என்ற ரீதியில் சமநிலையை அடைந்தன. ஆயினும் இந்தச் சமநிலையை உடைத்து வெற்றியை தம்வசமாக்கி கிண்ணத்தை சுவீகரித்து இரு அணிகளும் கடுமையாகப் போராடின.

எனினும் ஆட்டம் முடியும்வரையும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலினைப் பெற்றிருந்தினால், ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றி தோல்வி சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது.

இதில் செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் 4 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

சுற்றுப்போட்டியின் சிறந்த வீரராக சந்திரன் விளையாட்டுக்கழக அணியினைச் சேர்ந்த கே.நிசாந்தன் தெரிவானார்.

வெற்றிபெற்ற அணிக்கும் வீரர்களுக்கும் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்ட முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதி பிரிகேடியர் மார்க், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் என்.வேதநாயகம் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

(ந-23)

## மணற்காடு அன்ரனீஸை வீழ்த்திய ஆதிசக்தி அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம்,டிசெ.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களிற்கு இடையே 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதியாட்டம் ஒன்றில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி வெற்றியீட்டி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி றெற்றது.

இந்தப் போட்டியில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரு அணிகளும் சமபலம் மிக்கவை என்பதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. எதிரணியின் கோல் கம்பத்தை நோக்கி இன்னொரு அணியின் முன்கள வீரர்கள் ஊடுருவுவதும், அதனை மற்றைய அணியின் பின்கள வீரர்கள் முறியடிப்பதுமாக ஆட்டத்தின் போக்கு ஒரே விதத்தில் நகர்ந்தது. எனினும் ஒரு கட்டத்தில் இரு அணிகளும் ஏட்டிக்குப் போட்டியாக தலா ஒவ்வொரு கோல்களை அடித்து தமது பலத்தை நிரூபித்தன.

மேலதிகமாக ஒரு கோலை அடித்து, அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பைத் தக்கவைத்துக்கொள்ள ஆட்டத்தின் இறுதி நேரத்தில் இரு அணி வீரர்களும் பகீரதப்பிரயத்தனம் செய்தனர். ஆயினும் அந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இதனால் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒவ்வொரு கோல்களையே பெற்றிருந்ததனால் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

எனவே ஆட்டத்தின் வெற்றி, தோல்வி சமநிலை தவிர்ப்பு உதைகள் மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதிலும் இரு அணிகளும் தமது முழுத்திறனை வெளிப்படுத்தின. தமக்கு வழங்கப்பட்ட 5 சந்தர்ப்பங்களையும் வீணடிக்காது , அவற்றை கோல்களாக மாற்றினர் ஆதிசக்தி அணி வீரர்கள். ஆயினும் தமக்குக் கிடைத்த சமநிலை தவிர்ப்பு சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி 4 கோல்களை மட்டுமே மணற்காடு சென். அன்ரனிஸ் அணியால் அடையமுடிந்தது.

இதனால் ஆதி சக்தி விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று, அரையிறுதிக்குள் நுழைந்தது.

(ந-23)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்துக்கு புதிய நிர்வாகம்

வலி.வடக்கு,டிசெ.27

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் புதிய நிர்வாகத்தினர் பதவியேற்றுள்ளனர். யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ப.முருகவேல் தலைமையில் கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட புதிய நிர்வாகக் குழுவினர்-

**தலைவர்**-ப.முருகவேல்,

**உப தலைவர்கள்**- என். சிவராஜ் ,எ.கோபிகிருஷ்ணா எஸ்.விமலதாசன், எம்.குகராஜன் ஆர்.செல்வராசா,

**செயலாளர்**-எஸ்.சிவசங்கர்,

**பொருளாளர், உப செயலாளர்**- ரி.றெபேசன்

**நிர்வாக உறுப்பினர்கள்.**

வி.கே.சண்முகலிங்கம், என்.நவரத்தினராசா, எம்.சிதம்பரப்பிள்ளை,எம்.வேதாபரணம், எஸ்.ஞானதயாளன்

**கணக்காய்வாளர்கள்** [illegible] கே.நாதன். (ந-86)

# சங்கானை ஐக்கியம் அபாரம் கரவெட்டி ஐங்கரன் பரிதாபம்

வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற வெறியோடு இறுதிவரை போராடிய ஐங்கரன் அணியின் சகல இலக்குகளையும் வீழ்த்தி, அவர்களின் வெற்றிக் கனவை தகர்த்தனர் ஐக்கிய அணி வீரர்கள்.

யாழ்ப்பாணம்,டிசெ.27

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகு விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியாக 11பேர் பங்கு பற்றும் 10 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்று நடத்தப்படுகிறது. இதில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 9 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சங்கானை ஐக்கியம் அணி களமிறங்கியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்தது. இலக்கு இழப்பைப் பற்றி அக்கறை கொள்ளாமல் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்துவதிலேயே ஐக்கிய அணியின் வீரர்கள் குறியாக இருந்தனர். எதிரணியின் பந்து வீச்சை சிதறடித்து அந்த அணி ஒரு பந்துப் பரிமாற்றங்களுக்கு 6.5 ஓட்டச்சராசரியுடன் துடுப்பெடுத்தாடியது.

இதனால் 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து சங்கானை ஐக்கியம் அணி 66 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் விஜய் 13 ஓட்டங்களையும் சோதி, பூபதி ஆகியோர் தலா 7 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் ரகு நிருபன், ரமேஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், பிரதீபன் ஒரு இலக்கினையும் வீழ்த்தினர்.

67 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்தத் தொடங்கியது கரவெட்டி ஐங்கரன் விளையாட்டுக்கழகம். ஆயினும் தமது துல்லியமான பந்துவீச்சின் மூலம் ஐங்கரன் அணியின் இலக்குகளை அடுத்தடுத்து சரித்து போட்டியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் ஐக்கியம் அணியின் பந்துவீச்சாளர்கள்.

இலக்குகள் வீழ்ந்த போதும், வெற்றிபெற்றே தீரவேண்டும் என்ற வெறியோடு இறுதிவரை போராடியது ஐங்கரன் அணி. ஆயினும் அந்த அணியின் சகல இலக்குகளையும் வீழ்த்தி, அவர்களின் வெற்றிக் கனவை தகர்த்தனர் ஐக்கிய அணி வீரர்கள்.


9 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஐங்கரன் அணி சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

இதில் கவி 11 ஓட்டங்களையும், நிதர்சன் 7 ஓட்டங்களையும் ,ரமேஸ் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சங்கானை ஐக்கிய விளையாட்டுக்கழக அணி சார்பில் சுரேஸ் 3 இலக்குகளையும், பூபதி அக்தர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ந-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டத்தில் ஆஸி. முழு ஆதிக்கம்



ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. நேற்றைய நாள் முடிவில் ஆட்டம் ஆஸ்திரேலிய அணியின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 'பொக்ஸிங்டே' டெஸ்டில் இலங்கை, ஆஸ்திரேலிய அணிகள் நேற்று மோதின. மெல்போர்ணில் ஆரம்பமான இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 43.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 156 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. முதலாவது இலக்கை 13 ஓட்டங்களுக்கே இழந்த இலங்கை அணி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறியது. அதன் பின்னர் 4 ஆவது இலக்குக்காக 42 ஓட்டங்கள் பகிரப்பட்ட போதிலும், திலான் சமரவீர ஆட்டமிழக்க, தொடர்ந்து வந்த வீரர்களும் ஆட்டமிழந்தனர். சிறப்பாக ஆடிய குமார் சங்ககார 8 ஆவது இலக்காக ஆட்டமிழந்தார்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக சங்கா 58 ஓட்டங்களையும், பிரசன்ன ஜெயவர்தன 24 ஓட்டங்களையும் பெற்றனர். வேறு எந்த வீரரும் 20 இற்கும் அதிகமான ஓட்டங்களைப் பெற்றிருக்கவில்லை.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக மிற்சல் ஜோன்சன் 4 இலக்குகளை கைப்பற்றினார்.

இதன் பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணி, நேற்றைய நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அந்த அணி சார்பாக முதலாவது இலக்குக்காக 17.3 பந்துப் பரிமாற்றங்களில் 95 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன.

துடுப்பாட்டத்தில் ஆஸ்திரேலிய அணி சார்பாக டேவிட் வோணர் 46 பந்துகளில் 62 ஓட்டங்களைக் குவித்தார். தவிர, எட் கோவன் 36 ஓட்டங்களையும், மைக்கல் கிளார்க் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக அன்ஜலோ மத்தியூஸ், தம்மிக்க பிரசாத் இருவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். (5)

# 10,000



இலங்கை அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககார நேற்றைய தினம் சாதனையொன்றைச் சமப்படுத்தினார். வேகமான 10 ஆயிரம் ஓட்டங்களை அடைந்தவர் என்ற சாதனையையே அவர் சமப்படுத்தினார்.

ஆஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி தனது இரண்டாவது ஆட்டத்தில் மெல்போர்ண் கிரிக்கெட் மைதானத்தில் பங்குபற்றிவருகிறது. இதன்போதே சங்ககார இந்தச் சாதனையைச் சமப்படுத்தினார்.

நேற்றைய நாள் ஆட்டம் ஆரம்பிக்கும் போது 194 இன்னிங்ஸ்களில் 9960 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார, மிற்சல் ஜோன்சனின் பந்தை 4 ஓட்டங்களுக்கு அடித்து 43 ஓட்டங்களைக் கடந்தபோது 10,000 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் மூலம் சச்சின் டெண்டுல்கர், பிரைன் லாரா ஆகியோரோடு இணைந்து, 195 ஆவது இன்னிங்ஸில் 10,000 டெஸ்ட் ஓட்டங்களைப் பெற்று விரைவான 10,000 ஓட்டங்கள் என்ற சாதனையைப் படைத்தார்.

10,000 டெஸ்ட் ஓட்டங்களைக் கடக்கும் இரண்டாவது இலங்கை வீரர் குமார் சங்ககார ஆவார். ஏற்கனவே மஹேல ஜெயவர்தன 10,000 ஓட்டங்களைக் கடந்திருந்தார். அவர் 210 இன்னிங்ஸ்களில் இதனைக் கடந்திருந்தார்.

ஏற்கனவே ஒருநாள் சர்வதேசப் போட்டியிலும் 10,000 ஓட்டங்களைக் கடந்துள்ள குமார் சங்ககார, அந்த மைல் கல்லையும் அவுஸ்திரேலிய அணிக்கெதிராகவே கடந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# எனது முரண்பாடு அணியைப் பாதிக்காது



இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், தனக்கும், அணி முகாமையாளருக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு இலங்கை அணியின் பெறுபேறுகளைப் பாதிக்காது எனத் தான் நம்புவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் சபையை விமர்சித்தமைக்காக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன மீதும், மஹேல ஜெயவர்தனவிற்கு துணை புரிந்த இலங்கைக் கிரிக்கெட் அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்கவிற்கும் எதிராக விசாரணை மேற்கொள்ளப்படுமென இலங்கைக் கிரிக்கெட் சபை அண்மையில் அறிவித்திருந்தது.

இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு மஹேல அனுப்பிய இரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டதையடுத்து இலங்கைக்கிரிக்கெட் சபை மேல்தான் நம்பிக்கையிழந்து விட்டதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்திருந்தார்.

உலக 'ரி-20' தொடரில் இலங்கைக்கு பயிற்சிகளை வழங்கிய பயிற்றுவிப்பாளர் மற்றும் ஏனைய ஊழியர்கள் சிலருக்கு ஊக்குவிப்புத் தொகைகளை வழங்குமாறு இலங்கைக் கிரிக்கெட் அணியினர் விடுத்த கோரிக்கையை நிராகரித்திருந்த இலங்கைக் கிரிக்கெட் சபை, அது குறித்து ஊடகங்களுக்கு விளக்கங்களை வழங்கியிருந்தது.

உலக 'ரி-20' தொடரில் பங்குபற்றியமைக்காக இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு சர்வதேசக் கிரிக்கெட் சபைக்கு வழங்கவுள்ள தொகையின் 25 சதவீதம் இலங்கையின் 15 வீரர்களுக்கு வழங்கப்படுவது ஒப்பந்தப்படி கட்டாயமாகும்.

இருந்த போதிலும், இலங்கையின் பயிற்றுவிப்பாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஊக்குவிப்பினை வழங்குமாறு மேற்கொண்ட கோரிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்த இலங்கைக் கிரிக்கெட் சபை, இலங்கை வீரர்கள் அனைத்து பயிற்றுவிப்பாளர்களையும் அந்தக் கோரிக்கையில் இணைத்திருக்காததோடு, அதுகுறித்து ஏற்கனவே திட்டமிடல்கள் காணப்படாததால் அவர்களின் கோரிக்கையை நிராகரிப்பதாகத் தெரிவித்திருந்தது.

இந்த விடயம் இலங்கை அணியைப் பாதிக்காது எனத் தான் நம்புவதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு இந்த விடயம் விரைவில் தீர்க்கப்படுமெனத் தான் எண்ணுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரகசிய ஆவணத்தை இலங்கைக் கிரிக்கெட் சபையே ஊடகங்களுக்கு வெளியிட்டதாகத் தெரிவித்த மஹேல, இதில் தான் என்ன தவறு செய்தேன் எனப் புரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

ஏன் இரகசிய ஆவணம் வெளியிடப்பட்டது என்றே தான் வினவியதாகவும், தான் தவறு செய்யவில்லை என்பதை இலங்கைக் கிரிக்கெட் சபை புரிந்து கொண்ட பின்னர் இந்தப் பிரச்சினை விரைவில் தீர்க்கப்படுமெனத் தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

# பாகிஸ்தான் வெற்றி இந்திய ரசிகர் மரணம்

இந்திய - பாகிஸ்தான் 'ரி-20' ஆட்டத்தின்போது பாகிஸ்தான் அணி வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சமயத்தில், இந்திய ரசிகர் ஒருவர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமடைந்தார்.

ஒடிஷாவைச் சேர்ந்தவர் கமல் ஜெயின்(வயது- 47, பெங்களூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.

இவர், நேற்றுமுன்தினம் இரவு பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நடந்த இந்தியா, பாகிஸ்தான் இடையிலான முதலாவது 'ரி-20' கிரிக்கெட் ஆட்டத்தைக் கண்டு ரசித்தார்.

பரம எதிரியான பாகிஸ்தானை இந்தியா பந்தாடி வெல்லும் என்ற எதிர்பார்ப்பில் படு உற்சாகமாக ஆட்டத்தைக் கண்டு கொண்டிருந்தார்.

பாகிஸ்தான் அணி வெற்றியை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சமயத்தில் கமல் ஜெயினுக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவர் மரணமடைந்தார்.

இது குறித்து பொலிசார் கூறுகையில், பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த சமயத்தில் 18 ஆவது பந்துப் பரிமாற்றம் வீசப்பட்டிருக்கும் போது திடீரென கமல் ஜெயினுக்கு நெஞ்சு வலித்துள்ளது.

இதையடுத்து உடனடியாக அவரை அம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றோம். ஆனால் அங்கு அவர் சிகிச்சை பலனளிக்காமல் இறந்து போனார் என்றனர். (5)

# முதல் வெற்றி

இந்திய, பாகிஸ்தான் அணிகள் நேற்று முன்தினம் மோதிய ஆட்டத்திலிருந்து சில துளிகள்...

அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி, 'ரி-20' அரங்கில் இந்தியாவுக்கு எதிராக முதல் வெற்றியை பதிவு செய்தது. இதுவரை இவ்விரு அணிகள் 4 போட்டியில் மோதின. இதில், இந்தியா 3, பாகிஸ்தான் ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றன.

**புவனேஷ் அபாரம்**

இளம் இந்திய வேகப்பந்துவீச்சாளர் புவனேஷ்வர் குமார் (வயது -22), அறிமுக வீரராக களமிறங்கினார். உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் 1990 இல் பிறந்த இவர், பாகிஸ்தான் அணியை திணறடித்தார். வேகத்தில் மிரட்டிய இவர், 4 பந்துப் பரிமாற்றங்களில் 9 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 3 இலக்குகள் கைப்பற்றினார். இதன்மூலம் அறிமுக ஆட்டத்தில் சிறந்த பந்துவீச்சை பதிவு செய்து முத்திரை பதித்தார்.

**இஷாந்த்-கம்ரான் மோதல்**

18 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசிய இஷாந்த் சர்மா, முதல் பந்தில் ஹபீசை ஆட்டமிழக்கச் செய்தார். பின்னர் 4 ஆவது பந்தை மலிக் தூக்கி அடிக்க, அதனை ஜடேஜா அருமையாகப் பிடியெடுத்தார். இந்தப் பந்து குறித்து மலிக் சந்தேகம் கிளப்ப, 3 ஆவது நடுவரிடம் கேட்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக அது, குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் வீசப்பட்ட முறையற்ற பந்து வீச்சு என்று அறிவிக்கப்பட, மலிக் (47) கண்டம் தப்பினார். கடைசி இரண்டு பந்தை எதிர்கொண்ட கம்ரான் அக்மல், அதனை அடிக்க முடியாமல் திணறினார்.

முறையற்ற பந்து வீச்சு அதிர்ச்சியில் இருந்து மீளாத இஷாந்த், கம்ரான் அக்மலுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். உடனடியாக சகவீரர்கள் மற்றும் நடுவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தினர். பின்னர், 19 ஆவது பந்துப் பரிமாற்றத்தில் டிண்டா வீசிய பந்தை கம்ரான் அக்மல் தூக்கி அடிக்க, அதனை இஷாந்த் பிடியெடுத்து, ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினார்.

**சிகாகோ ரசிகர் வருத்தம்**


இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் ஆட்டத்தைக் காண, சிகாகோவில் இருந்து வந்துள்ளார் பாகிஸ்தான் ரசிகர் முகமது பஷிர். இரு அணிகள் நிறத்துடன் கூடிய 'ஜெர்சி' மற்றும் கொடியை மைதானத்துக்குள் கொண்டு செல்ல இவருக்கு பொலிசார் அனுமதி மறுத்தனர்.

இதனால் ஏமாற்றம் அடைந்த பஷிர் கூறுகையில், பொலிசாரின் நடவடிக்கை மிகவும் ஏமாற்றம் அளித்தது. பாகிஸ்தான் அரசு அதிகாரிகள் பலர் ஆட்டத்தைப் பார்க்க வந்தனர். தேசியக் கொடியுடன் வரும் அவர்களைத் தடுக்க வேண்டியது தானே, என்றார்.

**ஏமாற்றம் அளித்த டோனி**

இந்திய அணித் தலைவர் டோனியின் உத்திகள் ஏமாற்றம் அளித்தன. பிரதான சுழற்பந்துவீச்சாளர்கள் ஒருவரைக் கூட தேர்வு செய்யவில்லை. தவிர, புவனேஷ் குமார் 2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகள் வீழ்த்திய நிலையில், அவருக்கு ஓய்வு கொடுத்திருக்கலாம். ஆனால், தொடர்ந்து நான்கு பந்துப் பரிமாற்றங்களையும் வீசச் செய்தார். இதனால் கடைசி நேரத்தில் இவரை பயன்படுத்த முடியாமல் போனது.

இதே போல ரவிந்திர ஜடேஜாவின் முந்தைய பந்துப் பரிமாற்றத்தில் மலிக், ஹபீஸ் தலா ஒரு சிக்சர் அடித்தனர். மலிக் களத்தில் இருந்த நிலையில், ஜடேஜாவிடம் கடைசி பந்துப் பரிமாற்றத்தை வீசச் சொன்னது வியப்பாக இருந்தது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திய மலிக் மீண்டும் ஒரு சிக்சர் அடித்து அணிக்கு வெற்றியைத் தேடி கொடுத்தார். (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவை வெற்றிகொண்டமை முழு நாட்டுக்கான பரிசு

இந்திய அணிக்கெதிராக அந்த அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்திப் பெற்றுக் கொண்ட வெற்றி - முழு நாட்டுக்குமான பரிசு என்று பாகிஸ்தான் அணியின் தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் இடம்பெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 5 இலக்குகளால் வெற்றிபெற்றிருந்தது. இந்தத் தொடரின் ஆரம்பத்தில் சிறப்பான ஆரம்பத்தைப் பெற விரும்பியதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், தங்களது அணியின் பந்துவீச்சுச் சிறப்பானது என்பதை அறிவோம் எனவும், பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டு இந்திய அணியைக் கட்டுப்படுத்தியதாகத் தெரிவித்தார். பாகிஸ்தான் அணி சார்பாக 7 அடி, ஓர் அங்குலம் உயரமான மொஹமட் இர்பான் தனது 'ரி-20' சர்வதேசப் போட்டி அறிமுகத்தை மேற்கொண்டிருந்த நிலையில், அவர் இந்திய அணிக்கு அழுத்தத்தை வழங்கியதாகத் தெரிவித்த மொஹமட் ஹபீஸ், உமர் குல்லும் சிறப்பாகப் பந்துவீசியதாகத் தெரிவித்தார். (5)



1. மழலைகளுக்கான ஆண், பெண்களுக்கான உடைகள் தரமான விலையில்
2. மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் 10% தொடக்கம் 30% விலைக்கழிவு கொடுக்கப்படும். January -05 வரைக்கும்
3. பாடசாலைப் பயிற்சிப் புத்தகங்கள் கையிருப்பு உள்ளவரை

தொ.இல.: 0750519482 முந்துங்கள்....!
267, Brown Road, Jaffna.

NEW SCIENCE HALL JAFFNA
2015 A/L
கணித, உயிரியல் பிரிவு
- PHYSICS: திரு.S.சோதிலிங்கம், திரு.R. குமரன், திரு.R. குகன்
- CHEMISTRY: திரு.K. சிவத்திரன், திரு.S. [illegible]யஸ், திரு.M. மகேஸ்வரன்
- BIOLOGY: திரு.T. தம்பிராஜா, திரு.T. கெங்காதரன், பழமையான ஆசிரியர் திரு.M.M. அல்போன்ஸ்
- COM. MATHS: திரு.S. செந்தில்ராஜ், திரு.S. செந்தில்நாதன், திரு.A. குணசிங்கம்

(C-5092)(14)
ஆரம்பம் 28.12.2012 வெள்ளி காலை 9.00 மணி

விடுதலைப் பெருவிழா
வாருங்கள்...... இலவசம்.....!
கவலை, கண்ணீர்,
தீராத வியாதி,
பிசாசின் பிடி,
பில்லி - சூனியக்கட்டு,
பாவங்கள்,
பரம்பரை சாபங்கள்,
அடிமைத்தனம்
ஆகியவற்றிலிருந்து
இயேசு விடுதலை கொடுக்கிறார் !!!
இடம்: யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை மைதானம் (யாழ். வலயக் கல்வி அலுவலகம்) செம்மணி வீதி, நல்லூர்.
காலம் : 27,28,29 மார்கழி 2012
நேரம் : தினமும் மாலை 4.00மணி
"வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)
இலங்கை நாற்சதுர சுவிசேஷ சபை,
673, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர்.

புதிய முகவரி
ஹரன் ஜுவல்லர்ஸ்
நகை - வைர வியாபாரிகள்
இல: 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2226083, 0714182480

COLLEGE OF CHEMISTRY
Palam Road, Kantharmadam
PHYSICS
A/L 2015 ஆரம்பம்
28.12.2012-7.00a.m
(27214)
N. KAPILAN B.Sc

மலேசியா, நியூசிலாந்து, கனடா, அமெரிக்கா, பிலாறஸ், லிதுவேனியா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், சைப்பிரஸ், சிங்கப்பூர்
படிக்க, உழைக்க, குடும்பத்துடன் செல்ல விசா ஆலோசனைகள் புதுவருடத்தை முன்னிட்டு இன்றிலிருந்து 27.12.2012 - 01.01.2013 வரை பாதிக்கட்டணத்தில் வழங்கப்படும்
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறைவீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு, பொது விடுமுறை நாள்களிலும்) திறந்திருக்கும்

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.
A/L 2015
ஆரம்பம் : 28.12.2012 வெள்ளி காலை 8.00
PHYSICS: செல்வன், செந்தில்
BIOLOGY: பொன்திவாகரன், குகானந்தன்
CHEMISTRY: BENO, அன்பு, சிவகுமார்
C.MATHS: சிவகரன்
தமிழ், ஆங்கில மொழி மூல தனியான வகுப்புகள்

NORTH LANKA IIT
#113, LUXAN PLAZA, NAVALAR ROAD, JAFFNA
PHONE: 0215677774
புதுவருடத்தினை முன்னிட்டு விசேட சலுகைக் கட்டணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!
பட்டதாரியாகும் உங்கள் எண்ணத்தினை நிறைவேற்ற அரிய சந்தர்ப்பம்!
Courses:
B.Sc. in Computer Science
B.Com. with Computer Application
PG Diploma in Computer Application
M. Sc, in Computer Application
MBA -- DBA
HNDIT
HNDA தகமையுடையவர்களுக்கான
HNDM பட்டப்படிப்பு
Duration: 6 -9 Months
விசேட பிரிவு ஆரம்பம்!
30-12-2012
UGC APPROVED DEGREE CERTIFICATES
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரமுடைய வெளிநாட்டுப் பல்கலைக்கழக சான்றிதழ்கள்!
UNIVERSITY GRANTS COMMISSION
BUSINESS UNIVERSITY OF COSTA RICA -COSTA RICA
அனைவருக்கும் இனிய, புது வருட நல்வாழ்த்துக்கள்!!

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
2013 புதுவருடத்தை முன்னிட்டு
விசேட கட்டணக் கழிவில் சர்வதேசத் தரங் கொண்ட கற்கை நெறிகள்
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள்: Batch I : 07-01-2013, Batch II : 12-01-2013, Batch III : 14-01-2013, Batch IV : 19-01-2013
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya.
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.